விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது

Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 11 திங்கட்கிழமை (27.08.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 252

ரா ம் கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

RAMCO

# மனித உரிமை செயற்பாட்டாளர்கள் இலங்கையில் அடக்கப்படுகின்றனர்!

## நவநீதம்பிள்ளை குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கையில் மனிதவுரிமை செயற்பாட்டாளர்கள் மற்றும் ஆர்வலர்கள் தொடர்ந்தும் அடக்கு முறைகளுக்கு உள்ளாக்கப்பட்டு வருவதாக ஐ.நா. மனித வுரிமைகள் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை குற்றம்சாட்டியுள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)



## காங்கேசன்துறையில் 52 பேர் கைது

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவிற்கு சட்ட விரோதமான முறையில் படகு மூலம் செல்ல முனைந்த 76 பேர் கடற்படையினரால் கைது செய்யப் பட்டுள்ளனர்.

காங்கேசன்துறையிலிருந்து 52 பேரும், திருகோணமலை கடற் பகுதியில் இருந்து 24 பேரும் இதன் போது கைது செய்யப்பட்டதாக கடற் (20ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்குத் தேர்தலுக்கு 28 அங்குல வாக்குச் சீட்டு

(கொழும்பு)

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் அதிகளவிலான அரசியல் கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களும் போட்டியிடு வதால் மிக நீளமான வாக்குச் சீட்டுக் கள் அச்சிடப்பட்டுள்ளதாக தெரிவிக் கப்பட்டுள்ளது.

எதிர்வரும் செப்ரம்பர் மாதம் 8 ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்த லில் வாக்காளர்கள் வாக்களிப்பதற் கான வாக்குச் சீட்டுக்கள் அச்சிடும் பணி (20ஆம் பக்கம் பார்க்க)

## எம்.பிக்களின் எண்ணிக்கை வன்னியில் குறைப்பு

(வன்னி)

வன்னித் தேர்தல் மாவட்டத் திலிருந்து தெரிவு செய்யப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை ஒன்றினால் குறைக் கப்பட்டுள்ள அதேவேளை மொன ராகலை மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்படும் நாடாளுமன்ற உறுப் பினர்களின் எண்ணிக்கை ஒன்றி னால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணையாளரினால் மேற்கொள்ளப்பட்ட புதிய மீளாய்வுக்கு இணங்க (20ஆம் பக்கம் பார்க்க)

## சென்னையில் வான் விபத்து இலங்கையர்கள் காயம்

(சென்னை)

இலங்கையிலிருந்து இந்தியா விற்கு சுற்றுலா சென்றிருந்த 13 பேர் விபத்துக்குள்ளாகி காயமடைந் துள்ளனர். இவர்கள் யாழ்ப்பாணத் தைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக் கப்பட்டது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஜோன் (வயது 28), மட்டக்களப்பு பகுதியைச்சேர்ந்த குமுதா (வயது 45), நேசலட்சுமி (வயது 43) மற்றும் அமெரிக்கா, பிரான்ஸ், லண்டன் ஆகிய பகுதிகளில் வசிக்கும் இவர் களின் உறவினர்களான அன்ரனி இருதயராஜ் (வயது 32), அஞ்சலின் (வயது 22), அகிலன் (வயது 20), அருள்தாஸ் (வயது 32), அரசன் (வயது 03) உட்பட 17 பேர் சுற்றுலா வாக தமிழகத்தைச் சுற்றிப்பார்க்க கடந்த (20ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் இன விடுதலைக்காக ஜனநாயக வழியில் போராட்டம்

### சிறிதரன் எம்.பி. தெரிவிப்பு



(மட்டக்களப்பு)

தாயக மண்ணில் எங்கள் இன விடுதலைக்காக ஜனநாயக வழியில் போராடிக்கொண்டிருக்கின்றோம். அந்தப் போராட்டத்தின் ஒரு வடிவமாக இந்தத் தேர்தலை நாங்கள் சந்திக்கின்றோம்.

இந்த தேர்தலின் மூலம் தமிழர்கள் ஓரணியாக இணைந்திருக்கின்றார்கள் என்ற செய்தியை உலகிற்கு எங்களால் சொல்ல முடியும் (20ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சுப் பதவியிலிருந்து ஹக்கீம் விலகக்கூடாது

### பஷீர் சேகுதாவுத் தெரிவிப்பு



(கொழும்பு)

நான் பிரதி அமைச்சர் பதவியை ராஜினாமா செய்தேன் என்பதற்காக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தனது அமைச்சுப் பதவியை ராஜினாமா செய்ய வேண்டிய அவசியம் இல்லை என சிறிலங்கா முஸ்லிம் காங்கிர ஸின் தவிசாளரும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரு மான பஷீர் சேகுதாவூத் தெரிவித்தார்.

காத்தான்குடியில் நேற்று முன் தினம் சனிக்கிழமை மாலை நடை பெற்ற சிறிலங்கா முஸ்லிம் காங்கிர ஸின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தின் போதே அவர் மேற்கண்டவாறு கூறி னார்.

சிறி (20ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி பேசவிருந்த மேடை உடைந்தது!

(அம்பாறை)

அம்பாறை சென்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உரையாற்று வதற்காக அமைக்கப்பட்டிருந்த மேடை நேற்று முற்றாக உடைந்து வீழ்ந் துள்ளது.

அம்பாறையில் இடம்பெற்ற இச் சம்பவத்தினால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. கிழக்கு மாகாண சபைத் தேர்தலை யொட்டி அம்பாறையில் தேர்தல் பிரசாரக் கூட்ட மொன்றில் மகிந்த ராஜபக்ஷ உரையாற்ற விருந்தார்.

அதற்காக அலங்காரங்களுடன் மேடை ஒன்றும் அமைக்கப்பட்டிருந் தது. இந்த மேடையே நேற்று காலை யில் திடீரென உடைந்து விழுந் துள்ளது.

இதனையடுத்து குறித்த மேடை யிலிருந்து சுமார் 300 மீற்றர் சுற்று வட்டத்துக்கு இராணுவத்தினரும் பொலிஸாரும் சுற்றி வளைத்து நின்றனர்.

இதே (20ஆம் பக்கம் பார்க்க)

## கிறிஸ்மஸ் தீவிலுள்ள அகதிகள் உண்ணாவிரதப் போராட்டம்

(நவ்றூ)

நவ்றூ தீவிலுள்ள அவுஸ்திரேலி யாவின் தடுப்பு முகாமை மீண்டும் திறக்க அண்மையில் அனுமதி வழங்கப்பட்டது. அவுஸ்திரேலியா வின் வடமேற்கே கிறிஸ்மஸ் தீவில் உள்ள தடுப்பு முகாமொன்றிலுள்ள தஞ்சக் கோரிக்கையாளர்கள் பலர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடு பட்டுள்ளனர்.

தாம் அகதிகளாக ஏற்றுக்கொள் ளப்பட முன்னதாக தமது கோரிக் கையை பரிசீலிப்பதற்காக பசுபிக் தீவான நவ்றூக்கு தம்மை அனுப்பி வைக்கும் அவுஸ்திரேலிய அரசின் நடவடிக்கைக்கு எதிராகவே அவர் கள் இந்தப் போராட்டத்தை மேற் கொண்டுள்ளனர்.

தமது கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படாமல் பல ஆண்டு களுக்கு நவ்றூ தீவிலேயே தங்கிவிட நேரிடும் என்று அஞ்சுவதாக தஞ் சக் கோரிக்கையாளர் ஒருவர் கூறி னார். (20ஆம் பக்கம் பார்க்க)

## கோபுரத்தில் ஏறி இளைஞன் ஆர்ப்பாட்டம்

(புத்தளம்)

20 அடி உயரமான தொலைத் தொடர்பு கோபுரம் ஒன்றின் உச்சி யில் ஏறி நின்று இளைஞன் ஒருவர் ஆர்ப்பாட்டம் செய்த சம்பவம் ஒன்று நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை புத்தளம் ஆனமடுவ பிர தேசத்தில் இடம்பெற்றது.

கொள்ளைச் சம்பவம் ஒன்றுடன் தொடர் புடையவர் என பொலிஸார் தன்னைக் கைது செய்து விட்டதாகவும் பொலிஸாரின் இந் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலேயே தான் (20ஆம் பக்கம் பார்க்க)

## சீமான் பொலிஸாரால் கைது

(சென்னை)

பூந்தமல்லி மற்றும் செங்கல் பட்டு சிறப்பு அகதிகள் முகாம்களை இழுத்து மூடும் மறியல் போராட்டத் தில் ஈடுபட்ட நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான் கைது செய்யப்பட் டார்.

குமணன் சாவடி பேருந்து நிறுத் தம் அருகே நடந்த இந்தப்போராட்டத் தில் திருவள்ளூர் மாவட்ட செயலாளர் சுந்தரமூர்த்து உட்பட 300 மேற் பட்டோர் கலந்து கொண்டனர்.

பின்னர் கரையான் சாவடி அகதிகள் முகாமை முற்றுகையிட சீமான் தலைமையில் தொண்டர் கள் புறப்பட்டுச் சென்றனர். அவர் களை பொலிஸ் துணை ஆணை யாளர்கள் மகேஸ்குமார் பிரேம் ஆனந்த் சின்கா ஆகியோர் கைது செய்தனர். அவர்களை வாகனங்களில் ஏற்றி திருமண மண்டபங்களுக்கு கொண்டு சென்றனர்.

மறியல் போராட்டம் நடந்த குமணன் சாவடி பஸ் நிறுத்தம் அருகே 100க் கும் மேற்பட்ட பொலிஸார் குவிக் கப்பட்டு அங்கு தடுப்பு வேலி அமைக் கப்பட்டிருந்தது. மேலும் கரையான் சாடி அகதிகள் சிறப்பு முகாமிலும் பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப் பட்டுள்ளது. (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

### இந்தியாவின் கோரிக்கை புறக்கணிப்பு

# சீன அரசின் நிதியுதவியுடன் வடக்கில் இராணுவ வீடமைப்பு

(கொழும்பு)

இந்தியாவின் கோரிக்கையையும் புறக்கணித்து சீனா இலங்கையின் வடக்கு, கிழக்கில் இராணுவத்தினருக்கான வீடமைப்பு திட்டங்களை மேற்கொள்ளவுள்ளது. இதன் பொருட்டு சீனா இலங்கைக்கு 13.2 பில்லியன் ரூபாய்களை வழங்கவுள்ளது.

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம், பொருளாதாரம் மற்றும் இராணுவ ஒத்துழைப்புக்களை மேம்படுத்தவே இந்த உதவி வழங்கப்படுவதாக இலங்கையின் பாதுகாப்புத் தரப்புக்கள் தெரிவித்துள்ளன.

வடக்கு, கிழக்கில் இராணுவத்தினருக்காக அமைக்கப்படும் வீடமைப்புக்கள் மற்றும் இராணுவ முகாம்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்தல் திட்டங்கள் என்பன இலங்கையின் தேசிய பாதுகாப்பை கருத்திற் கொண்டு மேற்கொள்ளப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவும் மேற்கத்தேய நாடுகளும் வடக்கு, கிழக்கில் இராணுவப் பிரசன்னம் குறைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி வரும் நிலையிலேயே சீனாவின் புதிய திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவின் இந்தத் திட்டங்கள் மன்னார், பலாலி, ஆனையிறவு, பூநகரி, தள்ளாடி, காரைநகர் மற்றும் முல்லைத்தீவு ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்படவுள்ளன.

சீனாவின் பலம் மிக்க பாதுகாப்பு அமைச்சர் லியாங் கௌங்லி எதிர்வரும் 29 ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ள நிலையிலேயே இந்த உதவி குறித்த தகவல் வெளியாகியுள்ளது.

இதற்கிடையில் அண்மையில் இலங்கை அரசாங்கம், சீனாவிடமிருந்து எம்.ஏ. 60 ரக விமானங்களை 13.8 பில்லியன் ரூபாய்கள் பெறுமதியில் கொள்வனவு செய்யும் உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டது தொடர்பாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

இதேவேளை சீனாவின் அதிகாரம்மிக்க குழுவொன்று எதிர்வரும் மாதத்தில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளது.

சீனாவின் மக்கள் காங்கிரஸின் உதவித் தலைவர் யூ பெங்கோ 96 உறுப்பினர்கள் கொண்ட குழுவுக்கு தலைமை தாங்கி இலங்கைக்கு வரவுள்ளார்.

செப்ரெம்பர் 15-ம் திகதியன்று இலங்கை வரும் இந்தக் குழுவினர் வடக்கு, கிழக்கு உட்பட்ட பகுதிகளுக்கு விஜயம் செய்ய வுள்ளனர்.

இது இவ்வாறு இருக்க சீனாவின் நிதி உதவியின் கீழ் அமைக்கப்பட்டு பல தடவைகளாக பழுதடைந்த நுரைச்சோலை அனல் மின்சார நிலையத்தின் பணிகள் விரைவில் தொடங்கப்படும் என்று பழுதுபார்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள சீனாவின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பெரும்பாலும் சீனாவின் பாதுகாப்பு அமைச்சர் இலங்கைக்கு வரமுன்னர் இந்த மின்சார நிலையப் பணிகள் மீண்டும் தொடங்கப்பட்டு விடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (எ-8,2)

## மருத்துவ பீடமும் மூடப்படும்?

(கொழும்பு)

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீட விரிவுரையாளர்கள் பணிப் பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபடுவதற்கு தீர்மானித்துள்ளனர்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களால் மேற்கொள்ளப்படும் பணிப் பகிஷ்கரிப்பு நடவடிக்கைக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் தாமும் பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீட விரிவுரையாளர்கள் இன்று இது குறித்து ஒன்றிணைந்து கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அனைத்து பல்கலைக்கழக விரிவுரையாளர்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ள பணிப் பகிஷ்கரிப்பு ஒரு மாதம் கடந்த நிலையிலும் தொடருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-8)

# இறுதி யுத்தம் நடைபெற்றபோது யாழ். தலைவர்கள் மௌனித்திருந்தனர்

### குற்றஞ் சாட்டுகிறார் சந்திரகாந்தன்



(மட்டக்களப்பு)

முள்ளிவாய்காலில் இறுதி யுத்தம் நடந்தபோது– எமது உறவுகள் துடிதுடித்து மடிந்தபோது– யாழ்பாணத் தலைவர்கள் கூட்டம் ஆளுக்கொரு திசையாக அறிக்கைகளை மட்டும் ஊடகங்களுக்கு தெரிவித்த வண்ணம் செயல் வடிவில் எதையும் வெளிக்காட்டா வண்ணம் மௌனித்திருந்தது என கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் குற்றம் சாட்டினார்.

மகிழடித்தீவு கண்ணகை அம்மன் ஆலய முன்றலில் நடைபெற்ற அரசியல் பிரசாரக் கூட்டத்தின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் வேட்பாளர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

அரசினை எதிர்த்து அரசியல் செய்யும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் யாரும் இலங்கை பாராளுமன்ற உறுப்புரிமை என்ற அந்தஸ்தினை இராஜினாமாச் செய்யவுமில்லை– பாராளுமன்றத்தினை விட்டு வெளியேறி எம் மக்களுக்கு நியாயம் வேண்டும் எனக் கூறி எந்த ஓர் ஆர்ப்பாட்டத்தினையும் நடத்தவில்லை.

அவர்கள் வாய்திறக்காமல் எல்லாம் முடியும் வரை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். அத்தனை உறவுகளும் மடிந்த பின்னர் இன்று என்ன கூறுகிறார்கள்?

அவர்கள் தங்களது பிள்ளைகளை எங்கே அனுப்பி வைக்கிறார்கள்? றோயல் கல்லூரி, ஆனந்தாக் கல்லூரி, நாலந்தாக் கல்லூரி இன்னும் பிரபல்யம் பெற்ற கல்வித் தரம் வாய்ந்த, வசதி மிக்க பல்வேறுபட்ட சிறப்பான பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கிறார்கள். அதன் பின்னர் என்ன செய்வார்கள்? கற்றுத் தேர்ந்த தமது பிள்ளைகளை உயர் கல்விக்காக லண்டன், கனடா, ஜேர்மனி என்று மேலத்தேய நாடுகளுக்கு அனுப்புவார்கள். பின்னர் துறைசார் நிபுணர்களாக விளங்கும் அவர்களது பிள்ளைகள் வெளிநாடுகளில் சிங்களவர்களையோ அல்லது மேலைநாட்டவர்களையோ திருமணம் செய்து கொண்டு சந்தோஷமாய்க் காலம் கழிப்பார்கள்.

இங்கு துப்பாக்கிக் குண்டுபட்டு மடிவது யார்? இங்கு பாடசாலைக் கல்வியினை கைவிட்டு கல்வி கற்க வழியின்றி ஏங்கித் தவிப்பவர்கள் யார்? தாய், தந்தையர்களை இழந்து அநாதைகளாவது யார்? யுத்தத்தில் கணவனை இழந்து விதவைகளாவது யார்? நன்றாகச் சிந்தித்துப் பாருங்கள்.

கூட்டமைப்பினரின் பிள்ளைகளுக்கு சுக வாழ்வு. உங்கள் பிள்ளைகளுக்கு சுடுகாடு. இ[illegible] தான் சமத்துவமும் எமது சமூக நீதியும். இந்த நியாயமும் நீதியும் உங்களால் ஏற்றுக் கொள்ளக் கூடியவைகளாக இருக்கின்றதா? இவற்றை நியாயம் என்று ஏற்றுக் கொள்ள முடியுமென்றால் கூட்டமைப்பினருக்கு வாக்களியுங்கள் என்றும் முதலமைச்சர் வேட்பாளர் சி.சந்திரகாந்தன் தெரிவித்தார். (எ-8)

## முன்னேஸ்வரம் காளியம்மன் ஆலய பிரதம குருவுக்கு மேர்வின் அச்சுறுத்தல்

(கொழும்பு)

அமைச்சர் மேர்வின் சில்வாவினால் தமக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக முன்னேஸ்வரம் ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயத்தின் பிரதான குரு காளிமுத்து சிவபாதசுந்தரம் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகமொன்றிற்கு தொலைபேசி மூலம் வழங்கிய உரையாடலின்போது மேற்படி ஆலய குருக்கள் இதனைத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் முதலாம் திகதி பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் மிருகபலி பூஜை இடம் பெறவுள்ளது. இதனை நடத்த வேண்டாம் என வலியுறுத்தியே அமைச்சர் மேர்வின் சில்வா இந்த அச்சுறுத்தலை விடுத்திருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேர்வின் சில்வா பதிலளிக்கையில்,

தாம் யாருக்கும் அச்சுறுத்தல் விடுக்கவில்லை எனவும், அவர் ஒன்றும் சண்டியர் இல்லை எனவும், தாம் குருமார்களுக்கு ஆதரவானவர் எனவும் அவர் தெரிவித்தார். எந்த நிலையிலும் இந்த மிருகபலி பூஜையை நடத்தவிடப் போவதில்லை என்றும் தெரிவித்தார்.

அத்துடன் இந்த பூஜைகளில் பணத்தை விரயம் செய்ய வேண்டாம் என்று பொது மக்களிடம் தாம் ஏற்கெனவே கோரி இருப்பதாகவும் கடந்த தடவையைப் போலவே இந்த முறையும் இந்த பூஜையை நடத்த அனுமதிக்கப் போவதில்லை எனவும் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், இந்தப் பூஜையை நடத்துவதற்கு நீதிமன்றமும் அனுமதி வழங்கி இருப்பதாகவும் முன்னேஸ்வரம் ஸ்ரீ பத்திர காளி அம்மன் ஆலயத்தின் பிரதம குரு காளிமுத்து சிவபாதசுந்தரம் சுட்டிக் காட்டியுள்ளார். (எ-8)

## பொதுக் கூட்டம்

(வட்டுக்கோட்டை)

வட்டு தென்மேற்கு கிராம அபிவிருத்திச் சங்க வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் 9ஆம் திகதி வட்டு மூன்றாம் பனை ஐக்கிய நாணய சங்க மண்டபத்தில் தலைவர் சோ. மகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் சிறப்பு விருந்தினராக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் அ. கோகிலன் வட்டு தென்.மேற்கு கிராம உத்தியோகத்தர் கே. விஜயவேல் ஆகியோர் கலந்து சிறப்பிப்பார்கள். (எ-8)

**தவறிவிட்டது**

கோபாலசாமி சற்குணபாலன் ஆகிய நான் வல்வெட்டித்துறையிலிருந்து 23.08.2012 இல் உடுப்பிட்டி நெல்லியடி ஊடாக கொடிகாமம் வரும் வழியில் எனது அடையாள அட்டைகளுடன் கூடிய மணிப் பேர்ஸை தவறவிட்டுவிட்டேன். கண்டு எடுத்தவர்கள் 0773249078 எனும் தொலைபேசிக்கு உடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (282)

**தனுஸ் வேக்ஸ்சொப் அன் சேவிஸ் சென்ரர்**

மோட்டார் சைக்கிள் திருத்தம், வயறிங், பெயின்ரிங் வேலைகளும் ஆட்டோ, மோட்டார் சைக்கிள் சேவிசும்

95, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

தொ.பேசி.இல.: 021 4914625, 077 4191251, 077 2090482, 077 7293312

உரிமையாளர்: உதயகுமார் திலீபன் (அண்ணாமலை)

ஞாயிற்றுக்கிழமையும் திறக்கப்படும் (29)

## புத்தர் சிலைகளுக்கு முன்பாக புகைப்படம் எடுக்க வேண்டாம்

### பிரித்தானியா ஆலோசனை

இலங்கைக்கு சுற்றுலா செல்லும் பிரித்தானியர்கள் புத்தர் சிலைகளுக்கு முன்னால் ஒளிப்படம் எடுக்க வேண்டாம் என்று பிரித்தானிய அரசாங்கம் ஆலோசனைக் குறிப்பொன்றை வெளியிட்டுள்ளது.

பிரித்தானிய வெளிவிவகாரப் பணியகம் இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளும் பிரித்தானியக் குடிமக்களுக்காக நேற்று முன்தினம் விடுத்துள்ள பயண ஆலோசனை அறிவிப்பிலேயே இவ்வாறு கூறியுள்ளது.

எனினும் ஏற்கெனவே கடந்த வாரம் வெளியிட்ட ஆலோசனை அறிவிப்பில் கூறப்பட்டிருந்த தேசியவாத எழுச்சி, பாலியல் குற்றச் செயல்கள் குறித்த எச்சரிக்கை அறிவிப்புக்கள் ஏதும் விலக்கிக் கொள்ளப்படவில்லை.

புத்தர் சிலைக்கு முத்தம் கொடுத்தபடி ஒளிப்படம் எடுத்த 3 பிரெஞ்சுச் சுற்றுலாப் பயணிகளுக்கு காலி நீதிமன்றம் ஒத்தி வைக்கப்பட்ட 6 மாத கடூழியச் சிறைத் தண்டனை விதித்த நிலையிலேயே பிரித்தானியா இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது. (எ-8)

**வீடு விற்பனைக்கு**

சுண்டுக்குளி பகுதியில் இரண்டு பரப்பு காணியில் அமைந்த வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-

0776181216 (265)

## கால்வாயிலிருந்து சடலம் மீட்பு

கடவத்தை, கோனஹென பகுதியிலுள்ள ஆடைத்தொழிற்சாலை ஒன்றுக்கு அருகிலுள்ள கால்வாய் ஒன்றிலிருந்து நேற்று முன்தினமிரவு சடலமொன்று மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மாலை 6.50 மணியளவில் இச்சடலத்தைக் கண்ட ஒரு குழுவினர் இது குறித்து கடவத்தை பொலிஸாருக்கு அறிவித்தனர். 5-6 வாரங்களுக்கு முன்னர் இறந்த ஒருவரின் சடலமாக இது இருக்கலாம் என பொலிஸார் நம்புகின்றனர்.

இப்பகுதியில் முதநாயக்காகே ஆரிய தாஸ (வயது 52) என்பவர் காணாமல்போனதாகவும் அவரின் சடலமாக இது இருக்கலாம் எனவும் பொலிஸார் கருதுகின்றனர். (எ-8)

**'EASY ENGLISH'**

(Levels : One / Two / Three)

வகுப்பு : 31.08.2012 / Phone : 773 212 711 (625)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று ஒரு தகவல்

### யாருக்குத் தேவை...?

ஒரு ஊரிலே பிச்சைக்காரன் இருந்தான். எப்போதும் கையிலே ஒரு திருவோடு வைத்திருப்பான். வீடு வீடாகப் போய் பிச்சை கேட்பான். போடுவார்கள், சாப்பிட்டு துயில் கொள்வான். இப்படியாக அவன் வாழ்க்கை ஓடிக்கொண்டிருந்தது.

ஒருநாள் வழக்கம்போல அவன் திருவோட்டைக்கையிலே ஏந்திக் கொண்டு தெருவோரமாகப் போய்க்கொண்டிருந்தான்.

அவ்வேளையில் திருவோட்டில் "டொங்" என்று ஒரு சத்தம் கேட்டது.

என்ன என்று பார்த்தான்... யாரோ ஒரு ரூபாய் நாணயத்தைப் போட்டு விட்டார்கள். அதைத் தனியாக எடுத்து துணியிலே முடிந்து வைத்துவிட்டான். அன்றைய தினம் சில வீடுகளிலே அவனுக்குத் தேவையான உணவு கிடைத்தது.

அதை எடுத்துக்கொண்டு... வழக்கமாகத் தங்கும் மண்டபத்திற்குப் போனான்.

அவனை மாதிரி உள்ள மற்றைய எல்லோருமே அங்கேதான் தங்குவது வழக்கம். எல்லோரும் படுத்துத்தூங்கி விட்டார்கள். இவனுக்கு மட்டும் தூக்கம் வரவில்லை. அந்த ஒரு ரூபாய் நாணயத்தை கையிலே வைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான். அதைப்புரட்டி புரட்டிப் பார்க்கிறான். சற்று நேரம் சென்றபின் அருகில் படுத்துறங்குபவனை எழுப்பினான். நடந்தவற்றைச் சொன்னான்.

இவன் கூறியதைக் கேட்டுவிட்டு அவன் சொன்னான்... "இதோ பார்... நமக்கு உணவும் உடையும்தான் தேவை... அது இரண்டும் தான் நமக்குச் சுலபமாக கிடைத்து விடுகிறது. அதனாலே அதைத் தவிர ஏனையவை எல்லாமே நமக்குச் சுமைதான்.

இந்த நாணயம் நமக்கு வேண்டாத ஒன்றுதான். இருந்தாலும் இது யாருக்கு அதிகமாக தேவைப்படுகிறதோ... அவர்களுக்குக் கொடுத்துவிடு..." என்று ஒரு யோசனையைச் சொல்லிவிட்டு அவன் படுத்துத் தூங்கி விட்டான். ஆனால், இவனுக்கோ தூக்கம் வரவில்லை.

அவன் தொடர்ந்தும் நித்திரையின்றி உட்கார்ந்திருந்தான். இதை யாருக்குக் கொடுப்பது என்று யோசனை செய்து கொண்டு இருந்தான்.

விடிய ஆரம்பித்துவிட்டது. அந்த சமயத்திலேதான் லேசான தூக்கம் அவனை ஆட்கொண்டது. அப்போது போர் முரசு ஒலிக்கிற சத்தம் கேட்கிறது. எல்லோரும் விழித்து எழுந்து போய்க் கொண்டிருந்தார்கள். இவன் மட்டும் தூங்கிக் கொண்டு இருந்தான். மிகவும் அண்மை யாக போர் முரசு ஒலி கேட்கும் சத்தம் கேட்கும் சமயத்தில் அவன் விழித்துக்கொள்கிறான். அவசரமாக எழுந்து கொள்கிறான்.

தூரத்திலே ராஜா தேரில் வந்து கொண்டிருந்தார். அவனது கையில் காசு அப்படியே இருந்தது... பின்னால் வரிசையாகப் போர் வீரர்கள்.

இவர்களது போருக்கான காரணம் என்ன என்பதை யோசித்துப் பார்த்தான்.

உடனே தேர் நெருங்கியது. இந்தப் பிச்சைக்காரன் என்ன செய்தான் தெரியுமா? தன் கையில் இருந்த நாணயத்தை அரசனின் தலைக்கு மேலாகத் தூக்கி எறிந்தான்.

மன்னர் குனிந்து பார்த்தார். ஒரு ரூபா நாணயம்.

அருகில் நின்ற வீரர்கள் உடனே ஓடிப்போய் குறித்த பிச்சைக்காரனை பிடித்துக் கொண்டு வந்தார்கள். விசாரணை ஆரம்பமானது...

"நீ எதற்காக அப்படிச் செய்தாய்?" என்று கேட்டார்கள்.

பிச்சைக்காரன் பதிலளித்தான். என்ன நடந்தது என்பதை விபரமாகச் சொன்னான். அதன்பின் சொன்னார்;

"மன்னர் எதற்காகப் படையெடுத்து போகிறார்? வெற்றியும் பொருளும் தேடித்தான் அவர் வேறு நாட்டிற்குப் படையெடுக்கிறார். அதனால் பணத்தின் தேவை அவருக்குத்தான் அதிகம் என்று முடிவு செய்தான்.

அவரை அணுகி இந்த நாணயத்தைக் கொடுக்க விட மாட்டீர்கள். அதனால்தான் கிடைத்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தினேன் என்றான்.

எனக்கு சிறந்த முறையில் சிந்திக்கத் தெரியாது. நான் செய்தது தவறு எனில் மன்னித்துக் கொள்ளுங்கள்... அல்லது தண்டனை வழங்குங்கள். ஏற்றுக்கொள்கிறேன் என்று பணிவாகச் சொன்னான்.

இதைக் கேட்டதும் அரசன் அந்தப் பிச்சைக்காரனையும் புரிந்து தன்னையும் புரிந்து கொண்டான்.

தேவைக்கு அதிகமாக இருக்கிறது எதுவுமே ஒரு சுமைதான். சுமை எதுவென்று முடிவு செய்து அதை இறக்கி வைக்கத் தெரிந்து விட்டால், வாழ்க்கை சுகம்தான். இன்பமாக மாறும்.

சுமைகளை வைத்துக் கொண்டு வாழ்வில் வெற்றி பெற முடியாது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# மாணவர்களை ஏமாற்றும் போலி நிறுவனங்கள்

## விழிப்புடன் இருக்க கோருகிறார் யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்

(யாழ்ப்பாணம்)

புலமைப்பரிசில் பரீட்சையும் க.பொ.த. உயர்தரப்பரீட்சையும் தற்போது நிறைவடைந்துள்ள நிலையில் மாணவர்கள் போலி நிறுவனங்களிடம் ஏமாற வேண்டாம் என யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சிறிகுகனேசன் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

பெற்றோர்கள் மத்தியில் முக்கியமாக கருதப்படும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையும் மாணவர்கள் மத்தியில் முக்கியமாக கருதப்படும். க.பொ.த உயர்தர பரீட்சையும் உள்ளது.

இவ்விரு பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களும் சிறிதுகாலம் விடுமுறைகளிலேயே வீட்டில் இருப்பர். இதனை பயன்படுத்தும் சில நிறுவனங்கள் மாணவர்களுக்கு சுற்றுலா வசதிகள் செய்து தருவதாகவும் உயர்கல்விக்கு வெளிநாட்டிற்கு அனுப்புவதாகவும் கூறி மாணவர்களின் பெற்றோரை ஏமாற்றி பணத்தை கறந்து கொண்டு மாயமாகி விடுகின்றன.

இவ்வாறான சம்பவங்களில் உயர்தர மாணவர்களே ஏமாற்றப்படுகின்றனர்.

உயர்கல்வி, வெளிநாட்டு வாய்ப்பு எனக்கூறி சட்டவிரோதமாக வெளிநாட்டுக்குச் செல்ல முயற்சிக்கின்றனர்.

இதில் சட்டவிரோத வெளிநாட்டு முகவர்கள் தப்பித்துக் கொள்ள அப்பாவி மாணவர்களே அகப்பட்டு தம் எதிர்காலத்தினை பாழாக்கி விடுக்கின்றனர்.

இவ்வாறான ஏமாற்றப்பட்ட சம்பவங்கள் கடந்தகாலங்களில்யாழில் பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்யப்பட்டு உள்ளன.

இதன் சூத்திரதாரிகள் பலர் கொழும்பையும் வேறு இடங்களையும் சேர்ந்தவர்களாக காணப்படுவதனால் அநேகர் பொலிஸாரின் பிடியிலிருந்து தப்பித்துக் கொள்ள வெகு சிலரே பொலிஸாரிடம் சிக்கி கொள்கின்றனர்.

ஆகவே, விடுமுறை காலங்களில் நம்பிக்கை வாய்ந்த நன்கு தெரிந்த நிறுவனங்களோடு தொடர்பு கொள்வதே சிறந்தது என்றார்.

இதனைவிட புலமைப்பரிசில் மாணவர்களின் பெற்றோர்களின் தொலைபேசி இலக்கங்களை சில நிறுவனங்கள் சில பாடசாலைகளூடாக பெறுகின்றன.

பின்னர் அத்தொலைபேசி இலக்கமூடாக தொடர்பு கொண்டு உங்களுக்கு அதிர்ஷ்டம் உள்ளது எனவும் சுற்றுலாவுக்கு அழைத்து செல்வதாகவும் கூறி அவர்கள் கூறும் இடங்களிற்கு அழைத்துச் செல்கின்றனர்.

அங்கு அவர்களுடைய உற்பத்தி பொருட்களை பெருமளவு பணம் கொடுத்து கொள்வனவு செய்ததன் பின்னரே அந்நிறுவனத்தினரால் கூறப்பட்ட அதிர்ஷ்ட பொருட்கள் வழங்கப்படுவதாகவும் இதனால் தாம் ஏமாற்றத்துக்கு உள்ளாகுவதாகவும் சில பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர். (அ-4)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 90 | 50 |
| உருளைக்கிழங்கு | 80 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 70 | 80 | 90 |
| தக்காளி | 50 | 50 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 |
| கோவா | 60 | 60 | 70 |
| கரட் | 100 | 100 | 150 |
| பூசணி | 30 | 30 | 40 |
| புடோல் | 30 | 40 | 40 |
| வாழைக்காய் | 60 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 70 | 90 | 70 |
| பெரிய வெங்காயம் | 90 | 80 | 70 |
| பாகற்காய் | 80 | 80 | 60 |
| வெண்டிக்காய் | 40 | 40 | 50 |
| கருணைக் கிழங்கு | 80 | -- | -- |
| பயற்றங்காய் | 60 | 90 | 35 |
| லீக்ஸ் | 110 | 100 | 130 |
| பீற்றூட் | 40 | 50 | 60 |
| கறிமிளகாய் | 70 | 80 | 80 |
| முருங்கைக்காய் | 90 | 100 | 70 |
| போஞ்சி | 100 | 110 | 100 |
| கத்தரிதம்புள்ள | 40 | 60 | -- |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 15 |
| தேசிக்காய் | 140 | 60 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 25 | 20-25 |

## இராசி பலன்

27.08.2012
(ஆவணி 11, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு
ஏகாதசி பின்னிரவு 12.50 மணிவரை
மூலம் முற்பகல் 9.16 மணிவரை
இராகுகாலம் 7.35-9.05 மணிவரை
சுபநேரம் 12.05-1.35 மணிவரை
ஏகாதசி விரதம்.

**மேடம்** மனக்குறை அகன்று மகிழ்ச்சி கூடும் நாள், தொழில் முன்னேற்றத்திற்கு நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர், வீட்டை அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**இடபம்** வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள், உடல் நலனில் கவனம் தேவை, வேலைச்சுமை கூடும், திடீர் செலவுகள் அதிகரிக்கும், எடுத்த காரியங்களில் தாமதங்கள் ஏற்படலாம், போசன சுகமுண்டு.

**மிதுனம்** குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து இணைவர், நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள், விரும்பிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, போசன சுகமான நாள்.

**கடகம்** பயணத்தால் பலன் கிடைக்கும், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், பழைய கடன்களை அடைக்க புதிய வழியைக் கையாள்வீர்கள், அயலவர்களுடன் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் குறையும்.

**சிங்கம்** பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் நடைபெறலாம், புதிய நபர்களின் சந்திப்புண்டு, மனதில் இனம் புரியாத சிந்தனைகள் தோன்றும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், சொத்துக்களால் நன்மையுண்டு.

**கன்னி** குடும்பத்தினர் உங்களின் சொற்களைக் கேட்டு நடக்க முன்வருவர், வாகன சுகமுண்டு, தூரத்துச் சொந்தங்களால் நன்மையுண்டு, விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், சுப செய்திகள் வந்து சேரும் நாள்.

**துலாம்** பாராட்டும் புகழும் கூடும் நாள், இளைய சகோதரத்தின் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், விருந்துகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், சுவாரஸ்யமான நாள்.

**விருச்சிகம்** வாக்கு மேன்மையுண்டு, வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், புதிய தகவல்கள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு, சேமிப்பை உயர்த்துவதற்கான நடவடிக்கை எடுப்பீர்கள், வளர்ச்சி கூடும் நாள்.

**தனுசு** சிந்தனை மிகுதியான நாள், கொடுக்கல், வாங்கல்கள் ஒழுங்காகும், தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கப் பெறுவீர்கள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், போசன சுகமுண்டு.

**மகரம்** ஆரம்பத்தில் அச்சுறுத்தலாகத் தோன்றிய தகவல் முடிவில் நன்மையைக் கொடுக்கும், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், சயன சுகக்குறைவான நாள், பயணத்தால் பலன் கிடைக்கும், சுப செலவுகள் அதிகரிக்கும்.

**கும்பம்** தனவரவுகள் திருப்திகரமாக அமையும், எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி பெறுவீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், தொலைபேசி மூலம் பொன்னான தகவல்கள் வந்து சேரும் நாள்.

**மீனம்** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், மற்றவர்கள் மத்தியில் உங்களின் மதிப்பும் மரியாதையும் உயரும், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள வள்ளல்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கலாம்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொதுநலவாய போட்டிகளுக்கான உரிமை கிடைத்திருந்தால் என்ன நடந்திருக்கும் என எண்ணும்போது நடுங்குகிறது

# 2010 யூன் - டிசம்பர் வரை ப. சந்தையில் பகல் கொள்ளையே நடந்தது-கருணாரட்ண

கொழும்பு பங்குச் சந்தையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் முறைகேடுகள் தொடர்பான தகவல்களையும் புள்ளி விபரங்களையும் என்றாவது ஒரு நாள் வெளிப்படுத்துவதற்கு தான் விரும்புவதாக பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தலைவர் பதவியிலிருந்து ராஜினாமாச் செய்த திலக் கருணாரட்ண தெரிவித்துள்ளார்.

பங்குச் சந்தையில் இடம் பெற்றதாகக் கூறப்படும் வெண்ணிற ஆடை குற்றங்கள் தொடர்பான விசாரணைகள் கிடப்பில் போடப்பட்டால் இக் குற்றங்களை புரிந்தவர்களின் பெயர்களை திலக் கருணாரட்ண வெளியிடுவாரா எனக் கேட்டபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

2010ஆம் ஆண்டு யூன் மாதத்திற்கும் டிசம்பர் மாதத்திற்கும் இடையில் கொழும்பு பங்குச் சந்தையில் நடைபெற்ற விடயங்கள் பகல் கொள்ளைகளாகும் என அவர் கூறினார்.

பெறுமதியற்ற பங்குகளின் விலைகளை தமக்கு நெருக்கமான தரகர்கள் மூலம் முறைகேடாக, தன்னிச்சையாக அதிகரித்து அத் தரகர்கள் மூலம் அப் பங்குகளை அப்பாவி முதலீட்டாளர்களை வாங்கச் செய்ததாகவும் அவர் கூறினார்.



அரச துறையிலுள்ள மிக நேர்மையான பல தொழில்வாண்மையாளர்கள் அழுத்தம் காரணமாக தமது பதவிகளிலிருந்து விலகிச் சென்றுள்ளதாகவும் இது தொடர்பாக குழப்பமொன்றை ஏற்படுத்துவதற்கு தன்னால் மாத்திரமே முடிந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தவறு செய்வதாக குற்றம் சுமத்தப்பட்ட பலர் அதிகாரத்திலுள்ளவர்களின் ஆதரவு காரணமாக பதவியில் நீடிக்கின்றனர் என அவர் கூறினார்.

உதாரணமாக மத்திய வங்கி பொருளியலாளர் ஒருவரினால் நிர்வகிக்கப்பட வேண்டிய நிலையில், கணக்காளர் ஒருவரால் நிர்வகிக்கப் படுகிறது.

இப்போது அனைத்தும் விழும் நிலையில் உள்ளதாக தென்படுகிறது.

மத்திய வங்கி ஆளுநரால் வெகுவாக ஆதரிக்கப்பட்ட பொதுநலவாய போட்டிகளை நடத்துவதற்கான உரிமை எமக்கு கிடைத்திருந்தால் என்ன நடக்கும் என எண்ணும்போது நடுங்குகிறது என திலக் கருணாரட்ண கூறியுள்ளார்.




# சென்ட்ரல் பினான்ஸ் உருவாக்கும் வாடிக்கையாளர் அணுகுமுறைத் திட்டம்

சென்ட்ரல் பினான்ஸ் கம்பனி பி.எல்.சி. 54 வருடகால அனுபவமுள்ள நிதி நிறுவனமாகும். முதலீட்டாளர்கள் மற்றும் வைப்பீட்டாளர்கள் சில முக்கிய காரணங்களை ஆராய்ந்த பின்பே நிதி நிறுவனங்களில் முதலீடு செய்ய வேண்டும்.

இதன்மூலம் அவர்கள் தங்கள் கடின சேமிப்புக்களை இழக்க நேரிடாது என்று சென்ட்ரல் பினான்ஸ் கம்பனியின் மூத்த துணை பொது முகாமையாளர் அருணா ராஜநாயக்க தெரிவித்தார். முதலில் அந்த நிறுவனம் மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

இரண்டாவதாக இலங்கை மத்திய வங்கியின் நியதிகளுக்கு ஏற்ப கீர்த்திமிக்க முகவர் நிறுவனங்களின் வரிசையில் நிதி நிறுவனம் உள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

மூன்றாவதாக நிறுவனத்தின் இலாபம், தேறிய சொத்து வளர்ச்சி மற்றும் பலவற்றை கருத்தில் கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது 40ற்கும் அதிகமான நிதி நிறுவனங்கள் வைப்பீட்டை ஏற்றுக்கொள்வதற்கு மத்திய வங்கியில் பதிவு செய்துள்ள போதிலும், சென்ட்ரல் பினான்ஸ் கம்பனி PLC முன்னணி நிதி நிறுவனங்களில் ஒன்றாகும்.

ராஜநாயக்க மேலும் உரையாற்றுகையில், 2011-ம் ஆண்டு ரூபாய் 1.6 பில்லியன் வருமானத்தோடு ஒப்பிடும்போது வரி விதிப்புக்குப் பின்னரும் ரூ. 2.3 பில்லியனுக்கு அதிகமான வருமானம் பெறப்பட்டது.

நாம் குறிப்பிட விரும்புவது என்னவெனில் முதலீட்டாளர்கள் முதலீடு செய்ய முன் கம்பனியின் எண்ணிக்கையை பார்ப்பதற்கு மேலதிகமாக அதன் உறுதித் தன்மையையும் நிதிஸ்திரத்தன்மையையும் அவதானிப்பதுடன், அது வழங்கும் வட்டி வீதத்தையும் கவனிக்க வேண்டும்.

அதிக பயன்பாடு கிடைப்பதற்கு அதிக பாதுகாப்பு இல்லை என்ற வழமையான நம்பிக்கைக்கு மாறாக சென்ட்ரல் பினான்ஸின் வாடிக்கையாளர்கள் கூடிய பயன்பாடு மற்றும் கூடிய பாதுகாப்பினால் மகிழ்ச்சியடைகிறார்கள் சென்ட்ரல் பினான்ஸ் கம்பனி பிஎல்சியை சேர்ந்த நாம், இலங்கையில் உள்ள சில வர்த்தக வங்கிகளைவிட உயர்ந்த வட்டியை வழங்குவதில் பெருமைப்படுகின்றோம்.

சென்ட்ரல் பினான்ஸ் கம்பனி பிஎல்சியானது அடிப்படை மூலதனமாக 2012 மார்ச் 31 வரை ரூபாய் 21.5 பில்லியனை வைப்பு செய்துள்ளது.

வாடிக்கையாளர்கள் வட்டியை மாதாந்தமாகவோ அல்லது காலம் முடிவடையும்போது முதிர்ச்சி வட்டியாகவோ தாம் விரும்பியவாறு பெறமுடியும். சேமிப்பாளர்கள் தங்கள் பணத்தை வர்த்தக வங்கிகளில் உள்ள சகல CAT இயந்திரங்கள் உட்பட மெஸ்ரோ ATM வலைப்பின்னலில் இருந்து CF cash ATM காட் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

நாடு முழுவதும் 60 கிளைகளைக் கொண்ட சென்ட்ரல் பினான்ஸ் நிறுவனமானது மக்களின் தேவைகளை சரியாக அறிந்து, பெரும்பான்மையான மக்களின் தேவைகளுக்கு பொருந்தக்கூடிய நிதி திட்டங்களையும், சேவைகளையும் அளிப்பதை முதன்மையாக கொண்டிருக்கும் அதேவேளை, நிறுவனத்திற்கு முதன்மையான இலாபத்தைத் தரும் தேவைதான் என்கிற எண்ணத்தை பின்தள்ளி வைக்கிறது. வாடிக்கையாளரின் மன நிலையை கருத்தில் கொண்டு, அதற்காக இன்நிறுவனமானது CF நம்பிக்கையாளர் அட்டையை தமது வாடிக்கையாளருக்கு அறி முகப்படுத்தியுள்ளது.

இந்த நம்பிக்கையாளர் திட்டத்தில் 600க்கு மேற்பட்ட வியாபார நிறுவனங்கள் பங்கு கொண்டு, பாரிய அளவிலான விலைகுறைப்புக்களை எமது வாடிக்கையாளர்களுக்கு, அவர்களுடைய பொருட்களிலும் சேவைகளில் தர முன் வந்துள்ளது. இவ்வாறான சேவைகளை வைத்தியசாலைகள், சுப்பர் மாக்கெட்டுக்கள், நட்சத்திர ஹோட்டல்கள் உட்பட பல இடங்களில் பெற்றுக் கொள்ளலாம் எனவும் ராஜநாயக்க மேலும் குறிப்பிட்டார்.

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 4927.13 | 5012.84 ⇧ |
| மிலங்கா விலைச்சுட்டி | 4550.02 | 4636.53 ⇧ |
| எஸ் & பி 20 சுட்டி | 2792.08 | 2828.54 ⇧ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 3,813.730 |

உயர்வடைந்த பங்குகள்: பிறின்ற் கெயர் (29.90), பரஹன் (1400.00), செலிஷிங் (1102.00), சிஎப்ஐ (106.00), ஹைட்ரோ பவர் (6.60).

வீழ்ச்சியடைந்த பங்குகள்: இன்பிராசக்சர் (118.50), ஆஸிரி சென்றல் (205.20), ஈபி கிரேஸி (904.10), பின்லேஸ்களம்பு (260.00), ஈகுவிட்டி (27...)

மேலதிக தகவல்கள்: www.cse.lk

# பிணையங்கள் ப. ஆணைக்குழுவின் தலைவர் பதவிக்கு மூவர் போட்டி!

பிணைகள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தலைவராக பணியாற்றிய திலக் கருணாரட்ண பதவியிலிருந்து விலகியதை அடுத்து ஏற்பட்டுள்ள வெற்றிடத்திற்காக மூவருக்கிடையே பலத்த போட்டி நிலவுவதாக பங்குச் சந்தை தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பங்குச் சந்தை தலைவர் பதவிக்கு முன்னாள் பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்ணாண்டோவின் பெயரை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ சிபார்சு செய்துள்ளார். ஜனாதிபதியின் ஆலோசகராகச்செயற்படும் சந்திரா பெர்ணான்டோ, வடக்கின் வசந்தம் செயல் திட்டத்தின் ஆலோசகராவும் பதவி வகிக்கிறார்.

அத்துடன் சிரேஷ்ட சட்டத்தரணியான காலிங்க இந்திரதிஸ்ஸவின் பெயரும் இந்தப் பதவிக்கு முன்மொழியப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

குற்றவியல் சட்டம் குறித்து மிகவும் பிரபல்யமான சட்டத்தரணி இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பிணைகள்பரிவர்த்தனைஆணைக்குழுவின் தலைவராக முன்னர் பதவி வகித்திருந்த உதய காரியவசம் என்பவரின் பெயரும் முன்மொழியப்பட்டுள்ளது.

நிதி மோசடி தடுப்பு துறையில் நிபுணர் என அறியப்படும் இவர், இந்த துறை தொடர்பாக கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தில் அழைப்பு விரிவுரையாளராகவும் செயற்பட்டுள்ளார்

பங்குப்பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தலைவராக இவர் பணியாற்றிய காலத்தில் உலகில் பொருளாதார நெருக்கடிகள் இருந்த சந்தர்ப்பத்தில் கூட, பங்குச் சந்தையில் ஒரு ரில்லியன் ரூபாய் புரள்வு இலக்கை பங்குச் சந்தை அடைந்திருந்ததாகவும் குறிப்பிடப்படுகிறது.

எவ்வாறாயினும் இந்த வாரத்தில் அல்லது அடுத்த வாரம் இந்த மூவரில் ஒருவர் பிணைகள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் புதிய தலைவராக நியமிக்கப்படுவார் என பங்குச் சந்தை தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.




மைக்ரோசொப்ட் சிறிலங்கா நிறுவனம் தமது புதிய படைப்பான ஒபிஸ் 365 மென் பொருளை பத்தரமுல்லையிலுள்ள வோர்டர்ஸ் எட்ஜில் நடைபெற்ற 2012 கூட்டு வர்த்தக மாநாட்டில் அறிமுகப் படுத்தியது.

இப் பொதியை முதலாவது வாடிக்கையாளராக ஜோன் கீல்ஸ் ஹோல்டிங் நிறுவனத்தின் பிரதம தொழில்நுட்ப அதிகாரியும், உப நிறைவேற்றுப் பணிப்பாளருமான ரமேஷ் சண்முகநாதன் பதிவு செய்வதைப் படத்தில் காணலாம்.

# ஆப்பிளுக்கு ரூ.13,000 கோடி இழப்பீடு தர சாம்சங்குக்கு உத்தரவு

காப்புரிமை வழக்கில் ஆப்பிள் நிறுவனத்திற்கு ஒரு பில்லியன் டொலர் (ரூ.13 ஆயிரம் கோடி) இழப்பீடு தரவேண்டும் என சாம்சங் கம்பனிக்கு அமெரிக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மென்பொருள் தொழில்நுட்பத் துறையில் முன்னணி நிறுவனமான ஆப்பிள் நிறுவனத்திற்கும் தென் கொரியாவைச் சேர்ந்த பிரபல கைத் தொலைபேசி நிறுவனமான சாம்சங் கம்பனிக்கும் இடையே காப்புரிமை சட்ட வழக்கு ஒன்று கலிபோர்னியா நீதிமன்றத்தில் நடைபெற்றுவந்தது.

தங்களின் ஐபேட், ஐபோன் மென்பொருள் மற்றும் வடிவமைப்புகளை பிரதியெடுத்து சாம்சங் தனது கைத் தொலைபேசிகளில் பயன்படுத்துவதாக ஆப்பிள் நிறுவனம் வழக்கில் குற்றம் சாட்டியிருந்து.

இந்த வழக்கின் தீர்ப்பில், ஆப்பிள் நிறுவனத்தின் காப்புரிமைகள் சரியானவை. சாம்சங் அவற்றை பிரதி செய்தது நிரூபணமாகிறது. எனவே ஆப்பிள் நிறுவனத்திற்கு சாம்சங் ஒரு பில்லியன் டொலர் இழப்பீடு தர வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

இதுபற்றி ஆப்பிள் நிறுவன செய்தித் தொடர்பாளர் கூறுகையில்,

எங்கள் வாடிக்கையாளர்களை திருப்திப்படுத்துவதற்காக புதுபுது தொழில்நுட்பங்களை கண்டு பிடித்து வெளியிடுகிறோம். இது மற்றவர்கள் பிரதி செய்வதற்காக தயாரிக்கப்பட்டவை அல்ல என்றார்.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 130.83 | 133.85 |
| பவுண்ட் (ஐக்கிய இராச்சியம்) | 206.94 | 212.74 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 163.45 | 168.73 |
| சுவிஸ் பிராங் | 135.87 | 140.90 |
| கனேடிய டொலர் | 130.84 | 135.43 |
| அவுஸ்திரேலிய டொலர் | 135.55 | 140.61 |
| சிங்கப்பூர் டொலர் | 104.22 | 107.74 |
| ஜப்பான் யென் | 1.65 | 1.71 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.39 | |
| ஐக். அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 36.01 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்மஸ் தீவு தடுப்பு முகாம் அகதிகள் உண்ணாவிரதம்

அவுஸ்திரேலியாவுக்கு இலங்கை உட்பட பல நாட்டவர்கள் சட்டவிரோதமாக தொடர்ந்தும் சென்று கொண்டுள்ள வேளையில் கிறிஸ்மஸ் தீவு தடுப்பு முகாமில் உள்ள பல கைதிகள் உணவு தவிர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

தமது அகதி அந்தஸ்து கோரிக்கை குறித்த பரிசீலனைக்கு முன்னதாக பசுபிக் தீவான நவ்றூவிற்கு அனுப்பிவைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலேயே இந்த நடவடிக்கையினை அகதிகள் ஆரம்பித்துள்ளனர்.

நவ்றூ தீவிற்கு கொண்டு செல்லப்படும் தாம் பல ஆண்டுகள் விசாரணைகள் எதுவும் அற்றநிலையில் அங்கு தடுத்து வைக்கப் படலாம் என அஞ்சுவதாக போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஒருவர் வெளிநாட்டு ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

அபாயகரமான, பாதுகாப்பற்ற கடற்பயணங்களை மேற்கொண்டு அவுஸ்திரேலியா வருபவர்களை தடுத்து வைப்பதற்காக நவ்றூதீவு மற்றும் பப்புவா நியூகினியா ஆகிய இடங்களில் விசாரணை நிலையங்களை திறப்பதற்கு அண்மையில் அவுஸ்திரேலிய நாடாளுமன்றம் அனுமதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை எதிர்வரும் காலங்களில் படகுகள் மூலம் அவுஸ்திரேலியா நோக்கி வருபவர்கள் நேரடியாக இந்த முகாம்களுக்கு அனுப்பப்படுவார்கள் என்றும் அங்கு சட்டரீதியான விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என அவுஸ்திரேலிய பிரதமர் ஜூலியா கில்லார்ட் தெரிவித்துள்ளார். (அ-2)

# மிருக பூஜைக்கு எதிர்ப்பு தெரிவித்து முன்னேஸ்வரத்தில் சத்தியாக்கிரகம்



(கொழும்பு)

சிலாபம் முன்னேஸ்வரம் காளி கோவிலில் வருடாந்தம் இடம்பெற்று வரும் மிருக பலி பூஜைக்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்ப்பு ஊர்வலம் மற்றும் சத்தியாக்கிர போராட்டமும் நேற்றைய தினம் முன்னேஸ்வரம் பிரதேசத்தில் இடம்பெற்றது.

சிஹல ராவய தேசிய இயக்கம் மற்றும் மிருக நலன்புரி அமைப்பு, ஜாதிகஹெல உறுமய, சங்க சம்மேளனம் உட்பட பல அமைப்புக்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டன.

முன்னேஸ்வரம் சந்தியில் ஒன்று கூடிய மேற்படி குழுவினர் ஊர்வலமாக முன்னேஸ்வரம் பத்திரகாளி தேவாலயம் வரை சென்றதோடு ஈஸ்வர தேவாலயத்தின் அருகிலும் சென்றனர். அப்போது அவர்கள் மிருக பலிக்கு எதிரான கோஷங்களை எழுப்பினர்.

இதன்போது ஈஸ்வர ஆலய பூசகர்களுக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்குமிடையில் கடும் வார்த்தை பிரயோகங்கள் இடம்பெற்றன.பின்னர் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீண்டும் பத்திரகாளியம்பன் தேவாலயம் வரை ஊர்வலமாக சென்றனர். இதன்போது பொலிஸார் தேவாலயத்திற்கு நுழையும் வீதியை மறித்து தடுத்து நிறுத்தினர். இதன் பின்னர் இரு தரப்பினருக்கும் இடையில் ஏற்பட்ட பேச்சுவார்த்தையையடுத்து தேவாலயத்திற்கு அருகில் சென்று சத்தியாக்கிரப் போராட்டத்தில் ஈடுபட்டனர். (அ-2)

# அரசாங்கத்தின் எதிர்ப்புக்களை கிழக்கு மக்கள் தோற்கடிப்பர்

## சுரேஸ் எம்.பி.தெரிவிப்பு



(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் அரசாங்கத்தின் எதிர்பார்ப்புக்கள் தமிழ் மக்களால் மிக மோசமாகத் தோற்கடிக்கப்படுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

ஒரு வருடத்துக்கு முன்னரே கிழக்கு மாகாண சபையைக் கலைத்துவிட்டு தேர்தலை நடத்தி கிழக்கு மாகாண தமிழ் மக்கள் அரசின் பக்கமே இருக்கின்றனர் என்பதை எதிர்வரும் நவம்பர் மாதம் ஜெனீவாவில் நடைபெறவுள்ள மனித உரிமைகள் அமர்வில் நாட்டுவதற்கான காய் நகர்த்தலில் ஜனாதிபதி ஈடுபட்டுள்ளார். கிழக்குமாகாண சபைத் தேர்தல் முடிவுகள் அரசாங்கத்துக்கும் ஜனாதிபதிக்கும் பேரிடியாக இருக்கும்.

இதை உணர்நது தமிழ் மக்கள் வாக்களிக்க உறுதி பூண்டுள்ளனர். கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழ் மக்களின் 85 சதவீதமானோர் வாக்களித்தால் கிழக்கு மாகாணத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றும்.

எனவே எந்த அச்சுறுத்தல்கள் வந்தாலும் அதற்கு முகம் கொடுத்து தமிழ் மக்கள் தவறாது வாக்களிக்க வேண்டுமெனவும் அவர் கேட்டுக் கொண்டார். (அ-2)


மின்சாரம் தடைப்படுவதால் ஏற்படும் நட்டத்தை இல்லாதொழிக்க...
4050 க்கும் மேற்பட்ட மின்பிறப்பாக்கிகள் இலங்கையில் பயன்பாட்டிலுள்ளன

MACK POWER

கிர்லோஸ்கார் மின்சார பிறப்பாக்கி



- குறைந்தபட்ச செலவு
- இலகுவாக பராமரித்தல்
- விருப்பத்திற்கு ஏற்ப AMF/AD வசதிகள்

ரூபா 595,000 முதல்....

உடன் அழையுங்கள் 071-4269470 077-7563453

- சிறந்த முகாமைத்துவ தொகுதிக்காக ISO 9001 சான்றிதழ்
- சுற்றாடல் முகாமைத்துவ தொகுதிக்காக ISO 14001 சான்றிதழ்
- US Tire 1/11 நியமத்தின் பிரகாரம் வெளியேற்றல்

மெக்ஸ்வுட்ஸ் எனர்ஜி பீஎல்சீ
10,ஞானார்த்த பிரதீப மாவத்தை, கொழும்பு-08
தொலைபேசி: 011-2691186, தொலைநகல்: 011-2699454
இணையம்: me@mackwoods.com
மின்னஞ்சல்: www.mackwoods.com
(303)



வடமராட்சி வடக்கு உத்திராவத்தை
புலோலி அருள்மிகு ஞானவைரவர் ஆலய
வருடாந்த அலங்கார உற்சவம் 2012



மெய்யடியார்களே!

இன்று 27.08.2012 ஆம் திகதி அலங்கரிக்கப்பட்ட இரதோற்சவத்தில் ஸ்ரீ ஞானவைரவப் பெருமான் வீதி உலா வருவார். அடியார்கள் கலந்து கொண்டு அருளைப் பெற்றுய்யுமாறு அழைக்கின்றோம்.

உத்திராவத்தை,
புலோலி வட கிழக்கு,
புலோலி.

9 ஆம் திருவிழா இரதோற்சவ
உபயகாரர்கள்.

(292)


# "சிசு செரிய" பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்து சேவை

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் பாடசாலை மாணவர்களுக்கென போக்குவரத்து சேவையினை மேற்கொள்ளும் முகமாக அறிமுகப்படுத்தப்பட்ட சிறு செரிய போக்குவரத்துச் சேவை தொடர்பான விண்ணப்பப்படிவங்கள் யாழ்.மாவட்ட செயலக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அலுவலகத்தால் விநியோகிக்கப்பகின்றன.இலங்கை போக்குவரத்து சபையினரின் சேவை வழங்கப்படுகின்ற வழிகளிலே சேவையில் ஈடுபடுகின்ற பேருந்துகளுக்கே வழியனுமதி வழங்கப்படவுள்ளது. இதற்காக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்கள் கடைப் பிடிக்கப்படும். சேவையாற்ற வேண்டிய வழி இலக்கங்கள் பற்றிய மேலதிக விபரங்களை செயலக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பப் படிவங்கள் 07.09.2012 ஆம் திகதி வரை விநியோகிக்கப்படும்.

சுந்தரம் அருமைநாயகம்
அரசாங்க அதிபர்,
மாவட்ட செயலாளர்,
யாழ்ப்பாணம் மாவட்டம்

(சி-328)


## கல்யாண மாலை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு:- 1983 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-அ[illegible]ட்டம் 4<br>உயரம்:-5'5"<br>கி.பா:-35, 1 இல் செவ்<br>தொழில்:-வியாபாரம் கனடா (P.R)<br>B/361 | பிறப்பு:- 1981 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- சுவாதி 1<br>உயரம்: 5'2"<br>கி.பா:-23<br>தொழில்:- MBBS டாக்டர் U.K(P.R)<br>G/370 |
| பிறப்பு:- 1977 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-பூராடம் 1<br>உயரம்:-5'5"<br>கி.பா:-38.5, 12 இல் செவ்<br>தொழில்:-கட்டடத் தொழிலாளி (வாய் பேசாதவர்)<br>B/091 | பிறப்பு:- 1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- சுவாதி 1<br>உயுரம்: 5'2"<br>கி.பா:-16, 4 இல் செவ்<br>தொழில்:-BBA அரச நி.தி உதவியாளர்<br>G/368 |
| பிறப்பு:- 1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-திருவாதிரை 1<br>உயரம்:-5'3"<br>கி.பா:-27.5, 12 இல் செவ்<br>தொழில்:-மின் இணைப்பு வியாபார நிலையம்<br>B/066 | பிறப்பு:- 1984 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-பூராடம் 2<br>உயரம்: 5'2"<br>கி.பா:- 30.75<br>தொழில்:- அரச ஆசிரியை<br>G/365 |
| பிறப்பு:- 1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-சுவாதி 3<br>உயரம்:-5'7"<br>கி.பா:-20<br>தொழில்:- சொந்த வியாபார நிலையம்<br>B/071 | பிறப்பு:- 1983 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- பரணி 2<br>உயரம்: 5'2"<br>கி.பா:-24.75<br>தொழில்:-Bsc ஆசிரியை<br>G/375 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல.144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E.mail:-kalyanamalai.jaffna@gmail.com
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்னொழுக்கால் தீ விபத்து; பொருட்கள் எரிந்து நாசம்

(யாழ்ப்பாணம்)



மின் ஒழுக்கு காரணமாக கராச் தீ பிடித்து எரிந்ததில் பல இலட்சம் ரூபா பெறுமதியான இலத்திரனியல் சாதனங்கள் எரிந்து நாசமாகின.

இந்தத் தீ விபத்து நேற்றுக் காலை 6.30 மணியளவில் நல்லூர் வைமன் வீதியில் உள்ள கராச் ஒன்றில் இடம்பெற்றுள்ளது.

இந்த தீ விபத்து தொடர்பாக யாழ்.மாநக்ர சபை தீயணைப்பு பிரிவினருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து அந்த இடத்திற்கு விரைந்த தீயணைப்பு பிரிவினர் தீயினைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர்.

இருப்பினும் அங்கிருந்த பல இலட்சம் ரூபா பெறுமதியான இலத்திரனியல் சாதனங்கள், வாகன உதிரிப்பாகங்கள், வாகனங்களுக்கு வர்ணம் அடிக்கும் இயந்திரங்கள் என்பன எரிந்து நாசமாகின. (அ-6)

# சாவ.நகர வர்த்தக நிலையங்கள் மீது திடீர் பரிசோதனை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகராட்சி மன்ற எல்லைக்குட்பட்ட வர்த்தக நிலையங்கள் மீது சுகாதாரப் பகுதியினர் திடீர் பரிசோதனை மேற்கொண்டு வருகின்றனர்.

நகரை அண்டிய பகுதியில் இயங்கிய அரைக்கும் ஆலை இவ்வருடத்திற்குரிய வியாப்பார உரிமம் பெறாததால் நகர சபை பொது சுகாதார பரிசோதகர் தளிர்ராஜர் தலைமையில் சென்ற குழுவினரால் மூடப்பட்டது.

அதன் உரிமையாளர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வருடத்திற்குரிய வியாபார உரிமம் பெறாத வர்த்தக நிலையங்கள் மீது வர்த்தக நடவடிக்கை மேற்கொள்வதென சுகாதாரப் பகுதியினரும் பொலிஸாரும் மேற்கொண்ட தீர்மானங்களுக்கு அமையவே வர்த்தக நிலையங்கள் மீது திடீர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறன. (அ-3-29)

# 16 வர்த்தகர்களுக்கு எதிராக சாவ. நீதிமன்றில் வழக்கு

(சாவகச்சேரி)

யாழ்.மாவட்ட செயலக பாவனையாளர்கள், அலுவலர்கள் அதிகார சபையினர் பாவனையாளர் பாதுகாப்பு விதிகளை மீறிச் செயற்பட்ட தென்மராட்சி பிரதேச 16 வர்த்தகர்களுக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் கடந்த வாரம் வழக்குத் தாக்கல் செய்தனர்.

வர்த்தக நிலையங்களில் விலைப்பட்டியல் காட்சிப்படுத்தாமை, அதிகரித்த விலைக்கு பொருட்களை விற்றமை, காலாவதியான பொருட்களை விற்பனை செய்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களே வர்த்தகர்களுக்கு எதிராக சுமத்தப்பட்டன.

குறிப்பிட்ட 16 வர்த்தகர்களையும் செப்டெம்பர் மாதம் 21 ஆம் திகதி நீதிமன்றில் சமுகமளிக்குமாறு அழைப்புக்கட்டளை அனுப்ப நீதிமன்ற பதிவாளருக்கு உத்தரவிடப் பட்டது. (அ-3-29)

# நூல் வெளியீடும் கருத்தரங்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவை நடத்தும் ஆவணி மாத நடேசரபிஷேகப் பெருவிழாவும் தில்லை நடராஜ ஸ்நபனம் நூல் வெளியீட்டு விழாவும் கருத்தரங்கும் எதிர்வரும் 30 ஆம் திகதி வியாழக்கிழமை யாழ்ப்பாணம், இல.141, பலாலி வீதியிலமைந்துள்ள இந்து சமயப் பேரவையில் நடைபெறவுள்ளது.

காலை 6 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை தில்லை நடராஜப் பெருமானுக்கு அபிஷேகம் சிறப்புற நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் பிற்பகல் 2 மணிக்கு இந்து சமயப் பேரவையின் செயலாளர் சிவத்திரு சி.சத்திக்கிரீவன் தலைமையில் நடைபெறவுள்ள நூல் வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராக தமிழ்நாடு சிதம்பரம் தில்லை வாழந்தணர் சிவஸ்ரீ கணேச பரமேஸ்வர தீக்ஷிதர் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இந்நூலிற்கான ஆசியுரையினை தர்ம சாஸ்தா குருகுல அதிபர் வேதாகம ஞானபாஸ்கரன் சிவஸ்ரீ தா.மஹாதேவக்குருக்கள், சிவபூஜா துரந்தரர் சிவஸ்ரீ ஷ.சோமாஸ்கந்தக்குருக்கள், வெளியீட்டுரையினை கோப்பாய் சிவம் பிரம்மஸ்ரீ ப.சிவானந்தசர்மா ஆகியோர் ஆற்றவுள்ளனர். (அ-9)

# கழிவு வாய்க்கால் துர்நாற்றம் வீசுவதால் பயணிகள் விசனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நவீன சந்தைக்கு வடக்குப் புறமாக உள்ள தெல்லிப்பழை, அளவெட்டி பகுதிகளுக்கு செல்லும் பேருந்து நிலையத்துக்கருகில் உள்ள கழிவு வாய்க்கால் குப்பை கூழங்களால் நிறைந்துள்ளதால் துர்நாற்றம் வீசுகிறது. இதனால் பயணிகள் மூக்கை பொத்தியவாறு பயணிக்க வேண்டியுள்ளது.

ஓடும் கழிவு நீரை துப்புரவு செய்வதில் தாமதம் ஏற்பட்டாலும் கழிவுவாய்க்காலை மூடி கொங்கிறீட் இடவேண்டும்.

மழைகாலம் நெருங்குவதால் டெங்கு நோய் மற்றும் ஏனைய நோய் பரவக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளன.

எனவே, உரியதரப்பினர் இதனைக் கருத்தில் கொண்டு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பயணிகளும் அப்பகுதி மக்களும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-254)

# புனரமைப்பிற்கு ஒரு மில்லியன்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகராட்சி மன்ற எல்லைக்குட்பட்ட தாழையடி அம்மன் கோவில் முதலாம் ஒழுங்கை ஒரு மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது.

மன்ற நிதியில் மேற்கொள்ளப்படவுள்ள இவ் வேலைத்திட்டம் சபை உறுப்பினர் ந.திருக்குமரனின் வேண்டுகோளுக்கிணங்க ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-3-29)




# வரணி நூலகத்திற்கு ஒரு இலட்சம் ஒதுக்கீடு

(சாவகச்சேரி)

வரணிப் பொது நூலகத்திற்கு புத்தக கொள்வனவிற்காகவும் மாசேரி கிழக்கு காட்டுப்புலம் வீதி புனரமைப்புக்காகவும் ஒரு இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி தனது இவ்வாண்டுக்கான நிதி ஒதுக்கீட்டில் இருந்து இதனை வழங்கியுள்ளார். (அ-3-29)

# வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் அமைந்த அரியாலை பொதுச்சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாக யாழ்.மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் அ.எ.ஞானஜோதி அறிவித்துள்ளார்.

இதற்கமைய இன்று திங்கட்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை அரியாலை, கலைமகள் வீதி, கலைமகள் சன சமூக நிலையத்திலும் முற்பகல் 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை அரியாலை, ஆசீர்வாதப்பர் வீதி, காந்தி சனசமூக நிலையத்திலும் வைத்து வழங்கப்படும்.

மறுநாள் செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை அரியாலை,ஏவி வீதி, அருணோதயா சனசமூக நிலையத்திலும் முற்பகல் 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை அரியாலை திருமகள் வீதி, திருமகள் சனசமூக நிலையத்திலும்வைத்து வழங்கப்படவுள்ளது. (அ-9)

# நிர்வாகத்தெரிவு

(நல்லூர்)

பல வருடங்களாக செயற்படாதிருந்த ஆவரங்கால் மேற்கு சர்வோதய சனசமூக நிலையம் புனரமைக்கப்பட்டு மீண்டும் கடந்த 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டு புதிய நிர்வாகமும் தெரிவு செய்யப் பட்டது.

இதில் தலைவராக வ.சிவஞானம், உபதலைவராக அ.சிங்கராஜா, செயலாளராக க.பிரசன்னா, உபசெயலாளராக சி.பரமேஸ்வரன், பொருளாளராக இ.ராகுலன், கணக்காளராக கா.சசிதரன் ஆகியோருடன் எட்டு நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (அ-3-134)










தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை நாடளாவிய ரீதியில் நேற்றைய தினம் நடைபெற்றது. பரீட்சை எழுதிய வெற்றிக்களிப்பில் மாணவர்கள் செல்வதை படங்களில் காணலாம்.

(படங்கள்:- அலுவலகச் செய்தியாளர், உ.சாளீன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மல்லிகைத்தீவு மக்கள் இருப்பிடம் திரும்பினர்

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திற்குட்பட்ட மல்லிகைத்தீவு கிராம மக்கள் கண்ணிவெடி அகற்றப்பட்டு மீண்டும் நேற்றைய தினம் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

மேற்குறித்த கிராமத்தை சேர்ந்த 61 குடும்பங்கள்(193 உறுப்பினர்)கள் வவுனியா செட்டிக்குளம் நலன்புரி நிலையத்தில் இருந்து அண்மையில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டனர்.

மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பின் கண்ணிவெடிகள் முற்றாக அகற்றப்பட்டமையினால் தமது சொந்த இடத்தில் இருந்து கோம்பாவில் விக்னேஸ்வரா வித்தியாலயம், புதுக்குடியிருப்பு சி.சி. பாடசாலை ஆகியவற்றில் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

மேற்குறித்த பாடசாலையில் புலமைப்பரிசில் பரீட்சை நடைபெறவிருந்தமையால் கண்ணிவெடிகள் துரிதகதியில் அகற்றப்பட்டு மீண்டும் நேற்று முன்தினம் தமது சொந்த இடத்தில் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளதாக புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் அறிவித்துள்ளது.

(அ-3-267)

### புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில்

# பதிவுகளை மேற்கொண்ட 167 குடும்பங்கள் குடியமர்வு

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் உள்ள 167 குடும்பங்களைச் சேர்ந்த 532 உறுப்பினர்கள் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

கடந்த 23 ஆம் திகதி கைவேலி கணேசா வித்தியாலயத்தில் குடும்ப பதிவுகள் மேற்கொள்ளப்பட்ட பின் இக்குடும்பங்கள் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளன.


யுத்தத்தால் இடம்பெயர்ந்து நண்பர்கள், உறவினர்கள் வீடுகளில் தங்கியிருந்தவர்களே பதிவுகள் மேற்கொள்ளப்பட்ட பின் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர்.

இதில் இரணைப் பாலை கிராமத்தில் 2 குடும்பங்களை சேர்ந்த 9 உறுப்பினர்களும் கோம்பாவில் கிராமத்தில் 7 குடும்பங்களை சேர்ந்த 18 உறுப்பினர்களும் மல்லிகைத்தீவு கிராமத்தில் 120 குடும்பங்களை சேர்ந்த 384 உறுப்பினர்களும் புதுக்குடியிருப்பு கிழக்கு கிராமத்தில் 26 குடும்பங்களை சேர்ந்த 84 உறுப்பினர்களும் சிவநகர் கிராமத்தில் 3 குடும்பங்களைச் சேர்ந்த 11 உறுப்பினர்களும் வள்ளிபுனம் கிராமத்தில் 3 குடும்பங்களை சேர்ந்த 8 உறுப்பினர்களும் தேவிபுரம் கிராமத்தில் 6 குடும்பங்களை சேர்ந்த 18 உறுப்பினர்களுமே இவ்வாறு பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

(அ-3-267)

# குற்றங்களுடன் தொடர்புடைய 240 பேர் பொலிஸாரால் கைது

## யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள யாழ்ப்பாணம், கே.கே.எஸ். பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பொலிஸார் கடந்த வாரம் மேற்கொண்ட நடவடிக்கையின் போது குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய 240 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரீ குகனேசன் தெரிவித்துள்ளார். அவரது அலுவல கத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற உடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்தவிடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த வாரத்தில் யாழ்ப்பாணப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பொலிஸ் நிலையங்களினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போது நீதி மன்றங்களினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட, குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரிலும் 155 பேர் கைது செய்யப்பட்டதோடு கே.கே. எஸ்.பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொலிஸ் நிலையங்களினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போது நீதி மன்றங்களினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட, குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 85 பேரும் மொத்தமாக 240 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் நீதி மன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர். இதில் பலர் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளதோடு பிணையில் செல்லவும் அனுமதிக் கப்பட்டு ள்ளனர். மேலும் யாழ்.மாவட்டத்தில் கடந்த வாரத்தில் பாரிய குற்றச் செயல்கள் கட்டுப்படுத்தப்பட் டுள்ளதாகவும் எதிர்காலத்தில் பாரிய குற்றச் செயல்களைக் கட்டுப் படுத்த பொலிஸார் தொட ர்ந்து நடவடிக்கை மேற்கொள்வர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(அ-4-தி)




★ 1689-ரஷ்யாவுக்கும் சீனாவின் சிங் பேரரசுக்கும் இடையில் நெர்ச்சின் ஸ்க் உடன்பாடு எட்டப்பட்டது.

★ 1776- பிரித்தானியப் படைகள் லோங் தீவில் ஜோர்ஜ் வோஷிங்டன் தலைமையிலான அமெரிக்கப் படைகளைத் தோற்கடித்தன.

★ 1812-ஆஸ்திரியா, ரஷ்யா மற்றும் புரூசியா படைகளை நெப்போலியன் டிறெஸ்டென் என்ற இடத்தில் தோற்கடித்தான்.

★ 1816-அல்ஜியேர்ஸ் மீது பிரித்தானியா குண்டுத் தாக்குதலை மேற்கொண்டது.

★ 1828- ரஷ்யப் படை அக்கால்சிக் என்ற இடத்தில் துருக்கியப் படைகளை வென்றது.

★ 1828-பிரேசிலுக்கும் ஆர்ஜெண்டீனாவுக்கும் இடையில் இடம்பெற்ற சமரசப் பேச்சுக்களில் உருகுவாய் தனி நாடாக அறிவிக்கப்பட்டது.

★ 1859-பென்சில்வேனியாவின் டிட்டுஸ்வில் என்ற இடத்தில் பெற்றோலியம் கண்டுபிடிக்கப்பட்டது. இதுவே உலகில் வெற்றிகரமாகத் தோண்டப்பட்ட முதலாவது எண்ணெய்க் கிணறு ஆகும்.

★ 1881-புளோரிடாவில் இடம்பெற்ற சூறாவளியினால் 700 பேர் வரையில் இறந்தனர்.

★ 1883-இந்தோனேசியாவில் கிரகட்டோவா எரிமலைத் தீவு வெடித்ததினால் உருவாகிய ஆழிப்பேரலையினால் ஜாவா, சுமாத்திரா தீவுகளில் பல இடங்கள் அழிந்தன. கிட்டத்தட்ட 36 ஆயிரம் பேர் உயிரிழந்தனர்.

★ 1893- ஐக்கிய அமெரிக்காவில் கடல் தீவுகளில் இடம்பெற்ற சூறாவளியில் ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்தனர்.

★ 1896-ஆங்கிலோ- சன்சிபார் போர்: ஐக்கிய இராச்சியத்துக்கும் சன்சிபாருக்கும் இடையில் இடம்பெற்ற போர் உலகின் மிகக்குறைந்த நேரத்தில் (09:02-09:40) நிகழ்ந்து முடிந்த போராகும்.

★ 1916- முதலாம் உலகப் போர்: ருமேனியா ஆஸ்திரியா- ஹங்கேரியுடன் போரை அறிவித்தது. இது பின்னர் ஜேர்மனி பல்கேரியப் படைகளினால் ஆக்கிரமிக்கப்பட்டது.

★ 1921- 1916 இல் ஓட்டோமான் பேரரசுடன் போரிட்ட செரீப் உசைன் பின் அலி என்பவரின் மகனை பிரித்தானியர் ஈராக்கின் மன்னனாக ஈராக்கின் முதலாம் பைசல் என்ற பெயரில் அறிவித்தனர்.

★ 1928- போருக்கெதிராக கெலொக்- பிறையண்ட் உடப்பாட்டில் 60 நாடுகள் கைச்சாத்திட்டன.

★ 1939-உலகின் முதலாவது ஜெட் விமானம் (Heinkel He 178 சேவைக்கு விடப்பட்டது.

★ 1943- இரண்டாம் உலகப் போர்: ஜப்பானியப் படைகள் நியூஜோர்ஜியாதீவை விட்டு விலகின.

★ 1952- லக்சம்போர்க்கில் மேற்கு ஜேர்மனிக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் போர் நட்டஈடு தொடர்பாக உடன்பாடு ஏற் பட்டது. இதன்படி ஜேர்மனி 3 பில்லியன் டொச்சு மார்க்கை நட்டஈடாகச் செலுத்த ஒப்புக் கொண்டது.

★ 1957- மலேசியாவின் அரசியலமைப்பு சாசனம் அமு லானது.

★ 1962-நாசா மரைனர் 2 விண்கலத்தை வீனஸ் நோக்கி செலுத்தியது.

★ 1975- போர்த்துக்கீசத் திமோரின் ஆளுநர் அதனாட்சியை கிளர்ச்சியாளர்களிடம் கைவிட்டு தலைநகர் திலியை விட்டு அட்டாவுரோ தீவுக்குத் தப்பி ஓடினார்.

★ 1979-அயர்லாந்தில் விடுமுறையைக் கழித்துக் கொண்டிருந்த மவுண்ட்பேட்டன் பிரபுவும் மற்றும் மூவரும் ஐஆர்ஏயின் குண்டு வெடிப்பில் உயிரிழந்தனர். மேலுமொரு குண்டுவெடிப்பில் 18 பிரித்தானியப் படையினர் உயிரிழந்தனர்.

★ 1982-துருக்கிய இராணுவ உயர் அதிகாரி அடில்லா அட்லிகாட் என்பவர் கனடாவின் ஒட்டாவாவில் சுட்டுக் கொல்லப்பட்டார். 1915 ஆம் ஆண்டில் 1.5 மில்லியன் ஆர்மீனியர்கள் படுகொலை செய்யப்பட்டமைக்கு பழிவாங்கவென இத்தாக்குதலை நடத்தியதாக ஆர்மீனிய தீவிரவாதக் குழு இதற்கு உரிமை கோரியது.

★ 1985-நைஜீரியாவில் நிகழ்ந்த இராணுவப் புரட்சியில் அந்நாட்டு அரசு கவிழ்க்கப்பட்டது.

★ 1991-சோவியத் ஒன்றியத்தில் இருந்து மால்டோவா பிரிந்தது.

★ 2000-மொஸ்கோவின் ஒஸ்டான்கினோ கோபுரம் தீப்பற்றியதில் 3 பேர் உயிரிழந்தனர்.

★ 2003-செவ்வாய்க்கோள் பூமிக்கு மிக அண்மையாக 55,758,006 கிலோ மீற்றர் தூரத்துக்கு 60 ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் வந்தது.

★ 2006-அமெரிக்காவின் கென்டக்கியில் புளூகிராஸ் விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட விமானம் சிறிது நேரத்தில் தரையில் வீழ்ந்து நொருங்கியதில் 50 பேரில் 49 பேர் உயிரிழந்தனர்.

★ 2006-பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாநில முன்னாள் முதல்வர் நவாப் அக்பர் பக்டி இராணுவத் தாக்குதலில் உயிரிழந்தார்.

### பிறப்புக்கள்

★ 1770- ஹெகல், ஜேர்மன் மெய்யியல் அறிஞர் (இ.1831)

★ 1876-தேசிக விநாயகம்பிள்ளை, கவிமணி (இ.1954)

★ 1908-தண்டபாணி தேசிகர், கர்நாடக இசைப் பாடகர்

★ 1908-டொன் பிறட்மன், அவுஸ்திரேலியத் துடுப்பாளர் (இ.2001)

★ 1942-வலேரி பொல்யாக்கொவ், உருசிய விண்வெளி வீரர்

★ 1972-தி க்ரேட் காளி, இந்திய தொழில்முறை மல்யுத்த வீரர், நடிகர்

### இறப்புக்கள்

★ 1879-ரோலண்ட் ஹில், நவீன அஞ்சல் சேவையைக் கண்டுபிடித்தவர் (பி.1795)

★ 1963- டபிள்யூ இ.பி.டுபோய்ஸ், ஆபிரிக்க அமெரிக்க மனித உரிமையாளர் (பி.1868)

★ 1975-முதலாம் ஹைலி செலாசி, எதியோப்பிய மன்னன் (பி.1892)

### ரோலண்ட் ஹில்



ரோலண்ட் ஹில் நவீன அஞ்சல் சேவையைக் கண்டுபிடித்தவர் என்ற பெருமைக்குரியவர் ஆவார். இவர் இங்கிலாந்தின் வோசெஸ்டர்ஷயரிலுள்ள கிடெர்மின்ஸ்டெர் என்னுமிடத்தில் பிறந்தார்.

ரோலண்ட்ஹில்சிலகாலம் ஆசிரியராகப் பணியாற்றினார். 1837ஆம் ஆண்டு தனது 42ஆவது வயதில் தபால் அலுவலகச் சீர்திருத்தம்: இதன் முக்கியத்துவமும் நடைமுறைச்சாத்தியமும் என்ற அவரது பிரபலமான பிரசுரத்தை வெளியிட்டார். இப் பிரசுரத்தில் அவர் அதிகாரப் பூர்வ, முன்னரே அச்சடிக்கப்பட்ட கடித உறைகளையும் ஒட்டத்தக்க தபால்தலைகளையும் வெளியிட வேண்டிய அவசியத்தை எடுத்துக்காட்டினார். பிரித்தானியத் தீவுகளுக்குள் எந்த இடத்துக்கும் அரை அவுன்ஸ் நிறையுள்ள தபாலை அனுப்பு வதற்குக் குறைந்த சீரானகட்டணமான ஒரு பென்னியை அறவிடவேண்டுமெனவும் அவர் ஆலோசனை வழங்கினார்.

இதற்கு முன்னர் தபால்விநியோகம் செய்யப்படவேண்டிய தூரத்தையும் கடிதத்தின் தாள்களின் எண்ணிக்கைக்கும் ஏற்பவே கட்டணம் அறவிடப்பட்டது. ரோலண்ட் ஹில்லின் ஆலோசனைப்படி ஒரு பென்னி கட்டணம் குறிப்பிட்ட நிறைக்கு உட்பட்ட கடிதமொன்றை நாட்டின் எந்த மூலைக்கும் அனுப்ப முடிந்தது. முன்னர் தபால் கட்டணம் 4D இற்கு கூடுதலாக இருந்தது.எனினும் சேவைக்கான கட்டணத்தைச் செலுத்துவது அனுப்புநரா, பெறுநரா என்ற பிரச்சினை தீர்க்கப்படாமல் தொடர்ந்தும் விருப்பத்திற்குரியதாகவே இருந்து வந்தது.

குறைந்த கட்டணம் எழுத, வாசிக்கத் தெரிந்த கூடுதலானவர்கள் தபால்சேவையைப் பயன்படுத்த வழிசெய்தது. 1840 மே 6 ஆம் திகதி முதலாவது தபால்தலை வெளியிடப்படுவதற்கு முன்னரே அதே யாண்டு ஜனவரி 10ஆம் திகதி முன்கட்டணம் செலுத்தப்படக்கூடிய கடிதவுறையுடன் சீரான பென்னி தபால்சேவை ஆரம்பித்துவைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சு பதவியை துறக்குமாறு ஹக்கீமுக்கு தொடர் அழுத்தம்

அமைச்சர் பதவியை துறக்குமாறு ஸ்ரீல ங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நீதி அமைச்சரமான ரவூப் ஹக்கீமுக்கு அழு த்தம் பிரயோகிக்கப்பட்டு வருவதாக தெரிவிக் கப்படுகிறது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அதி உயர் பீடத்தினால் இவ்வாறு அழுத்தம் பிர யோகிக்கப்பட்டு வருகின்றது.

கிழக்கு மாகாண தேர்தல் பிரசார பணிகள் சூடு பிடித்திருக்கும் சந்தர்ப்பத்தில் இவ்வாறு அழுத்தம் பிரயோகிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே கட்சியின் சிரேஷ்ட தலைவர் களில் ஒருவரான பசீர் சேகுதாவூத் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

அமைச்சரவையில் அங்கம் வகித்துக் கொண்டு தேர்தல் மேடைகளில் அரசாங்க த்தை விமர்சனம் செய்வது நகைப்பிற்குரி யது என உயர் பீடம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த அழுத்தம் காரணமாக ஹக்கீம் விரைவில் மிக முக்கியமான தீர்மானம் ஒன்றை எடுப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. ஹக்கீம் பதவிவிலக மறுத்தால் அவரது பிரச ன்னம் இன்றி தேர்தல் பிரசாரத்தை மேற் கொள்வது குறித்தும் கட்சியின் அதி உயர் பீடம் கவனம் செலுத்தி வருகின்றது என தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# ஐ.ம.சு.க. உறுப்பினர் விநோதன் மீது தாக்குதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிக் குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட செட்டிபாளை யம் பகுதியில் தேர்தல் பிரசாரப் பணிகளில் ஈடுபட்டிருந்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்ட மைப்பின் உறுப்பினர் மீது தாக்குதல் நடத் தப்பட்டுள்ளது.

செட்டிபாளையத்தில் நேற்று முன்தினம் இரவு முன்னாள் முதலமைச்சரும் ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பின் வேட்பாள ருமான சிவநேசதுரை சந்திரகாந்தனின் தேர்தல் பிரசாரக்கூட்டம் நடந்துள்ளது.

இந்நிலையில் குறித்த பகுதியில் தேர்தல் பிரசாரப்பணிகளில் ஈடுபட்டிருந்த ஒருவரை மோட்டார் சைக்கிளில் வந்தோர் வழிமறித்து தாக்கியுள்ளதாக அக்கட்சியை சேர்ந்தவர்கள் தெரிவித்தனர். இச்சம்பவத்தின் போது வாழைச் சேனை பேத்தாழையை சேர்ந்த சாமித்தம்பி விநோதன் (வயது 27) என்பவரே காயமடைந் துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள் ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரி வித்தன.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர் களே தம்மீது தாக்குதல் நடத்தியுள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பினர் குற்றஞ்சாட்டியுள்ளனர். (அ-2)

# மாற்றுதிறனாளிகளின் மேம்பாட்டுக்கு உதவி

(பூந்தோட்டம்)

செட்டிகுள பிரதேச செயலக பிரிவில் மாற்றுதிறனுடைய குடும்பங்களின் வாழ்வாதா ரத்தை மேம்படுத்தும் உதவி திட்டத்தினை சர்வதேச தொழிலாளர் நிறுவனம் நடைமுறைப் படுத்தி வருகிறது.

பிரதேச செயலாளர் ந.கமலதாசின் மேற்பார்வையின் கீழ் சமூகசேவை உத்தியோகத்தர் செ.சிறினிவாசன் இணைப்பாளராக செயற்பட்டு வரும் இந்த செயற்றிட்டத்தில் வறுமைக் கோட்டிற்குட்பட்ட குடும்பங்கள், கணவனை இழந்த பெண்கள், உடல் ஊனமுற்ற குடும்பங் கள், தாய்-தந்தையை இழந்த பிள்ளைகள் உள்ள குடும்பங்களின் வாழ்வை மேம்படுத் துவதற்கென இவ்வாறான உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதன்போது அவர்களின் சுயதொழில் முயற்சிக்கான உபகரணங்கள் உட்பட அதற்கான பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-9-266)

# கொழும்பு பங்குச்சந்தை முறைகேட்டு தரவுகளை வெளியிட விரும்புகிறேன்

## பங்குச்சந்தையின் முன்னாள் தலைவர் திலக்

கொழும்பு பங்குச்சந்தையில் இடம் பெற்ற தாக கூறப்படும் முறைகேடுகள் தொடர்பான தகவல்களையும் புள்ளிவிபரங்களையும் என்றாவது ஒருநாள் வெளிப்படுத்துவதற்கு தான் விரும்புவதாக பிணையங்கள் பங்கு பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தலைவர் பதவியிலிருந்து இராஜினாமா செய்த திலக் கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

பங்குச்சந்தையில் இடம்பெற்றதாக கூறப் படும் வெண்ணிற ஆடை குற்றங்கள் தொடர் பான விசாரணைகள் கிடப்பில் போடப்பட்டால் இக்குற்றங்களை புரிந்தவர்களின் பெயர் களை திலக் கருணாரட்ன வெளியிடுவாரா என கேட்டபோதே அவர் இவ்வாறு கூறியுள் ளார்.

கடந்த 2010 ஜுன் மாதத்திற்கும் டிசம்பர் மாதத்திற்கும் இடையில் கொழும்பு பங்குச் சந்தையில் நடைபெற்ற விடயங்கள் பகல் கொள்ளைகளாகும் என அவர் கூறினார்.

பெறுமதியற்ற பங்குகளின் விலைகளை தமக்கு நெருக்கமான தரகர்கள் மூலம் முறை கேடாக தன்னிச்சையாக அதிகரித்து அத்தர கர்கள் மூலம் அப்பங்குகளை அப்பாவி முதலீட்டாளர்கள் வாங்கச் செய்ததாகவும் அவர் கூறினார்.

அரச துறையிலுள்ள மிக நேர்மையான பல தொழில் வாண்மையாளர்கள் அழுத்தம் காரணமாக தமது பதவிகளிலிருந்து விலகிச் சென்றுள்ளதாகவும் இது தொடர்பாக குழப்ப மொன்றை ஏற்படுத்துவதற்கு தன்னால் மாத்திரம் முடிந்துள்ளதாகவும் அவர் தெரி வித்தார்.

தவறு செய்வதாக குற்றம் சுமத்தப்பட்ட பலர் அதிகாரத்திலுள்ளவர்களின் ஆதரவு காரணமாக பதவியில் நீடிக்கின்றனர் என அவர் கூறினார்.

உதாரணமாக மத்திய வங்கி பொருளிய லாளர் ஒருவரினால் நிர்வகிக்கப்படுகிறது. வேண்டிய நிலையில் கணக்காளர் ஒருவரால் நிர்வகிக்கப்படுகிறது. இப்போது அனைத்தும் விழும்நிலையில் உள்ளதாக தென்படுகிறது மத்திய வங்கி ஆளுநரால் வெகுவாக ஆதரிக் கப்பட்ட பொதுநலவாய போட்டிகளை நடத்து வதற்கான உரிமை எமக்கு கிடைத்திருந்தால் என்ன நடக்கும் என எண்ணும் போது நடுங் குகிறது என அவர் கூறியுள்ளார். (அ-2)

# போலி கடவுச்சீட்டில் ஆட்களை அனுப்பிய சந்தேக நபர் கைது

(கொழும்பு)

போலியான வெளிநாட்டு கடவுச் சீட்டுக் களை தயாரித்து ஆட்களை ஜப்பானுக்கு அனுப்பும் பாரிய சட்டவிரோத நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாக தகவல்கள் வெளி யாகியுள்ளன.

குறித்த சட்டவிரோத நடவடிக்கைகள் தொட ர்பான பிரதான சந்தேக நபர் நேற்று முன் தினம் பேலியகொடை பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

கடந்த 2 மாதங்களில் ஜப்பானுக்கு சென்ற 9 பேர் வரை போலியான விசா அனுமதி பத்திரத்தை வைத்திருந்த நிலையில் மீண்டும் இலங்கைக்கு திருப்பியனுப்பப்பட்டுள்ளனர்.

குற்ற விசாரணை பிரிவினர் மேற்கொ ண்ட விசாரணைகளின் அடிப்படையில் இந்த பாரிய ஆட்கடத்தல் நடவடிக்கை கண்டறி யப்பட்டுள்ளது.

இதேவேளை, ஜப்பான் தூதுவராலயத் தின் ஊடாக செல்லாமல் சட்டவிரோதமான முறையில் ஜப்பான் சென்று திருப்பியனுப்பப் பட்டவர்கள் இருந்தால் 011 22 53174 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு முறையிடுமாறு பொலிஸ் ஊடகப்பேச்சாளர் கோரியுள்ளார். (அ-2)

# இலங்கை தமிழர்களுக்கு வாழ்வுரிமை கிடைக்கும்

## கனிமொழி நம்பிக்கை

(கொழும்பு)

இலங்கை படையினருக்கு இந்தியாவில் எங்குமே பயிற்சி கொடுக்கக் கூடாது என்று தி.மு.க. எம்.பி. கனிமொழி வலியுறுத்தியுள் ளார். நாகர்கோவிலில் செய்தியாளர்களை சந்தித்த போது அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

டெசோ மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை தமிழகம் முழுவதும் பொதுக்கூட்டங்கள் நடத்தி மக்கள் மத்தியில் எடுத்துச் சொல்ல வேண்டும் என தி.மு.க. தலைவர் கருணாநிதி உத்தரவிட்டுள்ளார்.

இதன்பேரில் நாகர்கோவிலில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் பேசுவதற்காக இங்கு வந்துள்ளேன்.

டெசோ மாநாட்டு தீர்மானங்களை ஐ.நா சபையின் பார்வைக்கும் கொண்டு செல்ல முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான ஏற் பாடுகளை தி.மு.க. தலைவர் கருணாநிதி செய்து வருகிறார்.

இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு வாழ்வுரிமை கிடைக்கும் என்ற நம்பிக்கை எங்களுக்குள்ளது. இந்தியாவில் இலங்கை இராணுவத்தினருக்கு பயிற்சி கொடுக்கக் கூடாது. மறைமுகமாக எங்காவது பயிற்சி அளிக்கப்பட்டால் அது தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்றார். (அ-2)



அகில இலங்கை திருமுறை மன்றம் நடத்திய திருமுறைப்பெருவிழா அண்மையில் யாழ்.கந்தர்மடம் ஸ்ரீ செல்வநாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் திருநெறிய தமிழிசை மாமணி புகுமுக பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் களுக்கான சான்றிதழ், பரிசில் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. இதில் பரிசில் பெற்ற மாணவர்களை படத்தில் காணலாம்.

# ஹஜ் யாத்திரை செல்ல 5200 பேர் தெரிவாகினர்

(கொழும்பு)

2012 ஆம் ஆண்டுக்கான ஹஜ் பயண த்திற்கான கட்டுப்பாடு விலை அறிவிக்கப்பட் டுள்ளது. இதற்கமைய 4இலட்சத்து25 ஆயிரம் ரூபா ஹஜ் பயணத்திற்கான கட்டுப்பாடு விலை என ஹஜ் விவகாரங்களுக்கான சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி அறிவித்துள்ளார்.

குறித்த கட்டுப்பாட்டு விலைக்கு மேலதி கமாக கட்டணம் அறவிடும் ஹஜ் முகவர்களு க்கு எதிராக சட்டநடவடிக்கைஎடுக்கப்படும் என சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி தமிழ்மிரர் இணையத்திற்கு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக் கையில்,

இலங்கையிலிருந்து 2012 ஆம் ஆண்டு ஹஜ் பயணத்தினை மேற்கொள்வதற்காக 6 ஆயிரத்து 245 பேர் முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்திற்கு விண்ணப்பித்திருந் தனர். இவர்களிடையே நடத்தப்பட்ட நேர்முக பரீட்சையின் ஊடாக சுமார் 5 ஆயிரத்து 200 பேர் இம்முறை ஹஜ் பயணத்தை மேற் கொள்ள தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஹஜ் பயணத்தினை மேற்கொள்வதற்கு தகுதியானவர்கள் என தெரிவித்து முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்தினால் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

குறித்த கடிதத்தை அடிப்படையாக கொண்டு ஹஜ் யாத்திரிகர்கள் தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ள முடியும். குறித்த கடிதங்கள் கிடைக்காதவர்கள் முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்தினை தொடர்பு கொள்ள முடியும்.

அத்துடன் ஹஜ் விசாவிற்காக குறித்த கடிதத்துடன் விண்ணப்பிக்கும் ஹஜ் முகவர் களுக்கு மாத்திரமே விசா வழங்கப்படும். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வரலாறு

22


# துட்டகாமினி மன்னன்



துட்டகாமினி-சிலை

அம்பதீர்த்தத்தைக் கைப்பற்றிய பின்னர், சர்ப்பக்கோட்டை என்ற படையரணைத் துட்டகாமினி வெற்றி கொண்டான். அங்கு அகப்பட்ட ஏராளமான செல்வத்தைப் படை வீரரிடையே பங்கிட்டளித்தான். மகாவலி கங்கையின் வலதுகரையோரமாக முன்னேறிய சிங்களப் படை தமிழரின் பல அரண்களைத் தகர்த்து வெற்றி கொண்டு விஜிதபுரத்தை (பொலநறுவை) சென்றடைந்தது. எல்லாளனின் விஜிதகமக் கோட்டை மிகவும் வலிமையானது. உயர்ந்த மதில்களையும் காவற் கோபுரங்களையும் கொண்டது. அகழிகளினால் சூழப்பட்டிருந்தது. விஜிதபுரத்தைக் கைப்பற்றுவதற்கு சிங்களப்படைக்கு நான்கு மாதங்கள் எடுத்தன. அதனை அடுத்து அனுராதபுரத்தை நோக்கி முன்னேறிய சிங்களப்படைகளை கிரிலகம், மகிள நகரம் எனுமிடங்களில் எல்லாளனின் படை தாக்கித் தோல்வி கண்டது. துட்டகாமினி அதன் பின்னர் காசபர்வதம் எனுமிடத்தில் பாசறை அமைத்து ஒய்வெடுத்துக் கொண்டான். உருகுணையில் இருந்து படைகள் புறப்பட்டு ஓராண்டுக்கு மேலாகியிருந்தது. படைகளில் பலத்த அழிவுகள் ஏற்பட்டிருந்தமையால் வீரர்களுக்கு ஆறுதலளிக்க வேண்டி, காசபர்வதத்தில் பாசறை அமைத்துத் தங்கினான். உருகுணையிலிருந்து ஆளணியைப் பெறவும் உணவுப் பொருட்களைப் பெறவும் இந்த ஓய்வு தேவைப்பட்டது.

அனுராதபுரத்திலிருந்து தென்கிழக்கே 18 மைல்கள் தூரத்தில் காசபர்வதம் அமைந்திருந்தது. எல்லாளனின் பிரதான படைத் தளபதிகளும் வீரர்களும் சிங்களப் படைகளை எதிர்கொள்ளத் தயாராகினர். காசபர்வதப் பாசறையைத் தீகஜந்துவின் தலைமையில் தமிழர் படை தாக்கியது. துட்டகாமினி போல வேடமிட்ட பல உருவங்கள் ஆங்காங்கு போரிட்டன.




அதனால் 'உண்மையான துட்டகாமினியை அடையாளம் காண முடியவில்லை. தமிழர் தளபதி உண்மையான துட்ட காமினியை அடையாளம் கண்டு அவனை ஆவேசத்தோடு நெருங்கிய வேளை, இடையில் புகுந்த சிங்கள தளபதி சூரமல்லனால் கொல்லப்பட்டான். தீகஜந்துவின் மரணத்தின் பின்னர் தமிழர் படை தோல்வியைத் தழுவி பின் வாங்கியது.

சிங்களப் படைகள் அனுராதபுரத்தை நோக்கி முன்னேறின. அனுராதபுரம் முற்றுகையிடப்பட்டது. எல்லாளன் தனது அமைச்சரவையைக் கூட்டி ஆலோசனை நடாத்தினான். தானே எஞ்சியுள்ள தமிழர் படையை நடாத்திச் செல்வதென எல்லாளன் முடிவு செய்தவேளை துட்டகாமினியிடமிருந்து ஓர் அறைகூவல் தூதுவன் மூலம் விடுக்கப்பட்டது. எல்லாளனைத் தனிச் சமருக்கு துட்டகாமினி அழைத்தான் அந்த சவாலை எல்லாளன் ஏற்றதன் மூலம் பெரும் தவறு செய்தான். எல்லாளன் 72 வயதடைய முதியவன். துட்டகாமினியோ துடிப்பான இளைஞன். துட்டகாமினி தனிச் சமருக்கு அழைத்தமைக்கும் எல்லாளன் ஏற்றமைக்கும் பல காரணங்கள் இருக்கலாம். உருகுணையிலிருந்து சிங்களப்படை புறப்பட்டு ஓராண்டாகியிருந்தது. பெரும் இழப்பும் களைப்பும் அடைந்திருந்தது. அதேபோலவே தமிழர் படையின் நிலையும் இருந்தது. வெற்றிக் கனி எவருக்குககிடைக்குமெனத் தெரியாத நிலையில், இருமன்னர்களும் தனிச் சமருக்கு ஒப்புக்கொண்டனர் என ஊகிக்கலாம்.


எல்லாளன் ஆயுத பாணியாகத் தன் மகாபர்வதம் என்ற யானையில் ஏறி அநுராதபுரத்தின் தென்வாயிலை அடைந்தான். துட்டகாமினி தன் கண்டுலன் என்ற யானையிலேறி அவனை எதிர்கொண்டான். இருவருக்கும் கடும் சமர் மூண்டது. ஆயுத யுத்தத்தில் எல்லாளனின் பலமோங்கியிருந்தமையால் துட்டகாமினி தனது யானையைத் தூண்டி, எல்லாளனின் யானையைத் தாக்கினான். கண்டுலன் தனது வலிமையான தந்தங்களினால் மகாபர்வதத்தைத் தாக்கியது. மகாபர்வதம் நிலத்தில் சரிந்தபோது துட்டகாமினி வீசிய வேல் எல்லாளனைத் தாக்கியது. தமிழ் மன்னன் நிலத்தில் சரிந்து வீழ்ந்தான். தனது தனிப்பட்ட வீரம், வெற்றி என்பவற்றுடன் தமிழ் ஈழக்குடி மக்களின் வீரம், வெற்றி, நல்வாழ்வு என்பவற்றைத் தொடர்புபடுத்தியமையால், எல்லாளனின் தனிச்சமர் தமிழ் ஈழ மக்களின் தோல்வியாயிற்று. தமிழரசு தோல்வியுற அனுராதபுரத்தில் சிங்கள அரசு எழுந்தது. எல்லாளன் மரணமடைந்து விழுந்ததும் அவன் உடல் அரச மரியாதைகளுடன் தகனம் செய்யப்பட்டது. அவ்விடத்தில் நினைவுச் சின்னமாக சைத்தியம் ஒன்றைத் துட்டகாமினி கட்டுவித்தான். அவ்விடத்தினைக் கடக்கும் பயணிகள் இறங்கி மரியாதை செலுத்திச் செல்ல வேண்டும். வாத்தியங்கள் முழங்காது, அமைதியாகச் செல்ல வேண்டும் என்ற கட்டளை நெடுங்காலம் பின்பற்றப்பட்டது. எந்த மனிதனாயினும் அவன் இளவரசனாக இருந்தாலும் சரி, சாதாரண குடிமகனாக இருந்தாலும் சரி, இந்த வழியாகச் சிவிகையிலோ, மூடுபல்லக்கிலோ வரநேர்ந்தால் வாத்தியவொலி எழுப்பக்கூடாது. அமைதியாகக் கடக்க வேண்டும் என ஒரு தூணில் பொறித்து வைத்தான். அதற்கிணங்க யானைகள் மீது சென்றவர்கள் இறங்கி நடந்தனர். மேள வாத்தியங்களுடன் ஊர்வலம் சென்றவர்கள் இந்த ஞாபகச் சின்னத்தைக் கடக்கும் போது வாத்தியங்களை நிறுத்தி மரியாதை செலுத்தினர்.

விஜிதபுரம் கோட்டையில், தளபதி திக்கஜனின் மரணம் நிகழந்ததும், எல்லாளன் தனது மருமகன் பாலுகன் என்பவனுக்கு, படையுடன் வருமாறு செய்தி அனுப்பினான். இவனுடைய படை 8000 வீரர்களுடன் எல்லாளன் இறந்து ஏழாம் நாள் மகாதீர்த்தத்தை வந்தடைந்தது. அப்படையை துட்டகாமினியின் வீரர்கள் தோல்வியடையச் செய்தனர். எனவே, உத்தரதேசத்திலிருந்து (பூநகரி) பாலுகன் படையெடுத்து வந்திருக்க வேண்டும் எனத் துணியலாம். அதன் பின் துட்டகாமினி அனுராதபுரத்தில் முடிசூடிக்கொண்டான். அவன் சிம்மாசனம் ஏறுவதற்கு முன் இலங்கையின் பல பகுதிகளிலும் ஆட்சி செய்த 32 தமிழ்க் குறுநில மன்னர்களை வெற்றி கொள்ள நேர்ந்தது.

(தொடரும்)



எல்லாளனின் விழ்ச்சிக்குப்பின் அமைக்கப்பட்டது -ருவான்வெலிசய





துட்டகாமினி-சிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் மக்களுக்கு சலுகை செய்கிறேனா? நிரூபித்தால் பதவி விலகவும் தயார்

## அமைச்சர் றிசாத் ஆயருக்கு சவால்





(கொழும்பு)

மன்னார் ஆயர் மரியாதைக்குரிய ராயப்பு ஜோசப், நான் 650 அரசாங்கத் தொழில் வாய்ப்புக்களை முஸ்லிம்களுக்கு மட்டும் வழங்கியுள்ளேன் என்று மீண்டும் மீண்டும் தெரிவித்து வருகிறார். அது முற்று முழுதான அப்பட்டமான பொய் என்று அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

650 அல்ல ஆறு முஸ்லிம்களுக்கு கூட நியமனங்களையும் நான் புதிதாக வழங்கவில்லை.

தொலைக்காட்சி ஒன்றில் இடம்பெற்ற நேரடி நிகழ்ச்சியொன்றின் போது எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியிருந்தார். அந் நேர்காணலில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் நியமனங்களை வழங்கியுள்ளேன் என்று ஆயர் நிரூபித்தால் அமைச்சு பதவியை இராஜினாமா செய்வதுடன் அரசியலில் இருந்தும் ஒதுங்கிவிடுவேன்.

அந்த 650 அரசாங்கத் தொழில் வாய்ப்பு சந்தர்ப்பங்களில் 19 தமிழர்களுக்கும் இரண்டு சிங்களவர்களுக்கும் தொழில்வாய்ப்பு அளிக்கப்பட்டதாகவும் ஏனைய அனைத்து சந்தர்ப்பங்களும் முஸ்லிம்களுக்கு வழங்கப்பட்டதாகவும் மன்னார் ஆயர் குறிப்பிட்டிருந்தார்.

ஒரு மதத் தலைவர் அதுவும் முக்கியமான ஒருவர் இவ்வாறு ஏன் உண்மைக்கு புறம்பானதொன்றை கூறுகின்றார். என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

இவ்வாறான பிழையான புள்ளி விபரங்களை அவருக்கு வழங்குபவர்கள் எப்படியானவர்களாக இருக்க முடியும். எனக்கும் ஆயருக்கும் தனிப்பட்ட ரீதியில் எந்தவித பிரச்சினைகளும் இருந்ததில்லை.

எப்போது வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம்களை அவர்களது சொந்த மண்ணில் மீள்குடியேற்ற ஆரம்பித்தேனோ அன்று தான் இந்த பிரச்சினை தோற்றம் பெற்றுள்ளது.

இதனது பின்னணியில் பல சக்திகள் இருப்பதாக அறிந்துகொள்ள முடிகின்றது. நான் ஒரு முஸ்லிம் என்ற வகையிலும் வடக்கில் உள்ள தமிழ் மக்கள் என்னோடு இருக்கின்றார்கள் என்ற வகையிலும் அரசாங்கத்தில் ஓர் அமைச்சராக இருக்கின்றவர் என்ற வகையிலும் என்னை பழிவாங்கும் ஒரு செயலாகவே இதனைப் பார்க்க வேண்டியுள்ளது என்றார். (அ-2)

## திருக்கேதீஸ்வரத்தில் வெடி பொருட்கள் மீட்பு

(மன்னார்)

மன்னாரின் இரண்டு இடங்களில் பாரியளவில் வெடிபொருட்களும் ஆயுதங்களும் படையினரால் மீட்கப்பட்டுள்ளன.

மன்னார் திருக்கேதீஸ்வரம், கரம்பன் ஆகிய பிரதேசங்களில் இவ்வாறு ஆயுதங்களும் வெடிபொருட்களும் மீட்கப்பட்டுள்ளன. 60 மிமி கிரனைட்கள், நான்கு சார்ஜர்கள், 15 காட்ரிஜ்கள், 20 கிரனைட்கள், 25 டெட்டனேட்டர்கள் உள்ளிட்ட பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

இறுதிக்கட்ட யுத்தத்தின்போது மறைத்து வைக்கப்பட்ட ஆயுதங்களாக இருக்கக் கூடும் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. (அ-2)

# இலங்கை ம.உ.ஆணைக்குழு தரம் குறைக்கப்பட்டது

இலங்கை மனித உரிமை ஆணைக்குழு ஏ பிரிவிலிருந்து பி பிரிவிற்கு தரம் குறைக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

மனித உரிமை பாதுகாப்பு மேம்பாடு தொடர்பான தேசிய நிறுவனத்தின் சர்வதேச இணைப்பு குழுவினால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

2010 ஆம்ஆண்டுக்கான கணக்காய்வு அறிக்கையின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆணையாளர் பதவி நியமனம் முறைப்பாடுகள் தொடர்பில் உரிமுறையில் விசாரணை செய்யாமை, வருடாந்த அறிக்கை நாடாளுமன்றிற்கு உரிய முறையில் சமர்ப்பிக்கப்படாமை போன்ற காரணிகளினால் ஆணைக்குழுவின் தரம் குறைவடைந்துள்ளது.

2006 ஆம் ஆண்டில் 2 ஆயிரம் காணாமல் போதல் சம்பவங்கள் நடைபெற்று விசாரணை நடத்தப்பட்டு ஜெனீவா மனித உரிமை குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்ட போதிலும் கணக்காய்வு அறிக்கையில் இது தொடர்பில் சிறு கடிதமொன்று மட்டுமே இணைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# பல்கலைக்கழகங்களை மீள ஆரம்பித்து கல்வி நடவடிக்கைகளை சீராக்குங்கள்

## வவுனியா வளாக மாணவர் ஒன்றியம் அரசிடம் கோரிக்கை

(பூந்தோட்டம்)

பல்கலைக்கழக விரிவுரையாளர்களால் கல்விக்கான ஒதுக்கீடு மற்றும் சம்பள உயர்வு உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து நடத்தப்படும் பணி பகிஷ்கரிப்பானது அரசாங்கத் தரப்பினரது அசம்பந்தப் போக்கினால் தீர்க்கப்படாது தொடர்ந்து கொண்டே செல்வதால் தமது கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்படுவதாகவும் தமது கல்வி நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிக்குமாறு கோரி வவுனியா வளாக மாணவர் ஒன்றியம் அறிக்கையொன்றினை கடந்த 24 ஆம் திகதி வெளியிட்டுள்ளது.

இவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் நியாயமான கோரிக்கைகளை அரசு நிறைவேற்றாது தான்தோன்றித்தனமாக செயற்படுவதால் நாட்டின் உயர்கல்வி முழுமையாக சீர்குலையும் நிலையை எட்டி உள்ளது. கல்விக்கான ஒதுக்கீட்டை அதிகரிப்பதன் மூலம் தற்கால மற்றும் எதிர்கால மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் வினைத்திறனுடன் முன்னெடுக்கவும் மேம்படுத்தவும் முடியும்.

எனவே இனிமேலும் அரசு காலம் தாமதிக்காது பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றி கல்வி நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும் என்றும் இனிவரும் காலங்களில் மாணவர்களின் உயர்கல்வியில் இவ்வாறான சீர்கேடுகளை ஏற்படுத்தி விசனத்திற்குள்ளாக்க வேண்டாம் என்றும் வவுனியா வளாக மாணவர் ஒன்றியம் இவ் அறிக்கையில் தெரிவித்துள்ளது. (அ-9-266)

# இந்திய ஏவுகணை குறித்து கவனம் செலுத்தப்படும்

இந்திய ஏவுகணைகள் தொடர்பில் கண்காணிக்கப்படும் என இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளதாக பிரபல சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தியாவின் அக்கினி ஏவுகணை இலங்கையின் ஏழு முக்கிய நிலைகளை இலக்கு வைத்து நிலைநிறுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிட்டு அமெரிக்க இணையத்தளமொன்று இந்தத் தகவலை வெளியிட்டிருந்தது.

இந்தத் தகவல் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு வருவதாக இலங்கை அரசாங்கப் பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்துள்ளனர். சீனாவுடன் இலங்கை பேணி வரும் உறவுகள் இந்தியாவை ஆத்திரமடையச் செய்துள்ளதாக அந்தப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பாக கொள்ளுப்பிட்டியில் சீனாவின் பிரபல ஆயுத உற்பத்தி நிறுவனங்களில் ஒன்றான கெடீஸ் நிறுவனத்திற்கு காணி வழங்கப்பட்டமைக்கு இந்தியா கடும் ஆட்சேபம் வெளியிட்டுள்ளது.

வன்னிப்போரின்போது இந்த சீன நிறுவனம் இலங்கைக்கு ஆயுதங்களை விநியோகம் செய்திருந்தது. ஏவுகணை விவகாரம் குறித்து அரசாங்கம் விழிப்புடன் செயற்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# ஹெரோயினுடன் ஆறுபேர் கைது

(கொழும்பு)

ஹெரோயின் போதைப் பொருட்களை தம்வசம் வைத்திருந்த 6 சந்தேகத்திற்குரியவர்கள் பொறளை மகசின் வீதியில் வைத்து பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினருடன் இணைந்து நடத்திய தேடுதல் நடவடிக்கையின் போதே இந்த கைதுகள் இடம்பெற்றுள்ளன.

பொறளை பகுதியைச் சேர்ந்தவர்களிடமிருந்து 37 கிராம் ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளது.

இதேவேளை, புத்தளம்-பிள்ளடி பகுதியில் ஹெரோயினுடன் கைதானவரிடமிருந்து 4 கிராம் 800 மில்லி கிராம் ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளது.(அ-2)

# வெளிநாட்டுக்கு பணிப்பெண்களாக அனுப்பும் நடைமுறை குறைக்கப்படும்

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைச் சிறுவர், சிறுமியரை பாதுகாக்க வேண்டியது அனைவரினதும் கடமையாகும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரி சீவலி மைதானத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டபோது அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பெண்கள் வீட்டுப் பணிப் பெண்களாக மத்திய கிழக்கு நாடுகளுக்கு அனுப்பி வைக்கும் நடவடிக்கை குறைக்கப்படும். மூன்று பிள்ளைகளின் தந்தை என்ற ரீதியில் நான் இதனைக் குறிப்பிடுகின்றேன். அதிகளவில் ஆண்களையே வெளிநாட்டுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

நல்ல பயிற்சி வழங்கி பெண்களை வெளி நாடுகளுக்கு அனுப்பி வைக்க முடியும்.

மாகாண சபைகளின் அதிகாரங்களை அதிகரிக்க வேண்டியிருப்பதனால் மக்கள் ஆளும் கட்சிக்கு வாக்களிக்க வேண்டும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (அ-2)


## APPLICATION FOR TRAINING OF PSYCHOLOGICAL COUNSELLORS

The applications are called for training of counsellors. This is a one year, week-end (Saturday & Sunday course that consists of 450 hours. The applicants should have the following prerequisites to apply for this course.

1. Knowledge of English as to read, write and understand.
2. A pass in Advanced Level
3. interested in social Activities

The applicants will have to buy a social application form our office and submit them before the 15th of Septem ber. Only 25 applicants will be selected to follow this training.


**For further details please contact:**

**"AHAVOLI"**
**INSTITUTE OF COUNSELLING PSYCHOLOGY**
**Affiliated to National University of Ireland, Galway**
**St.Patrick's Road, Jaffna.**
**Contact No:- 021 222 2856**

(274)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலவில் கால்பதித்த முதல் மனிதர் நீல்ஆம்ஸ்ட்ரோங் இயற்கை எய்தினார்



நிலவில் முதன்முதலில் காலடி எடுத்த வைத்தவர் என்ற பெருமை கொண்டிருந்த அமெரிக்க விஞ்ஞானி நீல் ஆம்ஸ்ட்ரோங் தனது 82 ஆவது வயதில் நேற்று முன் தினம் காலமானார்.

கடந்த 5 ஆம் திகதி தன்னுடைய பிறந்த நாளை கொண்டாடிய அவர் சில தினங்களு க்கு முன்னர் இருதய அறுவை சிகிச்சைக் காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட் டிருந்தார்.

உடல்நலக்குறைவு காரணமாகவே அவர் மரணமடைந்துள்ளார்.

வாழ்க்கை வரலாறு

அமெரிக்காவின் ஒகியோ மாகாணத்தில் உள்ள வாபா கோனெட்டா என்ற சிறிய நக ரில் பிறந்த ஆம்ஸ்ட்ரோங் புருடியூ பல் கலைக்கழகத்தில் பொறியியலாளர் படிப்பை முடித்த பின்னர் தன்னுடைய 30 ஆவது வயதில் நாசா விண்வெளி ஆராய்ச்சி மைய த்தில் பயிற்சி விமானியாக பணியில் சேர்ந் தார்.

தொடர்ந்து அவர் படிப்படியாக முன்னேறி தனக்கென ஒரு இடத்தை பிடித்தார். இந்நி லையில் நாசா விண்வெளி ஆராய்ச்சி மையம் நிலவு குறித்த பல்வேறு சோதனைகளை மேற்கொண்டு வந்தது. இதற்காக அப்பலோ விண்கலம் தயார் செய்யப்பட்டது. அப்பலோ ஒன்று மற்றும் இரண்டு என தயாரிக்கப்பட்டு இறுதியில் அப்பலோ 11 என்ற விண்கலம் மூலம் விண்ணில் பறந்தார்.

அமெரிக்காவின் தற்போதைய மக்கள் தொகையில் ஆறில் ஒரு பங்கு மட்டுமே கொண்டிருந்த காலகட்டத்தில் நிலவில் 1967 ஆம் ஆண்டு காலடி பதித்தார்.

நிலவில் இறங்கி நடக்க தொடங்கியுள் ளதை அடுத்து 20 நிமிடங்களுக்கு பின்னர் தன்னுடைய சக விஞ்ஞானியான புஷ் ஆலட் ட்ரின் உடன் இணைந்து நடந்து சென்று நிலவின் ஈர்ப்பு சக்தி மற்றும் பாறை மாதிரிகள் மற்றும் படங்களை எடுத்துக் கொண்டார்.

தொடர்ந்து ஆம்ஸ்ட்ரோங் தன்னுடைய விஞ்ஞானியுடன் இவை வேடிக்கையல்ல என்ற தகவலை பரிமாறிக்கொண்டார். பின் னர் பூமிக்கு திரும்பி ஆம்ஸ்ட்ரோங் நாசா விண்வெளி ஆராய்ச்சி மையத்தில் ஆராய் ச்சி மற்றும் தொழில்நுட்ப பிரிவில் ஆலோ சகராக பணிபுரிந்தார். சின்சினாட்டி பல்கலைக் கழகத்தில் இன்ஜினியரிங் பாடப்பிரிவில் பேராசிரியராக பணிபுரிந்தமையும் குறிப் பிடத்தக்கது. (அ-2)

## தொங்கிய நிலையில் ஒருவர் சடலமாக மீட்பு

(பூந்தோட்டம்)

வவுனியா எல்லப்பர் மருதங்குளத்தில் ஆணொருவரின் சடலம் தூக்கில் தொங் கிய நிலையில் நேற்று முன்தினம் மீட்கப் பட்டதாக வவுனியா பொலிஸார் தெரி வித்தனர்.

நாகையா குமார் (வயது 39) என்ற 6 பிள்ளைகளின் தந்தையே அவரது வீட்டின் முன்பாக உள்ள மரத்தில் தூக்கில் தொங் கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள் ளார்.

இந்நிலையில் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று விசாரணைகளை மேற்கொண்ட மரண விசாரணை அதிகாரி சிவநாதன் கிசோர் மருத்துவ பரிசோதனைக்கு உட்ப டுத்துவதற்காக சடலத்தினை வவுனியா பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல் லுமாறு பொலிஸாருக்கு தெரிவித்துடன் மரண விசாரணைகளின் பின்னர் தூக்கில் தொங்கியதால் ஏற்பட்ட மரணம் தற் கொலை என தீர்ப்பளித்தார். (அ-9-266)

## டெசோ தீர்மானங்கள் குறித்து மத்திய அரசிடம் வலியுறுத்துவோம்

### மத்திய இணை அமைச்சர் நாராயணசாமி

(கொழும்பு)

டெசோ மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை ஐ.நா.சபைக்கு எடுத்துச் செல்வோம் என்று தி.மு.க.தலைவர் கருணா நிதி அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கது. அதற்கு மத்திய அரசும் உறுதுணையாக இருக்கும். இதை நாங்கள் பிரதமரிடமும் காங்கிரஸ் சார்பில் வலியுறுத்துவோம் என மத்திய இணை அமைச்சர் நாராயணசாமி தெரிவித்துள்ளார்.

டில்லியில் இருந்து சென்னை விமான நிலையத்தை வந்த போது நிருபர்களுக்கு அளித்த பேட்டியிலேயே இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழக மீனவர்கள் இலங்கை இராணு வத்தால் தொடர்ந்து தாக்கப்பட்டு வருவது கவலையளிக்கிறது. இது சம்பந்தமாக இரு நாடுகளிடையே பேச்சுவார்த்தை நடத்த முயற் சித்தால் இலங்கை அரசு முட்டுக்கட்டை போடு கிறது. இந்த பிரச்சினைக்கு ஒரே தீர்வு இரு நாட்டு மீனவர் சங்கங்களும் இந்தியாவிலோ இலங்கையிலோ ஒன்றாக அமர்ந்து பேச வேண்டும். தங்களுக்குள்ள பிரச்சினைக ளுக்கு தீர்வு காண்பதோடு தங்களது கடல் எல்லைகளையும் வரையறுத்து கொள்ள வேண்டும். இப்படி செய்தால்தான் நிரந்தர தீர்வு ஏற்படும் எனவும் அவர் தெரிவித்துள் ளார். (அ-2)

## பள்ளிவாசல் உடைப்பிற்கு வெளிச்சக்திகளே காரணம்

### மாகாண சபைகளின் அமைச்சர் அதாவுல்லா கூறுகிறார்

(கொழும்பு)

இலங்கையில் பள்ளிவாசல் எதற்கும் எத்தகைய இடையூறும் ஏற்படக்கூடாது என்று உறுதியாக விரும்பும் ஒரு தலைவர்தான் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

அதனாலேதான் அவர் தனது ஆட்சிக் காலத்தில் பள்ளிவாசல் ஒன்று உடைக் கப்பட்டது என்ற அவப்பெயர் தனக்கு வரக் கூடாது என்பதில் ஆர்வமாக இருக்கின்றார் என தேசிய காங்கிரஸின் தலைவரும் உள் ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சரு மான ஏ.எல்.எம்.அதாவுல்லா தெரிவித் தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் தமது கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர் களை ஆதரித்து மூதூர் அல்ஹிலாலல் சந்தியில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசும் போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.


இங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர், ஜெனிவா பிரேரணையின் போது முஸ் லிம்கள் பள்ளிவாசல்களின் முன்னால் நின்று அரசாங்கத்திற்கு ஆதரவாக குரல் எழுப்பி னார். இதனை சகித்துக்கொள்ள முடியாத வெளிநாட்டு சக்திகளே பள்ளிவாசல்களுக்கு இடையூறாக செயற்படுகின்றன.

இலங்கை வரலாற்றில் முஸ்லிம்களுக்கு மிகக் கூடுதலாக சேவையாற்றியிருக்கும் ஒரு தலைவரே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. கட்சி என்பது குர்ஆன் ஆயத்து அல்ல. கட்சி என்பது காலத்தின் தேவை. அது மக்களின் தேவை. தலைவர் அஷ்ரப் இன்று இருந் திருந்தால் நுஆ என்ற கட்சிதான் இப்போது இருந்திருக்கும்.

எனவே தான் தேசிய காங் கிரஸை நான் உருவாக்கினேன். எனக்கு தலைவர் அஷ்ர ப்பின் ஆசீர்வாதமும் இருக்கின்றது. இந்த அதாவுல்லாவுக்கு அரசியல் இதுவரை எந்த தோல்வியையும் தரவில்லை இந்த முறை மூன்று மாவட்டங்களையும் வெற்றி கொண்டு மாகாணசபையின் ஆட்சியையும் கைப்பற் றுவோம் என்றார். (அ)

## ஜனாதிபதியின் அழுத்தம் காரணமாகவே பதவி விலகினேன்

### மனம் திறக்கிறார் திலக் கருணாரட்ன



(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே தம்மை பதவி விலகுமாறு அழுத்தம் கொடுத்ததாக கொழும்பு பங்குச்சந்தையின் தலைவர் பதவி யில் இருந்து விலகிய திலக் கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

தாம் பதவி விலகிய பின்னர் முதல் தட வையாக அவர் இந்த தகவலை வெளியி ட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி நேரடியாக தம்மிடம் பதவி விலகுமாறு கோரவில்லை. ஆனால் அவ ரின் நெருங்கிய ஒருவர் மூலமாகவே வந்த தகவலின் அடிப்படையிலேயே நான் பதவி விலகி யுள்ளேன்.

இதேவேளை கொழும்பு பங்குச்சந்தையின் நடவடிக்கைகளில் மாபியாவின் தலையீடு உள்ளதாக கருணாரட்ன குறிப்பிட்ட போதும் அந்த மாபியா அங்கத்தவர்களின் பெயர்களை வெளியிட மறுத்துவிட்டார்.

ஏற்கனவே 2011 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் அப்போதைய பங்குச்சந்தையின் தலைவராக இருந்த இந்திராணி சுகததாஸவும் பலாத்காரம் காரணமாகவே பதவி விலகினமை தெரிய வருகின்றது. அவரும் தமது பதவி விலகலுக்கு இந்த மாபியாக்களே காரணம் என்று கூறி யிருந்தார். (அ-2)

## கருத்துக்களை கருணா கூறலாம்; ஆனால் நானே முதலமைச்சர்

### என்கிறார் பிள்ளையான்

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் தமது சகோதரி யான உருத்திரமலர் ஞானபாஸ்கரனை முதலமைச்சராக்குவதற்கு பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக லக்பிம செய்தி வெளி யிட்டுள்ளது.

எனினும் தம்மை தவிர வேறு ஒருவர் கிழக்கின் முதலமைச்சராக மீண்டும் வர முடி யாது என்று பிள்ளையான் என்ற சிவநே சதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

கருணா என்ற பிரதியமைச்சர் விநாயக மூர்த்தி முரளிதரன் தமது கருத்துக்களை கூறுவதற்கு அதிகாரம் உள்ளது. அது குறி த்து தாம் குற்றம் கூறவில்லை. ஆனால் கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் முன்னணி வெற்றிபெறும்.


அதன் சார்பில் முதலமைச்சராக மீண்டும் தாமே தெரிவு செய்யப்படுவேன் என்று பிள் ளையான் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையான குடியரசு நாடாக மாறுவதற்கு

# நிறைவேற்று அதிபர் முறைமை இலங்கையில் ஒழிக்கப்படவேண்டும்

இலங்கையின் அரசியல்யாப்பு மற்றும் சட்டநிபுணரான Jayampathy Wickramaratne இணைய ஊடகமான Lanka News Web க்கு எழுதியுள்ள கட்டுரையிலிருந்து...



இலங்கையானது உண்மையான குடியரசு நாடாக திகழவேண்டுமாயின், நிறைவேற்று அதிபர் முறைமையை ஒழித்தல் மற்றும் தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காணுதல் என்பன முக்கியமானவையாகும்.

இலங்கை, குடியரசாகப் பிரகடனப் படுத்தப்பட்டு 40 ஆண்டுகள் நிறைவுற்றுள்ள நிலையில், இரண்டு குடியரசு அரசியல் யாப்புகள் தொடர்பாக மட்டும் நாம் மீளப் பார்க்காது, உண்மையான குடியரசு நாட்டை எவ்வாறு கட்டியெழுப்புதல் என்பது தொடர்பாகவும் நாம் கவனத்திற்கொள்ள வேண்டும்.

**1972 ஆம் ஆண்டு அரசியல் யாப்பு யாருடையது?**

1972 ஆண்டு அரசியல் யாப்பு கொல்வினின் பங்களிப்பைக் கொண்டிருந்ததால், இது எமது அரசியல் யாப்பு என இடதுசாரிகளில் பலர் கருதிக்கொண்டனர். இது மிக மோசமான தவறாகும்.

அரசியல் யாப்பு ஒன்று வரையப் படும்போது அரசியல் சீர்திருத்த விவகார அமைச்சரால் மட்டும் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப் பட்டதாக இருக்கக்கூடாது என கொல்வின் பின்னர் குறிப்பிட்டிருந்தார். இதன் இறுதி வரைபானது பல்வேறு அரசியற் தரப்புகளாலும் உறுதிப்படுத்தப்பட்டதாக இருக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

உண்மையில் அரசியல் யாப்பானது ஒற்றைக் கருத்தை சார்ந்ததாக இருந்தாலும்கூட, அது அவ்வாறுதான் இருக்கவேண்டும் என முத்திரை குத்தப்படக் கூடாது என கொல்வின் தெரிவித்திருந்தார்.

ஏனெனில், அரசியல் யாப்பு ஒற்றைக் கருத்தை மட்டுமே முதன்மைப்படுத்தியதாக இருந்தால், எதிர்காலத்தில் அதில் நெகிழ்வுத் தன்மையை காட்டமுடியாது என்பது கொல்வினின் கருத்தாகும். இதனால், இந்த அரசியல் யாப்பை சிறிலங்கா சுதந்திரக்கட்சி நிராகரித்தது.

பெரும்பான்மை மக்கள் பின்பற்றுகின்ற பௌத்த மதத்திற்கு அரசியல் யாப்பில் உரிய இடம் வழங்கப்பட வேண்டும் என அடிப்படைப் பரிந்துரையில் குறிப்பிடப்பட்டுள்ளதை சுட்டிக் காட்டிய சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வலதுசாரிகள், பௌத்த மதத்தை சிறிலங்கா அரச மதமாக பிரகடனப் படுத்த வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

இதன் காரணமாக, ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட அரசியல் யாப்பு நெகிழ்வுத் தன்மையை அடிப்படையாகக் கொண்டு பௌத்த மதத்திற்கு முக்கிய இடம் வழங்க வேண்டும் என்பதை கொல்வின் ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டார். இந்நிலையில் 1972 ஆம் ஆண்டு அரசியல் யாப்பானது யாருடைய அரசியல் யாப்பு என்பது தெளிவாகத் தெரிகின்றது.

**1972 ஆம் ஆண்டும், 1978 ஆம் ஆண்டும் அரசியல் யாப்புகளும் தேசியப் பிரச்சினையும்**

பிரித்தானிய ஆட்சியிலிருந்து இலங்கை முற்றுமுழுதாக விடுவிக்கப்பட்டமை, நாடாளுமன்றிற்கு அதிகாரம் வழங்கப்பட்டமை மற்றும் அடிப்படை உரிமைகள் அங்கீகரிக்கப்பட்டமை போன்றன 1972 ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் மூலம் கிடைக்கப்பெற்ற நன்மைகளாகும். 1972 ஆம் ஆண்டு அரசியல் யாப்பில் தேசியப் பிரச்சினை முதன்மைப் படுத்தப்படவில்லை. இது மிகப் பெரிய பின்னடைவாகக் காணப் பட்டது.

ஐக்கிய இலங்கைக்கு அப்பால், ஐக்கிய முன்னணியானது, வேறெந்த ஆணையையும் கொண்டிருக்காவிட்டால் அது தேர்தல் விளக்கவுரையில் குறிப்பிட்ட சில வாக்குறுதிகளையாவது நிறைவேற்ற வேண்டும் என (பெடரல்) தமிழிரசுக் கட்சியின் தர்மலிங்கம் குறிப்பிட்டிருந்தார்.

அதாவது கச்சேரி முறைமையை நீக்குவது, மாவட்ட மட்டத்தில் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படுபவர்களை நியமிப்பது போன்றவை ஐக்கிய முன்னணியால் வழங்கப்பட்ட வாக்குறுதிகளாகும்.

ஆனால், தென் இலங்கையைச் சேர்ந்த எந்தக் கட்சிகளும் இவ்வாக் குறுதிகளை நிறைவேற்றுவது தொடர்பில் விட்டக்கொடுப்புகளை மேற்கொள்ளவில்லை. பதிலாக பெடரல் கட்சியின் பரிந்துரைகளுக்கு இடையூறு விளைவிக்கின்ற நடவடிக்கைகளை இக்கட்சிகள் முன்னெடுத்தன.

இவ்வாறான விட்டுக்கொடுப்புகள் மேற்கொள்ளப்பட்டு இதன் உடன்பாடுகள் சில நிறைவேற்றப்பட்டிருந்தால், இந்நாட்டின் வரலாறு வேறு விதமாக அமைந்திருக்கலாம்.

1977 இல் மேற்கொள்ளப்பட்ட தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் விளக்கவுரையில் தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறிப்பிடப் பட்டிருந்தாலும்கூட, ஜே.ஆர். ஆட்சிக்கு வந்ததன் பின்னர் இவ்வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை. தமிழ் மக்களின் பிரச்சினைகள் கருத்தில் எடுக்கப்படாததால் பிரிவினைவாதம் உருவாக வழிகோலப்பட்டது.

இதுபோன்று ஜே.ஆர்., தான் ஆட்சிக்கு வரமுன்னர் வழங்கிய "வட்டமேசை மாநாடு" தொடர்பான வாக்குறுதி, ஆட்சிக்கு வந்த பின்னர் கைவிடப்பட்டது. பதிலாக, ஐக்கிய இலங்கை என்ற கருத்து 1978 அரசியல் யாப்பில் மேலும் வலுவூட்டப்பட்டது.

இந்திய அழுத்தம் காரணமாகவே 13 -வது திருத்தச் சட்டத்தின் ஊடாக சில சரத்துக்கள் நிறைவேற்றப் படுவதற்கு சம்மதம் தெரிவிக்கப் பட்டது. இன்று மத்திய அரசாங்கத்தின் கீழ் மாகாண சபைகள் ஆளப்படுவதுடன், வடமாகாண சபைக்கான தேர்தலை முன்னெடுப்பதற்கு இலங்கை அரசாங்கம் தயக்கம் காண்பிக்கின்றது.

**நிறைவேற்று அதிபர் முறைமை**

பூகோள ரீதியாக எழுந்த நவீன-தாராளவாதத்திற்கு ஆதரவு வழங்குவதை அடிப்படையாகக் கொண்டும் தூரநோக்குடன் ஜே.ஆர். நிறைவேற்று அதிகார முறைமையை நடைமுறைப் படுத்தினார்.

1994 இல் இடம்பெற்ற தேர்தல் பரப்புரையில் வாக்களித்தது போன்று சந்திரிக்காவால் நிறைவேற்று அதிபர் முறைமையை முடிவுக்குக் கொண்டு வர முடியவில்லை. அல்லது "மனிதாபிமான" முகத்துடன் பொருளாதார அபிவிருத்தியை முன்னெடுக்க முடியவில்லை.

தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசியல் தீர்வொன்று அவசியமானது என்பதில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரை ஏற்றுக் கொள்ளச் செய்வதில் சந்திரிக்கா வெற்றி கொள்ள முடிந்தாலும்கூட, இது தொடர்பில் நியாயமான தீர்வை இவரால் எடுக்க முடியவில்லை. ரணலின் சந்தர்ப்பவாதமும் இதில் உள்ளடங்கியிருந்தது.

ஒருவர், இருதடவைகள் இலங்கையில் அதிபராக பதவியேற்க முடியும் என்ற நடைமுறை காணப்பட்டது. 13-வது திருத்தச் சட்டமானது நிறைவேற்று அதிபர் முறைமையில் சில கட்டுப்பாடுகளை வழங்குகின்றது. நீதி மற்றும் சில முக்கிய உயர்மட்டப் பதவிகள், சுயாதீன ஆணைக்குழுக்களிற்கு நியமனம் வழங்கும்போது 17-வது திருத்தச்சட்ட நடைமுறைகள் இல இவ்வாறான நியமனங்களில் தேசிய ஒத்துழைப்பை வழங்குவதற்கான வழியை வகுத்திருந்தது.

நிறைவேற்று அதிபர் முறைமை தொடர்ந்தும் நிலைப்பதை ஆதரிக்கின்ற கட்சிகளுடன் இணைந்து இடதுசாரிக் கட்சிகள் ஒருபோதும் போட்டியிடவில்லை. 2009 இல் அதிபர் தேர்தலின் முன்னர் நிறைவேற்று அதிபர் முறைமை எதிர்காலத்தில் எவ்வாறு இருக்கும் என திஸ்ஸ விதாரண மற்றும் டி.இ. டபிள்யூ. குணசேகர ஆகியோர் ஜனாதிபதி ராஜபக்சவிடம் வினவிய போது, இந்நிறைவேற்று அதிகார முறைமையை ஒழிப்பதற்கான உடன்பாடு ஏற்கனவே எட்டப்பட்டு விட்டதாக பதிலளித்திருந்தார். எனினும், 18-வது திருத்தச் சட்டமானது இலங்கையின் நிறைவேற்று அதிபர் முறைமையை மேலும் பலப்படுத்துகின்றது.

**நாங்கள் எவ்வாறு மேலும் முன்னகர்வது?**

தற்போது தேசிய பிரச்சினையை தீர்ப்பது தொடர்பில் நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை உருவாக்குவது தொடர்பாக பேசப்படுகிறது. இந்திய அழுத்தம் காரணமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இத்தெரிவுக் குழுவில் பங்கேற்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. எனினும், தேசிய பிரச்சினை தொடர்பாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமை தெளிவான நிலைப்பாடொன்றை எட்டும்வரை, இது தொடர்பில் எவ்வித பயனுள்ள நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படாது.

தேசியப் பிரச்சினை தொடர்பாக தீர்வு எட்டுமாறு பொது அமைப்புகள் மற்றும் ஜனநாயக அமைப்புகள் இலங்கையில் காணப்படும் அனைத்து அரசியல் கட்சிகள் மீதும் அழுத்தம் வழங்கவேண்டும். இலங்கை அரசாங்கம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக்கொண்டுள்ள போதிலும், இவ்வாறான தீர்வு எட்டப்படுவதற்கு தீவிர சிங்கள வாதிகள் ஆதரவு வழங்க மாட்டார்கள். எனினும், ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் தமிழ்க் கட்சிகள் இத் தீர்வை ஆதரித்தால், இது பெரிய பிரச்சினையாக இருக்க மாட்டாது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியானது அரசியல் தீர்வொன்றை வழங்குவதில் ஆர்வமுடன் உள்ளதா? என்பதே தற்போதுள்ள கேள்வியாகும்.

அடுத்த பொதுத் தேர்தல்களில் இடதுசாரிக் கட்சிகள் மிக மோசமான பிரச்சினையொன்றிற்கு முகம்கொடுப்பர். இலங்கையானது உண்மையான குடியரசு நாடாக திகழ வேண்டுமாயின் நிறைவேற்று அதிபர் முறைமையை ஒழித்தல் மற்றும் தேசிய பிரச்சினைக்கு தீர்வு காணுதல் என்பன முக்கியமானவையாகும். அடுத்த பொதுத்தேர்தலில்களில் இவை மத்திய அரசாங்கத்திற்கு பெரும் தலைவலியைக்கொடுக்கும்.

இவ்விரு பிரச்சினைகள் தொடர்பிலும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி கவனம் எடுக்காவிட்டால் இக்கட்சியுடனான இடதுசாரிகளின் உறவில் விரிசல் ஏற்படும். நாட்டில் நிறைவேற்று அதிபர் முறைமையை ஒழித்தல் மற்றும் தேசிய பிரச்சினைக்கு அரசியற்தீர்வு காணுதல் எனபவற்றில் இடதுசாரிகள் முழுமூச்சில் ஈடுபடுவதே அவர்களின் இன்றைய கடமையாகும்.

இதற்காக அனைத்து அரசியற் கட்சிகளுக்கும் அழுத்தம் கொடுத்து இவ்விரு பிரச்சினைகளையும் தீர்வுக்குக் கொண்டு வருவதை இடதுசாரிகள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். இவற்றை அடைவதற்கு இடதுசாரிகள் மந்தமான அறிகுறிகள் மற்றும் பலவீனமான அறிக்கைகள் போன்றவற்றிற்கு அப்பால் மேலே செல்லவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாபூசணம் விருதுக்காக வவுனியா கலைஞர்களை அதிகரியுங்கள்

## வவுனியா அரச அதிபர் இந்து கலாசார அலுவல்கள் அமைச்சின் பணிப்பாளருக்கு கடிதம்

(பூந்தோட்டம்)

ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வரும் கலாபூசண விருதுக்கு வவுனியா மாவட்ட கலைஞர்களை இம்முறை அதிகரித்துக் கொள்ளுமாறு கோரி வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பந்துல கரிசந்திர இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சின் பணிப்பாளருக்கு கடந்த வாரம் கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளார்.

இதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

வவுனியா மாவட்டத்தில் இருந்து கடந்த காலங்களில் ஒருவர் சில சமயங்களில் இருவர் மட்டுமே கலாபூசண விருது வழங்குவதற்கு தெரிவு செய்யப்பட்டு வந்துள்ளனர்.

இதனால் கடந்த ஆண்டுகளில் குறித்த விருதுக்காக மாவட்ட செயலகம் மூலமாக விண்ணப்பித்த கலைஞர்கள் பலரும் காத்திருப்போர் பட்டியலில் இருக்கும் நிலையுள்ளது.

அத்துடன் வவுனியா மாவட்டம் கலை இலக்கியத்துறையில் தகுந்த வளர்ச்சியினை பெற்றிருப்பதுடன் மாகாண மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் பல்வேறு சாதனைகளை நிறைவேற்றி வருவதுடன் வடமாகாணத்தை பொறுத்தவரையில் பல்வேறு மாவட்டங்களுக்கும் சென்று பலரது வரவேற்பினையும் பெறும் கலை நிகழ்ச்சிகளையும் வவுனியா கலைஞர்கள் அண்மைக்காலமாக மேடையேற்றி வருகின்றனர்.

இவ்வாறு மாவட்டத்தின் கலாசாரத்துறையின் வளர்ச்சிக்காக அரும்பணியாற்றி வரும் கலைஞர்களை ஊக்குவிப்பதும் அவர்களுக்குரிய வசதிவாய்ப்புக்கள் மற்றும் கிடைக்க வேண்டிய கௌரவங்களை பெற்றுக்கொடுப்பதில் நாம் எம்மால் இயன்ற பங்களிப்பை வழங்கி வருகின்றோம்.

இதேவேளை, சம்பந்தப்பட்ட கலைஞர்களுக்கு தேசிய மட்டத்தில் கௌரவங்களை பெற்றுக்கொடுப்பதும் எமது பொறுப்பாகும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் கடந்த காலங்களில் நிலவிய அசாதாரண சூழ்நிலையினை அடுத்து பிற மாவட்டங்களில் இருந்து இடம்பெயர்ந்து வவுனியாவிற்கு வருகை தந்த கலைஞர்கள் பலரும் தற்போது வவுனியா மாவட்டத்தினை நிரந்தர வதிவிடமாக கொண்டுள்ளனர்.

எனவே, இவ்வாறான விடயங்களை கவனத்தில் எடுத்து இவ்வாண்டு முதல் வவுனியா மாவட்டத்தில் இருந்து கலாபூசண விருதுக்கு தெரிவு செய்யப்படும் கலைஞர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு ஏற்ற நட வடிக்கைகளை மேற்கொண்டு உதவுமாறு கேட்டுக் கொள்கிறேன் என அக்கடிதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது. (அ-9-266)

## முழுநிலா கருத்தாடல் நிகழ்வு 31 ஆம் திகதி

(பூந்தோட்டம்)

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் நடத்தும் மாதாந்த முழு நிலா கருத்தாடல் நிகழ்வு இம் முறையும் 148 ஆவது நிகழ்வாக எதிர்வரும் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கந்தையா- ஸ்ரீகந்தவேள் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் சிறுவர் துஷ்பிரயோகம் என்ற தொனிப்பொருளில் கருத்தாடலினை வவுனியா சிறுவர் அபிவிருத்தி மேம்பாட்டு உத்தியோகத்தர் ஜே. கெனடி ஆரம்பித்து வைக்க கருத்துரையினை உள சமூக இணைப்பாளர் எஸ். நந்தசீலன் வழங்கவுள்ளார்.

இதேவேளை வட்டூர்க்கவிஞர் அமரர் கதிர் சரவணபவனின் அஞ்சலியுரையினை தமிழ்மணி அகளங்கன் நிகழ்த்தவுள்ளார். சிறப்புரையினை கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் உப செயலாளர் மாணிக்கம் ஜெகன் வழங்கவுள்ளார். (அ-9-266)

# வன்னி மாவட்ட எம்.பிக்களின் எண்ணிக்கையும் குறைகிறது

## தேர்தல் ஆணையகம் தகவல்

(கொழும்பு)

வன்னி மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கை ஒன்றால் குறையவுள்ளதாக தேர்தல்கள் ஆணையகம் அறிவித்துள்ளது. இந்த ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் மொனராகலை மாவட்டத்துக்குள் மேலதிகமாக சேர்த்துக் கொள்ளப்படவுள்ளார். வன்னியில் 2010 ஆம் ஆண்டில் 2 இலட்சத்து 36 ஆயிரத்து 449 வாக்காளர்கள் பதிவுப் பெற்றி ருந்தனர்.

எனினும் அது 2011 இல் 2 இலட்சத்து 21 ஆயிரத்து 4,09 ஆக குறைவடைந்தது. இதனைக் கருத்திற் கொண்டே மன்னார், வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களை உள்ளடக்கிய வன்னி மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒன்றினால் குறைக்கப்படவுள்ளது.

ஏற்கனவே யாழ்ப்பாணத்திலும் வாக்காளர் பதிவை அடிப்படையாகக் கொண்டு 10 இல் இருந்து 6 ஆக நாடாளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# பிரித்தானியாவின் அறிவுறுத்தலை ஏனைய நாடுகளும் பின்பற்றலாம்

## அச்சத்தில் இலங்கை

(கொழும்பு)

இலங்கைக்கு வரும் தமது சுற்றுலா பயணிகளுக்கு பிரித்தானியா வழங்கியுள்ள அறிவுறுத்தல்களை ஏனைய நாடுகளும் பின்பற்றலாம் என்று இலங்கை அரசாங்கம் அச்சம் வெளியிட்டுள்ளது.

இது நாட்டுக்கு பாதிப்பை தரும் என்று இலங்கையின் வெளியுறவு அமைச்சின் செயலாளர் கருணாதிலக்க அமுனுகம தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

இந்நிலையில் விரைவில் நாட்டின் உண்மையான நிலவரம் குறித்து இலங்கையில் உள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு விளக்கம் அளிக்கப்படும்.

இலங்கையில் தற்போது பாதுகாப்பான சூழல் காணப்படுவதால் சுற்றுலா பயணிகள் எந்த இடங்களுக்கும் செல்லலாம்.

இலங்கைக்கான சுற்றுலா அறிவுறுத்தலை பிரித்தானிய கடந்த 14 ஆம் திகதி வெளியிட்டது. இதன் பின்னர் அதனை அந்த நாடு கடந்த 23 ஆம் திகதி திருத்தி வெளியிட்டமையும் குறிப்பிடத்தக்கது. (அ-2)

# எண்ணெய் கசிவால் 450 மில்லியன் டொலர்கள் இழப்பு ஏற்படும் நிலை

(பாணந்துறை)


பாணந்துறை கடலில் மூழ்கிய கப்பலில் இருந்து வெளியேறும் எண்ணெய் கசிவினால் 450 மில்லியன் டொலர்கள் அளவில் சேதங்கள் ஏற்படலாம் என்று எச்சரிக்கப் பட்டுள்ளது.

கிரேக்கத்தில் பதிவு செய்யப்பட்ட எம்.வி. தேர்மோபிலி சியாரா என்ற கப்பல் தொழில் நுட்ப பிரச்சினை காரணமாக கடந்த 2007 ஆம் ஆண்டில் இருந்து இலங்கையின் கடற் பரப்பில் தரித்து நிற்கின்றது.

கேள்வி கட்டணங்களை செலுத்த முடியாமை காரணமாக அந்தக் கப்பலால் நாட்டில் இருந்து வெளிச்செல்ல முடியவில்லை. இந்நிலையில் கடந்த 23 ஆம் திகதி கப்பல் கடலில் மூழ்கியது.

இதனையடுத்து கப்பலில் இருந்து பாரியளவு எரிபொருள் வெளியாகி அது வெள்ளவத்தை காலிமுகத்திடல் ஊடாக நீர்கொழும்பு வரையிலான கடற்கரைகளில் பரவியுள்ளது. இதன் காரணமாக மீனினங்கள் உட்பட்ட கடல் வளங்களும் பாதிக்கப்பட்டுள்ளன. (அ-2)

# ஒன்றரை வருடங்களாக இழுபடும் பளை தபாலகத்தின் நிர்மாணம்



பளை தபாலகம் புதிதாக நிர்மாணிப்பதற்கான வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்ட போதும் கட்டட வேலையில் சீரான தன்மை காணப்படாததினால் ஒன்றரை வருடத்திற்கு முன்வேலைகள் அனைத்தும் நிறுத்தப்பட்டுள்ளதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேற்குறித்த தபாலகமானது வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் என்றிப் நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் கட்டட திணைக்களத்தின் ஊடாக ஒரு கோடி ரூபா நிதியில் புதிதாக நிர்மாணிப்பதற்கு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

கட்டட வேலைகளில் ஏற்பட்ட குளறுபடிகள் காரணமாக ஒன்றரை வருடத்திற்கு முன் நிறுத்தி வைக்கப்பட்ட இவ் வேலைகள் மீண்டும் நிர்மாணிப்பதற்கான எந்தவித செயற்பாடுகளும் இதுவரை முன்னெடுக்கப்படவில்லை.

இடை நடுவில் நிறுத்தப்பட்ட இக்கட்டடம் மக்களின் மலசல கூடமாக்கப்பட்டு வருவதுடன் பற்றைகளால் நிறைந்து காடாகக் காட்சியளிக்கின்றது. இத்தபாலகத்தின் செயற்பாடுகள் யாவும் தற்காலிகமாக வீடொன்றிலேயே நடைபெற்று வருகின்றது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதனைக் கருத்திற் கொண்டு இடை நடுவில் நிறுத்தப்பட்ட இக்கட்டட வேலைகளை துரித கதியில் பூர்த்தி செய்து பாவனைக்கு உகந்தவாறு மாற்றியமைக்க ஆவன செய்யுமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-45)

# அரசை தோற்கடிப்பதற்கு பொது எதிர்க்கட்சி தேவை

## பொன்சேகா வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கையின் அரசாங்கத்தை தோற்கடிக்க பொது எதிர்க்கட்சி உருவாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகா வலியுறுத்தியுள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கருஜயசூரிய உட்பட்டோர் பங்கேற்ற நிகழ்வு ஒன்றில் கருத்துரைக்கும் போது சரத் பொன்சேகா இந்தக்கோரிக்கையை வலியுறுத்தியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொது எதிர்க்கட்சி என்ற குதிரையை முன்னோக்கி நகர்த்துவதன் மூலமே நாட்டின் முன்னேற்றத்தைக் காணமுடியும்.

இந்தநிலையில் பொது எதிர்க்கட்சிக்கு இலங்கையில் உள்ள அனைத்து தரப்பினரும் ஆதரவு வழங்குவர்.

இலங்கையின் நீதியமைப்பு இன்று சுதந்திரமாக செயற்படவில்லை. அது இன்று 18 ஆவது திருத்தச்சட்டத்தின் கீழ் சர்வாதிகாரியினால் நியமிக்கப்படும் நீதிபதிகளால் நிர்வகிக்கப்படுவதாகவும் சரத் பொன்சேகா சுட்டிக்காட்டினார். (அ-2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# அதிசய செருப்பு

ஷூகு கவலையுடன் இருந்தான். அவனுடைய தாய் மிகவும் நோய்வாய்ப்பட்டிருந்தாள். சிகிச்சைக்கோ சாப்பிடுவதற்கோ அவனிடம் பணமில்லை. திரும்பவும் சித்தப்பா கிட்டே போய் உதவி கேட்கலாம் என எண்ணியவாறே தனது சித்தப்பா வீட்டுக்குப் புறப்பட்டான்.

அவரது வீட்டில் ஏய் நீ திரும்ப வந்துட்டியா? நான் என்ன பணமரமா வச்சிருக்கேன். ஓடிப்போ இங்கிருந்து.... விரட்டியடித்தார் சித்தப்பா.

பாவம் ஷூகு கவலையுடன் வீதியோர மரத்தடியில் அமர்ந்து அழுதுகொண்டே தூங்கிவிட்டான். திடீரென்று பெரியவர் ஒருவர் அவனருகே வந்து நின்று மகனே! நீ இங்கு என்ன செய்து கொண்டிருக்கிறாய்? என்று கேட்டார்.

எங்கம்மாவுக்கு ரொம்ப உடம்பு சரியில்லை ஐயா! மருந்துச் செலவுக்குக்கூட கையில் காசில்லை. சீக்கிரம் வைத்தியர் கிட்ட காண்பிக்கவில்லையென்றால் அம்மா செத்துப்போயிடுவாங்களோன்னு பயமா இருக்கு... என்றபடியே அழ ஆரம்பித்தான்.

அழாதேப்பா, நான் உனக்கு உத்வி செய்கிறேன். இந்தா இது ஒரு அதிசய செருப்பு. இதைக் காலில் அணிந்துகொண்டு குதித்தால் இதிலிருந்து ஒரு தங்கக் காசு வரும்.


எத்தனைமுறை குதித்தாலும் ஒவ்வொரு முறையும் ஒரு தங்கக்காசு வரும். நீ ஒரு தடவைக்கு ஒருமுறை மட்டும் குதித்து ஒரு காசு மட்டுமே எடு. ஏனென்றால் நீ எப்பொழுது குதித்தாலும் உன் உயரம் சிறிதளவு குறையும். சிறிது நேரத்திற்குப் பின்பு உன் பழைய உயரத்துக்கு வந்து விடுவாய்.

ஒரே தடவையில் நிறையத் தங்கக்காசு வேண்டுமென்று அதிக ஆசைப்பட்டு பலமுறை குதித்து விடாதே! அப்போது நீ எறும்பு அளவுக்குச் சிறியதாகிப் போய் விடுவாய் என்று சொல்லிவிட்டு அந்தப் பெரியவர் மறைந்து விட்டார்.

திடுக்கிட்டு எழுந்த ஷூகு நான் என்ன கனவு கண்டேனோ. ஆனால் செருப்புக்கள் இருக்கே! வீட்டுக்குப் போய் சோதித்துப்பார்க்கலாம் என்று மனதுக்குள் எண்ணியபடி அந்தச் செருப்புக்களை எடுத்துக்கொண்டு தன்து வீட்டுக்கு ஓடினான்.

வீட்டுக்குச் சென்றதும் செருப்புக்களில் கால்களை நுழைத்துக் கொண்டு குதித்துப்பார்த்தான். உடனே கீழே ஒரு தங்ககக்காசு கிடப்பதைக்கண்டு அட தங்கக்காசு! என்று ஷூகு வியந்து போனான். ஹைய்யா ஒரு தங்கக்காசு கிடைத்துவிட்டது நான் இப்போது அம்மாவுக்காக மருந்து, சாப்பாடு எல்லாமே வாங்கமுடியும் என்று சந்தோசப்பட்டுக் கொண்டான்.

இப்படியே நாட்கள் சென்றன. ஷூகு மிக விரைவில் வசதியானவனாக மாறிவிட்டான். ஆனால் ஒரு தடவைக்கு ஒரு தங்கக்காசு மட்டுமே எடுப்பதில் மிகவும் கவனமாக இருந்தான். அளவுக்கு மீறி அவன் ஆசைப்படவில்லை. பெரியவர் சொன்னதைத் தட்டாமல்



கடைப்பிடித்தான்.

ஷூகு மகிழ்ச்சியாகவும் வசதியாகவும் இருப்பது அவனுடைய சித்தப்பாவுக்கு தெரியவந்தது. இது அவருக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லை. என்னவோ இரகசியம் இருக்கிறது. அது என்னவென்று கண்டுபிடித்தே ஆக வேண்டும் என்று எண்ணியவர் வேகமாக ஷூகுவின் வீட்டுக்கு வந்தார்.

என்ன கண்ணா! எப்படி இருக்கீங்க எல்லோரும்? என்று அன்பொழுக விசாரித்தார். வாங்க, சித்தப்பா வாங்க! என்று களங்கமில்லாமல் வரவேற்றான் ஷூகு. ஷூகுவும் அவனது தாயாரும் சித்தப்பாவை நன்கு உபசரித்தனர். ஆஹா! எத்தனை வகையான உணவுகள்! கண்டிப்பாக உங்களுக்கு ஏதாவது புதையல் கிடைத்திருக்கும் என்று நினைக்கிறேன். என்கிட்டே சொல் ஷூகு... நான் யாரிடமும் சொல்ல மாட்டேன் என்றார் சித்தப்பா.

புதையல் இல்லே, சித்தப்பா... ஒரு ஜோடி செருப்பு... என்றபடியே ஓடிப்போய் அந்த அதிசய செருப்பை எடுத்துக்கொண்டு வந்து சித்தப்பாவிடம் காட்டினான் ஷூகு. இதுவா? சாதாரண செருப்புத் தானே! இது எப்படி உன்னைப் பணக்காரனாக மாற்றியது? என்னை ஏமாற்றப் பார்க்கிறாயே... உண்மையைச் சொல்லு... என்றார் சித்தப்பா.

உண்மைதான் சித்தப்பா! இதைக் காலில் மாட்டிக்கிட்டு குதித்தால் ஒரு தங்கக்காசு வரும். இது அதிசய செருப்பு சித்தப்பா! சரி... சரி... இந்த அதிசய செருப்பை ஒரே ஒரு நாளைக்கு எனக்குக்கொடு! இல்லை, சித்தப்பா! இதை நான் உங்ககிட்ட கொடுக்கமுடியாது... நான் சொல்வதைக்கேளுங்க! ஆனால் ஷூகுவின் சித்தப்பா எதையும் கேட்கும் மனநிலையில் இல்லை. அவனிடமிருந்து அந்தச் செருப்பைப் பறித்துக்கொண்டு கொடு ஒரே ஒருநாள்தானே! நாளைக்குத் திருப்பிக் கொடுத்து விடுகிறேன். நீ முன்பு வாங்கிய கடனைக்கூட நான் கேட்கமாட்டேன். நீ திருப்பித்தர வேண்டாம் என்றார் சித்தப்பா.

சித்தப்பா, கொஞ்சம் நான் சொல்வதைக்கேளுங்க... அவன் முடிப்பதற்குள் பேராசைபிடித்த அந்த மனிதர் தனது வீட்டுக்கு அந்தச் செருப்புக்களுடன் புறப்பட்டுப் போய்விட்டார்.

தனது வீட்டுக்குச் சென்றதும் ஒரு பெரியதுணியை விரித்து வைத்துக்கொண்டு செருப்பைக் காலில் மாட்டிக் கொண்டார். உண்மையிலேயே அதிசயச் செருப்புத்தானான்னு பார்த்துவிடலாம்... என்றவாறே ஒரு குதிகுதித்தார்.

அட நம்பவே முடியவில்லையே! தங்கக்காசு! மீண்டும் குதித்தார்... மீண்டும் தங்கக்காசு...! உண்மையிலேயே தங்கக்காசுதான்... அசல் தங்கம்! மகிழ்ச்சியில் ஒன்றும் பிடிபடவில்லை அவருக்கு. மீண்டும் மீண்டும் குதித்தார். அவர் விரித்த துணியில் தங்கக்காசுகள் குவிந்து கொண்டேயிருந்தன.

ஹஹஹஹஹா... நான்தான் ஜப்பானிலேயே மிகப்பெரிய பணக்காரன். குதித்துக்குதித்துக் காலெல்லாம் வலியெடுக்கிறது. சிறிதுநேரம் ஓய்வெடுத்துவிட்டு மீண்டும் குதிக்க ஆரம்பிக்கலாம்... என்று எண்ணியபடியே அந்தத் துணிவிரிப்பில் அமர்ந்தார். அட...! ஏன் இந்தக்காசு இவ்வளவு பெரிசாத் தெரியுது! இந்தக்குவியல் ஒரு மலைபோல இருக்கின்றதே! என்று ஆச்சரியப்பட்டவர் திரும்பிப் பார்த்தார்.

அட இந்த மரம் வானத்தைத் தொடுதே! இறைவா! இதெல்லாம் என்ன? இங்கே என் வீட்டில் தானே இருக்கிறேன்.... ஆனா, பெரிய மைதானத்தில் இருப்பது போலத் தெரிகிறதே...! என்று பயத்தில் புலம்ப ஆரம்பித்தார்.

அப்பொழுது அவரைத் தொடர்ந்து வந்த ஷூகு அங்கே வந்து சேர்ந்தான். சித்தப்பாவை வீடெங்கும் தேடினான். எங்கும் அவரைக் காணவில்லை! அப்போது தங்கக் காசுக்குவியல் மீது அவனது பார்வைபட்டது. எவ்வளவு பெரிய தங்கக் காசுக்குவியல்! ஆனா...ஆனா.. சித்தப்பா எங்கே போய்விட்டார்...! சித்தப்பா... சித்தப்பா... என்று கூவ ஆரம்பித்தான்.

திடீரென்று அதிசயச் செருப்பைக் கொடுத்த பெரியவர் சொன்னது ஷூகுவின் நினைவுக்கு வந்தது. அந்தக் காசுக் குவியலைக் கூர்ந்து கவனித்தான்.

சித்தப்பாவைக் கவனித்தும் விட்டான். சித்தப்பா கொசு அளவுக்கு சுருங்கிப் போய்விட்டாரே! இவ்வளவு காசு எடுத்திருக்கிறாரே! செருப்பு மேல சின்னப் பூச்சி மாதிரி. சித்தப்பா உட்கார்ந்திருக்கிறாரே என்று வியந்து போனவன் சித்தப்பா நீங்களா? பேராசையால் இப்படி ஆயிடிச்சே... என்று கலங்கினான்.

அவனது சித்தப்பா அலறினார்... மகனே! என்னைக் காப்பாத்து... ஏதாவது செய்... ஆனால் அவரது அலறல் சத்தம் ஷூகுவின் காதில் விழவேயில்லை.

சித்தப்பா நீங்க உங்க உண்மையான உருவத்துக்கு சீக்கிரம் திரும்பிவிடுவீர்கள்... ஆனால், இப்போது என்னால் ஒன்னும் செய்யமுடியாது... என்று கூறியபடியே அங்கிருந்த தங்கக் காசுகளை ஒரு மூடையாகக் கட்டிக் கொண்டு தனதுவீட்டுக்குப் புறப்பட்டான்.

அதன்பின்னர் அதை வைத்துக்கொண்டு தாங்களும் நன்றாக வாழ்ந்து பிறருக்கும் உதவிசெய்து வாழ்ந்தனர் ஷூகுவும் அவனது தாயாரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் செயலாளர் தியாகி அ.அமிர்தலிங்கத்தின் 86 ஆவது பிறந்தநாள் ஞாபகமாக கே.கே.எஸ். வீதி, நாச்சிமார் கோவிலடியில் அமைக்கப்பட்ட **செல்வா அகம்** (தமிழர் விடுதலைக் கூட்டணியின் புதிய பணிமனை) திறப்பு விழா நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் த.வி.கூட்டணியின் செயலாளர் வீ. ஆனந்தசங்கரி உருவப்படத்திற்கு மலர்மாலை அணிவிப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- அலுவலகச் செய்தியாளர், பூநகரிச் செய்தியாளர்)

# முல்லையில் சிங்கள குடியேற்றம்; பரிதவிக்கும் மீனவ குடும்பங்கள்

## கிழக்கிற்கு ஏற்பட்ட நிலைதான் வடக்கிற்கும் என்கிறது த.தே.ம.மு.

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் சிங்கள மீனவக் குடும்பங்களின் குடியேற்றத்தால் அப்பகுதி மீனவக் குடும்பங்கள் தமது வாழ்வாதாரத்தை முன்னேற்ற முடியாத வகையில் பரிதவித்து வருகின்றனர்.

அத்தோடு அந்தக் குடும்பங்களை நாட்டை விட்டு வெளியேற்றும் நடவடிக்கைகளும் இடம்பெற்று வருகின்றன. இது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டிய முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சமாசமே இராணுவத்தின் கட்டுப்பாட்டிற்குள் இருப்பதால் செயலிழந்து போயுள்ளது என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி குற்றம் சாட்டியுள்ளது.

அத்தோடு இன்று மீனவர்களுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினை நாளை ஒட்டுமொத்த தமிழனத்திற்கும் ஏற்படும் எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழில் உள்ள அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அக்கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுண்டிக்குளம் தொடக்கம் நாயாறு வரையான பகுதிக்குட்பட்ட மீனவர் குடும்பங்களின் நிலைமைகள் தொடர்பில் கவனிக்க வேண்டிய முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சமாசம் தற்போது இராணுவத்தினரின் பூரண கட்டுப்பாட்டிற்குள்ளிருப்பதால் மீனவர்களின் நலன்களில் அக்கறை காட்டுவதில்லை.

மாறாக சிங்களக் குடியேற்றங்களுக்கும் சிங்கள மீனவர்களின் தொழில் நடவடிக்கைகளுக்கும் சாதகமாக செயற்படுகின்றது.

தற்போதுள்ள இந்த சமாசத்தின் நிர்வாக சபைத் தெரிவு அப்பகுதியிலுள்ள இராணுவ முகாம் ஒன்றிலேயே இடம்பெற்றுள்ளது.

இந்த நிர்வரக சபைத் தெரிவின் போது விடுதலைப் புலிகளின் காலத்தில் சமாசத்தில் நிர்வாக சபையில் பணிபுரிந்த எவரும் தெரிவு செய்யப்படக்கூடாது என இராணுவத்தினர் கூறியுள்ளதோடு இராணுவத்தினரின் விருப்பத்திற்கு ஏற்ப செயற்படக் கூடியவர்களே தெரிவு செய்யப்பட வேண்டும் எனவும் கட்டளையிட்டுள்ளனர்.

தமிழர்களைப் பொறுத்தவரை பொருளாதார ரீதியில் முன்னேற்றத்தை தரக் கூடிய இரண்டு தொழில் நடவடிக்கை உண்டு. ஒன்று கடற்றொழில் மற்றையது விவசாயம். இதில் கடற்றொழிலை செய்பவர்களுக்கு தடைகள், இடர்பாடுகளை ஏற்படுத்தி அவர்களை இந்த நாட்டை விட்டு வெளியேற்றும் நடவடிக்கைகள் திட்டமிட்டபடி இடம்பெற்று வருகின்றது என்பது ஒரு புறமாகவும் மறுபுறம் அவர்களின் இடங்களில் சிங்கள குடியேற்றங்களும் இடம்பெற்று வருகின்றன.

தமிழ் தேசத்தை இல்லாது ஒழிக்கும் நடவடிக்கைகளை இந்த அரசாங்கம் மிகவும் வேகமாக மேற்கொண்டு வருகின்றது என்பதை தமிழ் மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இதனைத் தடுக்க முற்படாவிட்டால் கிழக்கில் ஏற்பட்ட நிலை வடக்கிற்கும் ஏற்படும். அப்போது அதைத் தட்டிக் கேட்க யாரும் இருக்கமாட்டார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# முகமாலையில் வீதிகளை புனரமைக்க நடவடிக்கை

## 39 மில்லியன் ஒதுக்கீடு

(சிவநகர்)

மீள்குடியேற்றம் செய்யப்பட்ட முகமாலை கிராமத்தின் வீதிகளை புனரமைப்பதற்கு 39 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்நிதி மூலம் 2.5 கிலோ மீற்றர் தூர வீதிக்கு தார் இடப்படவுள்ளதோடு ஏனைய 5 உள்வீதிகளும் துப்பரவு செய்யப்பட்டு கிரவல் இடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னோடிச் செயற்பாடாக கிடங்குகளை மூடுவதுடன் வீதிகளில் வளர்ந்துள்ள வடலிகளை அகற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இப்பகுதிகளை புனரமைப்பு செய்ய வேண்டுமென பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவர் சந்திரகுமார் மற்றும் கிளிநொச்சி அரசாங்க அதிபர் ஆகியோர் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

இதற்கமைவாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பணிப்பாளர் எஸ்.கே. லியனகே இந்நிதியை ஒதுக்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ-3-254)

# அனைத்து பாராளுமன்ற ஒன்றியத்தின் உதவியை கோருகிறார் அமைச்சர் றிசாத்

(கொழும்பு)

அமைச்சர் றிசத் பதியுதீன் அனைத்து பாராளுமன்ற ஒன்றியத்தின் உதவியை நாடியுள்ளார். தமக்கு எதிராக கொழும்பு மற்றும் மன்னார் நீதிமன்றில் நடத்தப்பட்டு வரும் விசாரணைகள் தொடர்பில் கண்காணிக்குமாறு அனைத்து பாராளுமன்ற ஒன்றியத்திடம் கோரியுள்ளார்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் ஒரு தலைப்பட்சமாக தமக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை சுமத்தியுள்ளதாகவும் தம்மிடம் விளக்கம் கோராமலேயே நாடு தழுவிய போராட்டங்களை நடத்தியதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். சில ஊடகங்களும் சட்டத்தரணிகள் சங்கமும் தமக்கு எதிராக கடுமையான நிலைப்பாட்டை கொண்டிருப்பதாகவும் இது பாதகமான நிலைமையை ஏற்படுத்தும் எனவும் அவர் தெரிவித்தார்.

நிறைவேற்று அதிகாரத்திற்கும் நீதிமன்ற கட்டமைப்பிற்கும் இடையிலான முரண்பாடாக இந்த பிரச்சினையை வெளிப்படுத்த சில தரப்பினர் முயற்சித்து வருகின்றனர்.

நீதி நிலைநாட்டப்படுவதற்கு அனைத்து பாராளுமன்ற ஒன்றியமும் ஒத்துழைப்புவழங்கவேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (அ-2)


**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**

**The Only Official French Language Center in Jaffna**

***Learn French the French Way***

French Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச தரம் வாய்ந்த யாழ்ப்பாணத்திலுள்ள ஒரே ஒரு பிரெஞ்சு மொழிக் கல்வி நிறுவனமாகிய Alliance Francaise de Jaffna ஊடாக பிரெஞ்சு மொழி வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன. France மற்றும் பிரெஞ்சு பேசப்படும் நாடுகளுக்கு செல்வோர் மற்றும் மொழி ஆர்வ முள்ள எவரும் கற்றுக்கொள்ளலாம்.

வகுப்புக்கள்:- சனி,ஞாயிறுகளில்

புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

61,Kachcheri-Nallur Road ,Jaffna T.P: 021 2228093

E.mail:alliancejaffna@yahoo.com

(றக்கா வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடி கட்டடம்)


மேலதிக விபரங்களை நேரில்/தொலைபேசியினூடாக பெறலாம்

(297)


# சிவநகர் கிராம அபிவிருத்தி சங்கத்தை இயங்க வையுங்கள்

## அப்பகுதி மக்கள் கோரிக்கை

(சிவநகர்)



சிவநகர் கிராம அபிவிருத்திச் சங்கமானது ஒப்பந்த வேலைகள் செய்யக் கூடிய பதிவுகளை பெற்றுள்ள போதிலும் உரிய முறையில் அக்கிராமத்தின் அபிவிருத்தியில் கவனம் செலுத்தாக நிலை காணப்படுவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இக்கிராம அபிவிருத்திச்சங்கம் அமைந்துள்ள இடத்தில் ஒரு பக்கம் செந்தூரன் முன்பள்ளியும் மறுபக்கம் சிவநகர் அரசினர் பாடசாலையும் காணப்படுகின்றது.

இவ்வாறு பள்ளி மாணவர்கள் வந்து செல்கின்ற இடத்துக்கு நடுவில் அமைந்துள்ள இச்சங்கமானது சேதமடைந்து பற்றைகளால் சூழப்பட்டும் காணப்படுகின்றது.


இச்சங்கம் திருத்தப்படாமல் இவ்வாறே தொடர்ந்து காணப்படுமேயானால் பாடசாலைக்கோ முன்பள்ளிக்கோ மாணவர்கள் சென்று வரமுடியாத நிலை காணப்படும். எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதனை சிறந்த முறையில் திருத்தியமைத்து கிராமத்தின் அபிவிருத்திக்கு ஒத்துழைக்குமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

(அ-9-254)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெனிசுலா எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் பயங்கர தீ விபத்து

## 39 பேர் பரிதாப உயிரிழப்பு



(கராகஸ்)

தென் அமெரிக்க நாடான வெனிசுலா எண்ணெய் வளம் மிகுந்த நாடாகும். அமெரிக்காவுக்கு தேவையான பெருமளவு எண்ணெய் இங்கிருந்துதான் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இந்நிலையில் அங்குள்ள பால்கான் மாகாணத்தில் அமுய் என்ற இடத்தில் உள்ள மிகப்பெரிய எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் நேற்று முன்தினம் தீ விபத்து ஏற்பட்டது. இதனால் அங்கு சுத்திகரிப்புக்காக வைக்கப்பட்டிருந்த கச்சா எண்ணெய் கொழுந்து விட்டு எரிந்தது. எனவே, அங்கிருந்து கரும்புகை வெளியேறியது. மேலும் அங்கிருந்த எண்ணெய் பரல்கள் வெடித்து சிதறின.

இத் தீ விபத்தில் 39 பேர் உடல் கருகி பலியாகினர். அவர்களில் 18 பேர் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த தேசிய படையை சேர்ந்தவர்கள். இவர்கள் தவிர ஏனைய 15 பேர் பொதுமக்கள். மேலும் 6 பேர் அடையாளம் கண்டுபிடிக்க முடியவில்லை.

இந்த விபத்து வெனிசுலாவில் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இங்கு ஏற்பட்டுள்ள கியாஸ் கசிவே விபத்துக்குக் காரணம் என பெற்றோலிய மந்திரி ரபேல் ரமியர்ஷ் தெரிவித்துள்ளார்.

விபத்தில் பலியானவர்களுக்கு ஜனாதிபதி ஹுகோ சாவேஷ் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார். அதில் இந்த விபத்து தனக்கு மிகுந்த மனவேதனை அளிப்பதாக உள்ளது. மேலும் இது வெனிசுலாவில் உள்ள அனைத்து மக்களுக்கும் கவலை அளிப்பதாக உள்ளது என்றும் கூறியுள்ளார். தீ விபத்தில் பலியானவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக வெனிசுலாவில் 3 நாட்கள் அரசு முறை துக்கம் கடைப்பிடிக்கப்படவுள்ளது. இந்த விபத்து குறித்து தீவிர விசாரணைக்கு ஜனாதிபதி சாவேஷ் உத்தரவிட்டுள்ளார். (அ-2)

# சீனாவை கட்டுப்படுத்துவதில் அமெரிக்கா இரகசிய முனைப்பு

(வோஷிங்டன்)

ஆசிய பசுபிக்கடல் பகுதியிலுள்ள நாடுகளில் சீனாவின் ஆதிக்கத்தை கட்டுப்படுத்துவதில் அமெரிக்கா இரகசியமாக சில நாடுகளுடன் உடன்பாடு வைத்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக இந்தோனிசியாவிற்கு நவீன ரகப்போர் விமானங்கள், விமான தகர்ப்பு ஏவுகணைகள் போன்றவற்றை வழங்கத் திட்டமிட்டுள்ளது.

இதன்படி எப்-16 ரக போர் விமானங்கள், ஏ.ஜி.எம்-65 மாவெரிக் ஆகிய ஏவுகணைகள் ஆகியவற்றை வழங்கும்படி இந்தோனேசியா கேட்டுள்ளது. சுமார் 3 ஆயிரத்து 750 கோடி ரூபா அளவிற்கு இந்த ஆயுத விநியோகம் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ-2)

# டோங்பிங்-41 ஏவுகணையை வெற்றிகரமாக பரிசோதித்தது சீனா

(வோஷிங்டன்)

சீனா சமீபகாலமாக அதிநவீன ஆயுதங்களை தயாரித்து குவித்து வருகிறது. தற்போது நீர்மூழ்கி கப்பலில் இருந்து ஏவப்பட்டு கண்டம் விட்டு கண்டம் சென்று தாக்கும் திறன் படைத்த அதிநவீன அணு ஆயுத ஏவுகணைகளை சீனா தயாரித்துள்ளது.

இதற்கு டோங்பிங்-41 என்று பெயரிடப்பட்டு இருக்கிறது. இந்த ஏவுகணை சோதனை கடந்த மாதம் வெற்றிகரமாக நடந்துள்ளது. இந்த தகவல்களை அமெரிக்காவில் இருந்து வெளிவரும் பத்திரிகை தெரிவித்துள்ளது.

இந்த ஏவுகணைகள் சுமார் 3 முதல் 10 அணு ஆயுதங்களை எடுத்து சென்று குறிப்பிட்ட இலக்கை தாக்கும் என்றும் குறைந்தது 12 ஆயிரம் கிலோ மீற்றர் முதல் அதிக பட்சமாக 14 ஆயிரம் கிலோ மீற்றர் தூரம் அதாவது அமெரிக்கா வரையில் சென்று தாக்கும் வல்லமை படைத்து என்றும் தெரிய வருகிறது.

மேலும் சீனாவிடம் தற்போது இந்த வகையை சேர்ந்த 55 முதல் 65 அதிநவீன அணு ஆயுத ஏவுகணைகள் இருக்கிறது. இந்த ஏவுகணைகள் ஏவ விசேடமாக 2 நீர்மூழ்கி கப்பல்களை தயாரித்து இருக்கிறது என்றும் அந்த தகவலில் கூறப்பட்டுள்ளது. (அ-2)

# அசாமில் மீண்டும் வன்முறை; ஐவர் குத்திப்படுகொலை

## வன்முறை பலிகள் 85 ஆக உயர்வு

அசாம் மாநிலத்தில் மீண்டும் வன்முறை ஏற்பட்டது. 5 பேர் கொல்லப்பட்டனர். இதைத் தொடர்ந்து கலவரத்தினால் ஏற்பட்ட உயிரிழப்பின் எண்ணிக்கை 85 ஆக உயர்ந்தது.

**கலவரம்**

அசாம் மாநிலத்தில் கோக்ரஜார், சிராங் உள்ளிட்ட சில மாவட்டங்களில் பூர்வீக போடோ இன மக்களுக்கும் வங்களாதேசத்தில் இருந்து சட்டவிரோதமாக குடியேறியவர்களுக்கும் இடையே சமீபத்தில் ஏற்பட்ட மோதல் கலவரமாக வெடித்தது. கலவரத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். கலவரப்பகுதிகளில் மாநில பொலிஸாருடன் மத்திய படையினரும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர் என்றும் அவ்வப்போது வன்முறை சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன.

**5 பேர் குத்திக்கொலை**

சில நாட்கள் ஓய்ந்திருந்த வன்முறை நேற்று மீண்டும் ஏற்பட்டது. சிராங் மாவட்டத்தில் அம்குரி என்ற இடத்தில் உள்ள முகாமில் இருந்து நேற்று முன்தினம் மாலை 2 வாகனங்களில் பலர் சென்றனர். அந்த வாகனங்களை மர்ம மனிதர்கள் சிலர் வழிமறித்து தாக்கினார்கள்.

**ஊடரங்கு உத்தரவு**


இந்த படுகொலை சம்பவத்தை தொடர்ந்து அங்கு பதற்றநிலை ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து அங்கு அதிக பாதுகாப்பு படையினர் அனுப்பி வைக்கப்பட்டதாக அசாம் ஜிஜி (சட்டம் ஒழுங்கு) எல். ஆர். பிஷ்னோய் தெரிவித்தார்.

மேலும் சிராங் மாவட்டத்தில் காலவரையறையற்ற ஊடரங்கு உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே காலவரையறையற்ற ஊடரங்கு உத்தரவு அசாமில் இருக்கும் கோக்ரஜார் மாவட்டத்தில் நேற்று முன்தினம் பகலில் ஊடரங்கு உத்தரவு தளர்த்தப்பட்டது.

**கர்நாடக துணை முதல் மந்திரி**

வதந்தி பரவியதன் காரணமாக கர்நாடகம், தமிழ்நாடு, மராட்டியம் உள்ளிட்ட மாநிலங்களில் வசித்து வந்த அசாம் உள்ளிட்ட வடகிழக்கின் மாநிலங்களவையை சேர்ந்த கணிசமானவர்கள் தங்கள் சொந்த ஊர்களுக்கு திரும்பி சென்றுள்ளனர். கர்நாடகத்தில் இருந்து மட்டும் சுமார் 35 ஆயிரம் பேர் தங்கள் ஊர்களுக்கு திரும்பியுள்ளனர்.

அவர்களைதிரும்பஅழைப்பதற்காககர்நாடக துணை முதல் மந்திரி ஆர்.கே. அசோக் 3 நாட்கள் சுற்றுப்பயணமாக வடகிழக்கு மாநிலங்களுக்கு சென்று உள்ளனர். அவர் அசாம் முதல்- மந்திரி தருண் போகாஜை சந்தித்து வடகிழக்கு மாநில மக்களின் பாதுகாப்புக்காக கர்நாடக அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் பற்றி விளக்கி கூறினார். (அ-2)



அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தில் பங்கேற்க கேம்ப் டேவிட்டுக்கு தனது மகள்களான மலியா (நடுவில்) மற்றும் சஷா ஆகியோருடன் செல்வதைப் படத்தில் காணலாம்.

# காம்பியாவில் 9 கைதிகளுக்கு தூக்குத் தண்டனை நிறைவேற்றம்

(பான்)

காம்பியா நாட்டில் 9 கைதிகளுக்கு தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டது.

இதற்கு சர்வதேச பொதுமன்னிப்பு அமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது. மேற்கு ஆபிரிக்க நாடான காம்பியா நாட்டின் ஜனாதிபதியாக யாயார் ஜெமாஹ் உள்ளார். காம்பியாவில் கொலை, கற்பழிப்பு உள்ளிட்ட கிரிமினல் குற்றங்களில் ஈடுபடுபவர்களுக்கு கடுமையான தண்டனை விதிக்கப்பட்டு வந்தது.

அதன்படி கிரிமினல் வழக்குகளில் நீதிமன்றினால் குற்றஞ்சாட்டப்பட்ட 8 ஆண்கள், ஒரு பெண் என 9 பேருக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து கடந்த 24 ஆம் திகதியன்று அவர்களுக்கு சிறையில் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டது.

இவர்களில் இருவர் செனகல் நாட்டினர். கடந்த 27 ஆண்டுகளாக காம்பியாவில் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படவில்லை. மேலும் 12 இற்கும் மேற்பட்டோர் தூக்குத் தண்டனை பட்டியலில் உள்ளதாகவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. காம்பியாவின் இந்த செயலுக்கு பிரிட்டன் கண்டனம் தெரிவித்துள்ளது. (அ-2)

# சுரங்க ஊழல் விவகாரம்; பிரதமர் விளக்கமளிப்பார்

(புதுடில்லி)

நிலக்கரிச்சுரங்க ஊழலுக்குப் பொறுப்பேற்று பிரதமர் மன்மோகன்சிங் பதவிவிலக வேண்டும் என்று கோரி கடந்த சில நாட்களாக பாராளுமன்றத்தை பா.ஜனதா முடக்கி வருகிறது. இந்தக்குற்றச்சாட்டு தொடர்பான பிரதமரின் விளக்க அறிக்கை தயாராகவுள்ள போதிலும் பாராளுமன்ற அமளி காரணமாக அதைத்தாக்கல் செய்ய முடியவில்லை.

எனவே மக்களுக்கு விளக்கம் அளிக்க மாற்றுவழி கண்டுபிடிப்போம் என்று மத்திய நிதி மந்திரி ப.சிதம்பரம் ஏற்கனவே கூறியிருந்தார். அதன்படி இன்றும் பாராளுமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்யமுடியா விட்டால் பிரதமர் மன்மோகன்சிங் தொலைக்காட்சி மற்றும் வானொலியில் உரையாற்றுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அவர் அணிசேரா நாடுகள் மாநாட்டில் பங்கேற்க 4 நாட்கள் பயணமாக நாளையதினம் ஈரானுக்குச் செல்கிறார். அதற்கு முன்பாக அவர் தொலைக்காட்சி மற்றும் வானொலியில் ஊழல் குற்றச்சாட்டுக்கு விளக்கம் அளிப்பார் என்று தெரிகிறது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைப்பின் வேர்கள் கசப்பானவை. ஆனால் அதன் கனி இனிப்பானது.

- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# எங்கள் தமிழ் அறிஞர்களை எங்கள் இளம் சமூகம் அறியுமா?

ஓர் இனம் தனது பெருமைகளை, வரலாற்றுப் பொக்கிஷங்களை, இனமான அறிஞர்களை அறிய விரும்பாதவிடத்து அந்த இனம் உலகில் அழியும் இனங்களின் பட்டியலில் இடம் பிடித்துக் கொள்ளும் என துணிந்து கூறலாம்.

எனவே இனப்பற்றை ஏற்படுத்தவேண்டுமாயின் அந்த இனம் சார் வரலாற்றுப் பெருமைகளை அறிவதற்கான ஏற்பாடுகளை செய்வது அவசியம்.

அந்த வகையில் எங்கள் தமிழ் இனம் தன்னிடம் இருக்கக் கூடிய வரலாற்றுப் பெருமைகளை, தமிழ் அறிஞர்களை; இளம் சமூகம் அறிதலுக்கான ஏற்பாடுகளை செய்தாக வேண்டும்.

அவ்வாறான ஏற்பாடுகளைச் செய்யும் போது, அரசியல் பாகுபாடுகளோ அல்லது தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களுக்கோ இடம் கொடுத்தல் ஆகாது.

அவ்வகையில் யாழ்ப்பாண நகரம் மற்றும் தற்போது அழகுபடுத்தப்பட்டு வரும் யாழ்ப்பாணக் கோட்டைப் பகுதியில் எங்கள் தமிழ் அறிஞர்கள், சமயம் காத்த பெரியவர்களின் சிலைகளை நிறுவி அவர்களின் நினைவுகளை, அவர்கள் பற்றி வரலாறுகளை அவர்கள் தமிழுக்கு செய்த பணியின் உயர்வை வெளிப்படுத்த வேண்டும்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், சேர் பொன். இராமநாதன், சி.வை. தாமோதரம்பிள்ளை, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி, காலயோகி ஆனந்தக் குமாரசுவாமி, பேராசிரியர் கைலாசபதி, பேராசிரியர் வித்தியானந்தன், சேர் வைத்திலிங்கம் துரைச்சுவாமி, தவத்திரு தனிநாயகம் அடிகளார், ஏ.எம்.ஏ. அஸீஸ் என யார் யாரெல்லாம் தமிழுக்கு அரும்பணி ஆற்றினார்களோ அவர்களுக்கு சிலை அமைக்க வேண்டும்.

இந்தப் பணியை யாழ்ப்பாண மாநகர சபை செய்யும் என நம்பலாம்.

இவர்களின் சிலைகளை யாழ்ப்பாணக் கோட்டை முற்றவெளி உள்ளிட்ட எல்லைப் பகுதிகளில் நிறுவுவது பொருத்துடையதாகும்.

தேவையாயின் பொதுமக்களின் அபிப்பிராயங்களைக் கேட்டறிந்து அதற்கான ஒரு குழுவை நியமித்தும் இப்பணியைச் செய்யலாம். இத்தகைய பணி நடைபெறும் அதேநேரம் யாழ் நகரப் பகுதியில் ஏற்கெனவே அமையப் பெற்ற திருவள்ளுவர், ஔவையார் போன்ற சிலைகள் பொலிவிழந்துள்ளதால் அச்சிலைகளை புதிதாக நிர்மாணித்து அழகுபடுத்தும் பணியையும் செய்வது அவசியம்.

இப்பணிக்கு யாழ்ப்பாண வணிகர் கழகம் உதவ முடியும்.

# மக்களுக்கு சேவை வழங்க வேண்டிய பொலிஸாருக்கு இலஞ்சம் வழங்காதீர்

## வவுனியா பிரதிப்பொலிஸ்மா அதிபர் அறிவுரை

(பூந்தோட்டம்)

சில பொலிஸார் இன்று மதுவுக்கு அடிமையாகியுள்ளனர். எனவே பொது மக்கள் தமது கடமைகளைப் பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ள வரும் போது எதனையும் கொடுத்துப் பழக்காதீர்கள். பொலிஸார் மக்களின் சேவையாளர்கள். எனவே அவர்கள் உங்களுக்குப் பணி செய்யவேண்டும்.

அவ்வாறான நிலையில் எதனையும் வாங்கிக்கொடுத்து பழக்கப்படுத்தினால் அவர்களைத் தீயவழிக்கு கொண்டு செல்வது நீங்களாகத்தான் இருக்கும் என வவுனியா, மன்னார் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜயவீர தெரிவித்தார்.

அண்மைக்காலமாக வவுனியாவில் ஏற்பட்டுள்ள பொதுமக்களின் பிரச்சினைகள் தொடர்பில் வைரவப் புளியங்குளம் பொலிஸ், பொதுமக்களுக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின் போது அவர் இவ்வாறு தெரிவித்தார். பொலிஸ், பொதுமக்கள் நல்லுறவு பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட இக்கலந்துரையாடலில் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

ஒருவன் பிரச்சினையில் ஈடுபடும் போது அவனுக்குத் தண்டனையைப் பெற்றுக்கொடுப்பது மட்டுமே சமூகத்தினுடைய வேலையாக இருக்கக்கூடாது. பிரச்சினையின் ஆழத்தினையும் அதனுடைய தாக்கத்தினையும் அவனுக்கு எடுத்துக்கூறுவதனால் சம்பந்தப்பட்ட நபர் பிரச்சினைகளில் ஈடுபடுவதை தவிர்த்துக்கொள்ளமுடியும்.

நாட்டின் எதிர்காலம் கல்வி கற்கும் மாணவர்களின் கையிலேயே உள்ளது. எனவே அவர்கள் சுதந்திரமாக நடமாடி கல்விகற்கக்கூடிய சூழல் காணப்படவேண்டும்.

பெற்றோர் தமது பிள்ளைகளை சிறந்த முறையில் வழிநடத்திச் செல்ல வேண்டும். சிறந்த வழிநடத்தலின் மூலமே சிறந்த சமூகத்தைக் காணமுடியும். சிறுவர்கள் கட்டாயம் கல்வி கற்க வேண்டுமென சர்வதேச ரீதியில் சொல்லப்படுகின்றது. அந்தவகையில் சிறுவர்களைப் பாடசாலைக்கு அனுப்பவேண்டும். அதன் பின்னர் 14 வயதிலிருந்து பிள்ளைகளின் நடவடிக்கையைக் கவனிக்க வேண்டும். மாணவர்கள் பாடசாலை சென்றுவந்தபின்னர் பாடசாலையில் என்ன செய்துள்ளனர் என்பதை பார்வையிடவேண்டும். இவ்வாறு பெற்றோர் கவனமெடுக்காது விட்டால் மோசமான சமூகம் உருவாகுவதற்கு பெற்றோரும் காரணமாகிவிடுகின்றனர்.

மதுபோதையின் காரணமாக பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுவதாக இனங்காணப்பட்டுள்ளது. மதுவுக்கு அடிமையானால் பின்னர் மதுவின்றி எதனையும் செய்யமுடியாது போய் விடுகின்றது. அப்போது மதுவினை பாவித்துக்குற்றங்களில் ஈடுபடுகின்ற நிலையுள்ளது.

இந்நிலையில் மக்களின் நன்மை கருதி வவுனியா, மன்னாரில் ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திலும் தமிழ்மொழி தெரிந்த 4 பொலிஸாரை நியமிக்க நடவடிக்கை எடுத்து வருகின்றேன். நீங்கள் எங்களின் கடவுள். நாங்கள் உங்களின் சேவகர்கள். நாங்கள் உங்களுக்கு சேவை செய்வதற்கு உங்களின் ஒத்துழைப்பு எமக்கு இன்றியமையாதது என அவர் மேலும் தெரிவித்தார். (அ-9-266)

# சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கந்தர்மடம் ஆத்திசூடி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 14ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து திருவிழா நடைபெற்று வருகின்றது.

நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு சங்காபிசேகமும் மறுநாள் புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு திருவூஞ்சலும் நடைபெற்று விநாயகப் பெருமான் திருவீதியுலா வருதலும் நடைபெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (அ-9)

# தபால் வாக்குப்பதிவை கண்காணிக்கக் குழு

(கொழும்பு)

மூன்று மாகாண சபைகளின் தேர்தலை முன்னிட்டு வடக்கில் அஞ்சல் மூல வாக்களிப்புப் பணிகள் தொடர்பில் ஆராய்வதற்கு 150 அதிகாரிகளை அங்கு அனுப்புவதற்கு தேர்தல்கள் செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

குறித்த அதிகாரிகள் நேற்று வடக்கிற்கு அனுப்பப்பட்டுள்ளதாக மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கலைக்கப்பட்ட மூன்று மாகாண சபைத் தேர்தல்கள் தொடர்பில் இன்றும் நாளையும் அஞ்சல் மூல வாக்குப் பதிவுகள் இடம்பெறவுள்ளன.

இதன்போது அஞ்சல் மூல வாக்குப் பதிவுகளை மேற்கொள்ளத் தவறுபவர்களுக்கு எதிர்வரும் 7ஆம் திகதி வாய்ப்பளிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். (எ-8)

# தேசிய மருந்து கொள்கையை நடைமுறைப்படுத்துவதில் தாமதம்

## சுகாதார சேவைகள் சங்கத் தலைவர் தெரிவிப்பு

தேசிய மருந்து கொள்கையை நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்டுள்ள தாமதம் காரணமாக நாடெங்கிலும் உள்ள வைத்தியசாலைகளில் மருந்து பொருட்களுக்கும் வைத்திய உபகரணங்களுக்கும் தட்டுப்பாடுகள் நிலவுவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அகில இலங்கை சுகாதார சேவைகள் சங்கத்தின் தலைவர் காமினி குமாரசிங்க இதனைத் தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வைத்தியசாலைகளில் பல தொழில்நுட்பம்சார்ந்த கருவிகள் மருந்துப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

முறையான சுகாதார கொள்கை ஒன்று பேணப்படாமையே இதற்கான காரணம். இதனால் நோயாளர்களுக்கு பல்வேறு அசௌகரிங்கள் ஏற்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# தமிழகத்தில் போராட்டம்

(சென்னை)

தமிழகம், நீலகிரி மாவட்டம் வெலிங்டன் இராணுவ முகாமில் இலங்கை இராணுவ அதிகாரிகள் இருவருக்கு பயிற்சி அளிப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து மேற்படி இராணுவ முகாமை முற்றுகையிட்டு போராட்டம் நடத்த முயன்ற 85 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கோவை மாவட்ட தந்தை பெரியார் திராவிட கழகத்தினரே மேற்படி இராணுவ முகாமை முற்றுகையிட முயன்ற போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தங்கள் கட்சிக் கொடிகளை ஏந்தி இலங்கை இராணுவம் மற்றும் இந்திய மத்திய அரசு ஆகியவற்றைக் கண்டித்து கோஷங்களை எழுப்பிய நிலையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டதாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## சுறுசுறுப்பாகத் திகழுங்கள்



நம்முடைய உடலையும் அறிவையும் ஞானத்தையும் பலவீனமாக்கும் எதையும் விஷம் என ஒதுக்கிவிட வேண்டும்.

பிறருடைய தவறு எவ்வளவு கெட்டதாக இருந்தாலும் அதுபற்றிப்பேசக்கூடாது.

அப்படிச் செய்வதனால் நீங்கள் அவனுக்குக் கேடு செய்வதுடன் உங்களுக்கும் கேடு ஏற்படுத்திக்கொள்வீர்கள்.

தன்னைஅடக்கப்பழகிக்கொண்டவன் வேறு எதற்கும் வசப்படமாட்டான். அவனே உலகில் நன்றாக வாழத் தகுதியுள்ளவன்.

எதிலும் பரபரப்புத் தேவையில்லை. ஆனால் சுறுசுறுப்பு எப்போதும் தேவை.


கீழ்ப்படிதல்,முயற்சியுடைமை, செயலாக்கம் ஆகிய மூன்றும் இருந்தால் ஒருவன் வெற்றிபெற்று முன்னேறுவதை எதனாலும் தடுக்கமுடியாது.

உலகத்தில் உயர்ந்த செயல்கள் அனைத்தையும் சாதித்தவர்கள் உங்களையும் என்னையும் போன்று மனிதர்களே. வீரம் மட்டுமிருந்தால் நம்மைப்போன்ற மனிதர்கள் எதையும் செய்து முடிக்க முடியும்.

இயந்திரங்கள் மனித சமூகத்திற்குச் சுகத்தைக் கொடுத்தவையுமல்ல, கொடுக்கப்போவதுமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அளவெட்டி ஞானவைரவர் விளையாட்டுக்கழகத்தின் விளையாட்டு முடிவுகள்



(வேலணை)

அளவெட்டி ஞானவைரவர் விளையாட்டுக் கழகத்தின் 13 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு சைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டம் என்பன நடைபெற்றது. சிறுவர்களுக்கான சைக்கிளோட்டத்தில் முதலாம் இடத்தினை து.றயிதனும் இரண்டா மிடத்தை இ.யெனிஸ்ரனும் மூன்றாமிடத்தை க.பமிலும் பெற்றனர். 50 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான சைக்கிளோட்டத்தில் முதலாம் இடத்தினை ஸ்ரீடிலக்சனும் இரண்டாம் இடத்தினை க.கமலேஸ்வரனும் மூன்றாம் இடத்தை தெ.இராமேஸ்வரனும் பெற்றனர். 50 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான சைக்கிளோட்டத்தில் முதலாமிடத்தினை அ.துரைராசாவும் இரண்டாமிடத்தை ஐ.சோமசுந்தரமும் மூன்றாமிடத்தை வை.கைலை நாதனும் பெற்றனர். மரதன் ஓட்ட நிகழ்வில் முதலாம் இடத்தினை பிரதீபனும் இரண்டாமிடத்தை பிரணவனும் மூன்றாமிடத்தை சி.நிரூபனும் பெற்றனர்.

## மேசைப்பந்தாட்ட பயிற்சி முகாம்



யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கான மேசை ப்பந்தாட்ட பயிற்சி முகாம் நேற்று முன்தினம் யாழ்ப்பா ணம் மத்திய கல்லூரி உள்ளக விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகியது.

யாழ். மாவட்ட பாடசாலைகள் மேசைப்பந்தாட்ட சங்கமும் இலங்கை பாடசாலைகள் மேசைப்பந்தாட்ட சங்கமும் இணைந்து இந்தப் பயிற்சி முகாமை ஏற்பாடு செய்துள்ளன.

தொடர்ந்து நான்கு நாட்கள் நடைபெறவுள்ள இந்த பயிற்சி முகாமில் 12, 15, 17, 19, 21 வயது பிரிவுகளைச் சேர்ந்த வீர வீராங்கனைகள் எழுபத்தைந்து பேருக்கு மேல் கலந்து கொண்டுள்ளார்கள்.

இவர்களுக்கான பயிற்சிகளை இலங்கை மேசைப்பந்தாட்ட அணியின் தலைவரும் மேசைப்பந்தாட்டத்தில் இலங்கையில் முதலாம் இடத்தில் இருப்பவருமான றொசான் சிறிசேன நடத்துகின்றார்.




## ஆதிசக்தி A வெற்றி

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அனுமதியுடன் கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை ஆதரவில் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் பருத்தித்துறை லீக் இற்கு உட்பட்ட கழகங்கள் மோதின.

இப்போட்டிகள் யாவும் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.நேற்று முன்தினம் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற போட்டியில் ஆதிசக்தி A அணியை எதிர்த்து இமையாணன் மத்தி விளையாட்டுக்கழகம் மோதியது. இதில் 2:1 என்ற கோல்கணக்கில் ஆதிசக்தி A அணி வெற்றி பெற்றது.(3)

# தேசிய உதைபந்தாட்ட அணிக்கு வடமாகாண வீரர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும்


## விளையாட்டுத்துறை அமைச்சு நடவடிக்கை



வடமாகாண கௌரவ ஆளுநரின் வழிகாட்டலில் கௌரவ விளையாட்டு அமைச்சரினால் தேசிய உதைபந்தாட்ட அணிக்குள் வடமாகாண வீரர்களைத் தெரிவு செய்ய வேண்டும் என்ற நோக்கில் ஒவ்வொரு பிரதேச செயலகங்களுக்கும் வழங்கப்பட்ட தலா ரூ.10000/ காசோலை வழங்கும் நிகழ்வு மன்னார் மாவட்ட செயலகத்தில் கடந்த 23 ஆம் திகதி காலை 10 மணிக்கு மேலதிக அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்றது.

வவுனியா மாவட்ட செயலகத்தில் கடந்த 23 ஆம் திகதி மாலை 2.30 மணிக்கு அரசாங்க அதிபர் ஹரிசந்திர தலைமையில் நடைபெற்றது.

வவுனியா அரச அதிபர் உரையாற்றுகையில்,




தேசியமட்ட போட்டிகளில் பங்குபற்றுவதற்கு அனைவரும் ஒன்றாக இணைந்து முயன்று அடைய வேண்டும் என கூறினார்.


அதே தினத்தில் இரு மாவட்டங்களிலும் கடமையாற்றும் மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர், பயிற்றுநர்கள் மற்றும் விளையாட்டு உத்தி யோகத்தர் ஆகிய உத்தியோகத்தர்களுக்கு அவர்களை ஊக்குவிக்கும் முகமாக வடமாகாண கௌரவ ஆளுநரின் அறிவுறுத்தலுக்கமைவாக அலுவலக பை மற்றும் சப்பாத்து என்பன வழங்கிக் கௌரவிக்கப் பட்டனர். இந்நிகழ்வுகள் வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நியூசிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட்

# இந்தியா இன்னிங்ஸ் வெற்றி





இந்தியா-நியூசிலாந்து அணிகள் மோதிய முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி ஹைதராபாத்தில் நடைபெற்றது.

இதில் இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 438 ஓட்டங்கள் குவித்தது. இளம் வீரர் புஜாரா 159 ஓட்டங்கள் குவித்தார்.

இந்திய சுழற்பந்தின் அபாரமான பந்து வீச்சால் நியூசிலாந்து 159 ஓட்டங்களுக்குள் சுருண்டு பலே ஒன் ஆனது. அஸ்வின் 6 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

தொடர்ந்து 2-வது இன்னிங்ஸை ஆடிய நியூசிலாந்து நேற்றுமுன்தினம் 3-ம் நாள் ஆட்டத்தின் முடிவில் ஒரு விக்கெட் இழப்புக்கு 41 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

மக்கலம் 16 ஓட்டங்களுடனும், வில்லியம்ஸன் 3 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நேற்றைய 4ஆம் நாள் ஆட்டமும் மழையால் பாதிக்கப்பட்டது.

பின் மழை நின்றவுடன் களமிறங்கிய மக்கலம், வில்லியம்ஸன் ஜோடி சற்று நிலைத்து நின்று ஆடியது.

மக்கலம் 52 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஓஜாவின் பந்தில் வெளியேற அவரைத் தொடர்ந்து களமிறங்கிய ரெய்லர் 4 ஓட்டங் களுடனும், வில்லியம்ஸன் 52 ஓட்டங்களுடனும், பிளெய்ன் 11, பிராங்லின் 5 ஓட்டங்கள் என ஆட்டமிழந்து வெளியேற 73 ஓவர்கள் முடிவில் 146 ஓட்டங்கள் எடுத்து 6 விக்கெட்டுகளை இழந்து பரிதாபமான நிலையில் இருந்தது.

இவர்களை அடுத்து பிரெஸ்வெல் 7 ஓட்டங்களுடனும், வான்விக் 13 ஓட்டங்ககளுடனும்,போல்ட், மார்டின் ஓட்டங்கள் எதுவும் எடுக்காமல் அடுத்தடுத்து வெளியேறினர்.

இறுதியில் நியூசிலாந்து 164 ஓட்டங்களுக்குள் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.


இதனால் இந்தியா ஒரு இன்னிங்ஸ் மற்றும் 115 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இந்திய அணி தரப்பில் அஸ்வின் 6 விக்கெட்டுகளையும் ஓஜா 3 விககெட் டுகளையும், உமேஸ் யாதவ் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தமிழக வீரர் அஸ்வின் 2 இன்னிங்ஸும் சேர்த்து 12 விக்கெட்டுகள் வீழ்த்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

2போட்டிகள் கொண்ட இத் தொடரில் இந்தியா 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

## நகினஹிரவுக்கு எதிராக உத்துர அணிக்கு வெற்றி



சிறிலங்கா பிறிமியர் லீக்கின் நேற்றைய முதல் போட்டியில் உத்துர ருட்ராஸ் அணிவெற்றிபெற்றுள்ளது.

நகினஹிர நாகாஸ் அணிக்கு எதிராக இடம்பெற்ற போட்டியில் உத்துர ருட்ராஸ் அணி 15 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானத்தில் இடம்பெற்ற இப் போட்டியில், முதலில் துடுப்பெடுத்தாடிய உத்துர ருட்ராஸ் அணி 20 ஓவர்ககளில் 6 விக்கெட்டுகளை இழந்து 149 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் உத்துர ருட்ராஸ் அணி சார்பாக சாமர கப்புக்கெதர 43 ஓட்டங்களையும், றொப் குயீனி 24 ஓட்டங்களையும், டிலோன் டு பிறீஸ் 19 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் நகினஹிர நாகாஸ் அணி சார்பாக சமிந்த எரங்க 32 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் அஞ்சலோ மத்தியூஸ், சுராஜ் ராண்டீவ், அஜந்த மெண்டிஸ், சச்சித் பத்திரண ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

150 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய நகினஹிர நாகாஸ் அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 134 ஓட்டங்களைப் பெற்று 15 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

துடுப்பாட்டத்தில் நகினஹிர நாகாஸ் அணி சார்பாக கொலின் டீ கிரான்டொமே 43 ஓட்டங்களையும் சுராஜ் ராண்டீவ் ஆட்டமிழக்காமல் 27 ஓட்டங்களையும், உதர ஜெயசுந்தர 22 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் உத்துர ருட்ராஸ் அணி சார்பாக நவீட் உல் ஹசன் 21 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும், டிலோன் டு பிறீஸ், சொஹானா பொரலெஸ்ச, ஜகான் முபாரக் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்ட நாயகனாக உத்துர ருட்ராஸ் அணியின் நவீட் உல்ஹசன் தெரிவானார்.

இதேவேளை இன்று ஊவா அணிக்கும் நகினஹிர நாகாஸ் அணிக்கும் இடையில் இரவு 8 மணிக்கு ஆர்.பிரேமதாச விளையாட்டரங்கில் இடம்பெறும் போட்டியுடன் சிறிலங்கா பிறிமியரின் லீக் போட்டிகள் முடிபடைகின்றன.

முதலாவது அரையிறுதிப் போட்டி நாளையும், 2-வது அரையிறுதிப் போட்டி நாளை மறுதினமும் ஆர் பிரேமதாச மைதானத்தில் இரவு 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

இறுதிப் போட்டி எதிர்வரும் 31ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு 8 மணிக்கு ஆர்.பிரேமதாச மைதானத்தில் நடைபெறவுள்ளது.

## 3-வது முறை வென்று சாதனை

# இளைஞர் உலகக் கிண்ண கிரிக்கெட் இந்தியா சம்பியனானது



இளைஞர் உலகக் கிண்ண தொடரில் இந்திய அணி சம்பியன் பட்டம் வென்றுள்ளது.

இறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியாவை 6 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

அவுஸ்திரேலியாவில் 19 வயதுக்குட்பட்டவர்களுக்கான உலகக் கோப்பை கிரிக்கெட் தொடர் நடந்தது.

நேற்று நடந்த இறுதிப் போட்டியில் முதலில் ஆடிய அவுஸ்திரேலிய அணி 50 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 225 ஓட்டங்கள் எடுத்தது.

அவுஸ்திரேலியா சார்பில் அணித் தலைவர், வில்லியம் போசஸ்டோ 87 ஓட்டங்கள் எடுத்தார்.

பந்துவீச்சில் இந்தியாவின் சந்தீப் சர்மா 4 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

பின்னர் களமிறங்கிய இந்திய அணிக்கு அணித் தலைவர் உன்முக்த் சந்த்(111), சமித் பட்டேல் (62) கைகொடுக்க 47.4 ஓவர்களில் 4 விக்கெட் இழப்பிற்கு 227 ஓட்டங்கள் எடுத்து வெற்றிபெற்றது.

இதன்மூலம் இந்திய அணி 3ஆவது முறையாக (1999/2000,2007/08, 2012)சம்பியன் பட்டம் வென்றது.

## யுஎஸ் ஓபன் இன்று ஆரம்பம்




பிரபல கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் போட்டியான யுஎஸ் ஓபன், நியூயோர்க் நகரில் இன்று தொடங்குகின்றது.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நட்சத்திர வீரர் ரபேல் நடால் (ஸ்பெயின்) காயம் காரணமாக விலகியுள்ளதால், பட்டம் வெல்ல நம்பர் 1 வீரர் ரோஜர் பெடரர் (சுவிஸ்), நோவாக் ஜோகோவிக் (சேர்பியா), ஒலிம்பிக் சம்பியன் அன்டி முர்ரே (இங்கிலாந்து) ஆகியோரிடையே கடும் போட்டி இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மகளிர் ஒற்றையர் பிரிவில் நட்சத்திர வீராங்கனை செரினா, வீனஸ், ஷரபோவா, அசரென்கா, லீனா, ஸ்டோசர், குவிற்டோவா, வோஸ்னியாக்கி, ஏஞ்சலிக் ஹெர்பர் ஆகியோர் களமிறங்குவதால் போட்டி சுவாரஸ்யமாக இருக்கும். மகளிர் இரட்டையர் மற்றும் கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் சானியா மிர்ஷாவும், ஆண்கள் இரட்டையர் மற்றும் கலப்பு இரட்டையர் பிரிவுகளில் லியாண்டர் பயஸ், மகேஷ் பூபதியும் பங்கேற்கவுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எக்காலத்திற்குமே பெருமை மிக்க அமெரிக்க நாயகன் ஆம்ஸ்ரோங்

## ஒபாமா புகழ் அஞ்சலி

நிலவில் கால்பதித்த முதல் மனிதரான நீல் ஆம்ஸ்ரோங் அவர் வாழ்ந்த காலத்தில் பார்க்கையில் மட்டுமல்லாமல் எக்காலத்துக்குமே மாபெரும் அமெரிக்க நாயகன் தான் என அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா புகழஞ்சலி செலுத்தியுள்ளார்.

82 வயதான ஆம்ஸ்ரோங் தனக்கு நடந்த இருதய அறுவை சிகிச்சைக்குப் பின்னர் உடல் நிலை மோசமடைந்து காலமானார்.

1969 ஆம் ஆண்டு அப்போலோ 11 என்ற சரித்திர சிறப்பு மிக்க விண்வெளிப பயணத்தில் ஆம்ஸ்ரோங்குடன் நிலவில் கால் பதித்திருந்த பஸ் அல்ட்ரின், ஆம்ஸ்ரோங் ஒரு மிகச் சிறப்பான விண்வெளி விமானி என்றும் அணியின் கட்டளைத் தலைவர் என்றும் கூறினார்.

நீல் ஆம்ஸ்ரோங் வெளிப்படுத்திய சேவை, சாதனை, எளிமை ஆகியவற்றை அமெரிக்கர்கள் மதித்துப் பின்பற்றவேண்டும் என அவரது குடும்பம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அடுத்த தடவை வானம் தெளிவாக இருக்கும் ஒரு இரவுப் பொழுதில் நீங்கள் வெளியே போகையில் நிலவைப் பார்க்கும் போது, நீல் ஆம்ஸ்ரோங்கை ஒருமுறை மனதில் நினைத்து கண் சிமிட்டுங்கள் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-8)

## சென்னையில் வான்...

சில நாட்களுக்கு முன்பு சென்னை சென்றுள்ளனர்.

அவர்கள் சென்னையில் சுற்றுலா வான் ஒன்றைவாடகைக்குஎடுத்துதமிழகத்தின்பல்வேறு பகுதிகளுக்கு சென்று சுற்றிபார்த்து வந்தனர்.

வானை சென்னையைச் சேர்ந்த சாரதி ஓட்டிச் சென்றார். நேற்று முன்தினம் இறுதியாக கொடைக்கானலைச் சுற்றிபார்த்துவிட்டு சென்னைக்கு திரும்பிக்கொண்டிருந்தனர்.

நேற்று அதிகாலை 5.30 மணியளவில் இந்தவான் உளுந்தூர் பேட்டை அருகே ஷேக் உசேன் பேட்டை என்ற இடத்தில் வந்த போது வான் சாரதி தூங்கிவிட்டதாக கூறப்படுகிறது.

இதனால் வான் நிலை தடுமாறி வீதியில் கவிழ்ந்து போனது. இதில் வான் சாரதி லாசர் மற்றும் சுற்றுலாப் பயணிகள் 13 பேர் உட்பட 18 பேர் படுகாயமடைந்தனர்.

இது பற்றி தகவல் அறிந்ததும் எடைக்கல் பொலிஸ் சப்இன்பெஸ்டர்கள் கிருஸ்ணமூர்த்தி, ஜெயசீலி மற்றும் பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றனர். காயமடைந்த அனைவரையும் மீட்டு அன்புலன்ஸ் மூலம் உளுந்தூர் பேட்டை அரசு வைத்திய சாலைக்கு அனுப்பி வைத்தனர்.

பின்னர் அங்கிருந்து மேற் சிகிச்சைக்காக முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இந்த விபத்துக் குறித்து பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணைகள் நடத்தி வருகிறார்கள். (எ-8)

## கோபுரத்தில் ஏறி...

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாகவும் குறித்த இளைஞன் தெரிவித்துள்ளார்.

சம்பவத்தையடுத்து பிரதேசவாசிகள் மற்றும் பொலிஸார் இணைந்து குறித்த இளைஞனை கீழே இறக்கியதுடன் அவரை மருத்துவ பரிசோதனைக்காக ஆனமடுவ வைத்திய சாலையில் அனுமதித்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

22 வயதான மேற்படி இளைஞனை இன்று திங்கட்கிழமை நீதிமன்றில் ஆஜர் படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக ஆனமடுவப் பொலிஸார் தெரிவித்தனர். (எ-11)

## அமைச்சுப் பதவி...

லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமும் கலந்துகொண்ட இக் கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றிய பஷீர் சேகு தாவூத்,

நான் பிரதி அமைச்சர் பதவியை ராஜினாமா செய்தேன் என்பதற்காக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் தனது அமைச்சர் பதவியை ராஜினாமா செய்ய வேண்டும் என யாரும் கூற முடியாது.

ஏன் எனில் இன்று முஸ்லிம்களுக்கு எந்தப்பிரச்சினை ஏற்பட்டாலும் அதை அரசாங்கத்துடனும் ஜனாதிபதியுடனும் தான் பேசித்தீர்க்க வேண்டும்.

அது பள்ளிவாசல் பிரச்சினையாக இருந்தாலும் சரி அல்லது முஸ்லிம்களுக்கு வேறு எந்தப்பிரச்சினையாக இருந்தாலும் சரி அதை இன்றைஜனாதிபதியிடம்தான்பேசித்தீர்க்கவேண்டும்.

அன்று ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த போது முஸ்லிம்களின் பிரச்சினைகளை அவரிடம் பேசினோம். சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க ஜனாதிபதியாக இருந்தபோது முஸ்லிம்களின் பிரச்சினைகளை அவரிடம் பேசினோம்.

தற்போது மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருக்கிறார். அவரிடம் முஸ்லிம்களின் பிரச்சினைகளை பேசுவதற்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரின் அமைச்சர் பதவியைப் பயன்படுத்த வேண்டும்.

ஒரு அமைச்சராக இருப்பவரால் ஜனாதிபதியிடம் இலகுவாக நேரத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் அந்தவகையில் சிறிலங்கா முஸ்லிம்காங்கிரஸ் தலைவர் தனது அமைச்சர் பதவியை ராஜினாமா செய்யக் கூடாது என்பதே எனது கருத்து என்றார். (எ-8)

## கிழக்குத் தேர்...

முடிபடைந்துள்ளது.

இந் நிலையில் அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களுக்கான வாக்குச்சீட்டுக்கள் 28 அங்குலம் நீளம் கொண்டதாகவும் திருகோணமலை மாவட்டத்திற்கான வாக்குச் சீட்டுக்கள் 26 அங்குலம் நீளம் கொண்டதாகவும் அச்சிடப்பட்டுள்ளன.

அம்பாறை 16 அரசியல் கட்சிகளும் 18 சுயேட்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன. மட்டக்களப்பில் 16 அரசியல் கட்சிகளும் 16 சுயேட்சைக்குழுக்களும் போட்டியிடுகின்றன.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களிலே அதிகளவிலான அரசியல் கட்சிகளும்சுயேட்சைக்குழுக்களும் போட்டியிடுக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-8)

## எம்.பிக்களின்...

இவ் மாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (விரிவான செய்தி உள்ளே...) . (எ-8)

## தமிழ் இன விடுதலை...

என நாடாளுமன் உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்தார். கிழக்குமாகாண சபையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து மட்டக்களப்பு, கல்லடி, பேச்சிஅம்மன் ஆலய முன்றலில் இடம் பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர் வருகிற மாதம் ஜெனிவாவில் மிக முக்கியமான இடைவாதம் ஒன்று தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட அழிவின் ஒரு அத்தியாயமாக நடக்கவிருக்கின்றது.

கிழக்கு மாகாண சபையை ஒருவருடங்களுக்கு முன்பாகவே வருகின்ற செப்ரம்பர் மாதத்திலேயே நடத்தி அதன் திசைகளை திருப்புதற்காக அரசாங்கம் ஒரு தேர்தலை அறிவித்து அதிலே பங்குபற்ற வேண்டிய நிர்ப்பந்தமான சூழலிலேயே நாங்கள் இருக்கின்றோம்.

ஜெனிவாவினுடைய தீர்மானத்தின் இறுதிக்கட்டம் அடுத்த வருடம் மார்ச் மாதம் நடைபெறவிருகின்ற நிலையில் அனைவரையும் திசை திருப்புவதற்காக வடமாகாண சபைத் தேர்தலை அரசு நடத்தினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

நாங்கள் தமிழீழத்திற்காக போராடி ஆயிரம் ஆயிரம் உயிர்களுக்கு மண் அள்ளிப் போட்டு, பூப்போட்டு தரவையிலும்தாண்டி அடியிலும் கோமாரியிலும் ஆயிரம் உயிர்களை புதைத்துவிட்டு வடக்கும் கிழக்கும் இணைந்திருந்த தாயக மண்ணில் பிரிக்கப் பட்ட கிழக்கு மாகாணத்தில் அதிகாரங்களை பெறுவதற்காக இங்கு கூடியிருக்கின்றோம்.

நாங்கள் இந்த தேர்தலில் பங்குபெறா விட்டால் சில சக்திகள் இந்த இடங்களில அமர்ந்து கொள்ளும் இதைத் தவிர்ப்பதற்காகவே நாங்கள் இந்த தேர்தலில் போட்டியிடுகின்றோம்.

வடக்குக் கிழக்கு என்பது வரலாற்று ரீதியாக சரித்திர பூர்வமாக எங்களது தாயக மண்ணாகும். மூன்று ஜே.வி.பி. உறுப்பினர்கள் நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கின் காரணமாக மிக எளிமையாக பிரிக்கப்பட்ட வடக்குக் கிழக்கின் கிழக்கு மாகாணத்தில் தனி ஒரு தேர்தலுக்கு நாங்கள் முகம் கொடுக்க இருக்கின்றோம்.

இத் தேர்தலில் வென்று நாங்கள் இந்த மக்களுக்கு என்ன செய்யப் போகிறோம் என்பது உங்கள் மத்தியிலுள்ள பலமான கேள்வியாகும் என்றார். (எ-8)

## மனித உரிமை செயற்...

மனிதவுரிமை மேம்பாட்டுக்காக ஐக்கிய நாடுகள் அமைப்பு மற்றும் அதன் முகவர் நிறுவனங்களுடன் தொடர்புகளை பேணுவோர் மீது பிரயோகிக்கப்படும் அழுத்தங்கள் தொடர்பில் ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூனிடம் நவநீதம்பிள்ளை அண்மையில் அறிக்கையொன்றை சமர்ப்பித்திருந்ததாகவும் அந்த அறிக்கையிலேயே இலங்கை மீது மேற்படி குற்றச்சாட்டை நவநீதம்பிள்ளை முன்வைத்திருப்பதாகவும் கூறப்படுகின்றது.

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைகள் பேரவையின் 19ஆம் அமர்வுகளின் போது இலங்கைக்கு எதிராக அமெரிக்கா தலைமையிலான நாடுகள் தீர்மானம் நிறைவேற்றிய காலப்பகுதிக்கு முன்னரும் அதன்பின்னரும் இந்த நிலைமை நீடிப்பதாக அந்த அறிக்கையில் அவர் சுட்டிக்காட்டியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனிதவுரிமைச் செயற்பாட்டாளர்களுக்கு கொடுக்கப்படும் பாரிய அளவிலான அழுத்தம், சுனிலா அபேசேகர, சந்தியா எக்னெலிகொட, நிமல்கா பெர்னாண்டோ போன்றோர்கள் மீது அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டமை, குறிப்பாக பொதுமக்கள் தொடர்பு அமைச்சர் மேர்வின் சில்வா, மனிதவுரிமை செயற்பாட்டாளர்களுக்கு எச்சரிக்கை விடுத்தமை என்பவை குறித்தும் நவநீதம்பிள்ளை அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளதாகவும்,

அதேபோன்று அல்ஜீரியா, பஹ்ரெய்ன், பெலாரஸ், சீனா, கொலம்பியா, ஈரான், கஸகஸத்தான், லெபனான், மலாவி, சவூதிஅரேபியா மற்றும் சூடன் ஆகிய நாடுகளிலும் மனிவுரிமை செயற்பாடுகள் குறித்தும் அவ் அறிக்கையில் நவநீதம்பிள்ளை குற்றம்சாட்டியுள்ளார். (எ-8)

## ஜனாதிபதி...

வேளை, இலங்கையின் மறைந்த முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டார நாயக்க கலந்து கொள்வதற்காக அம்பாறை பொது விளையாட்டு மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த மேடை ஒன்றும் இவ்வாறு உடைந்து வீழ்ந்ததும் அதன் பின்னரான தேர்தலில் அவரது கட்சி படுதோல்வியைத் தழுவியதுடன் அரசியலில் அவரின் செல்வாக்கு முற்றாக மழுங்கடிக்கப்பட்டதும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

இச்சம்பவத்தை நினைவு கூர்ந்த அம்பாறை வாழ் மக்கள் மகிந்த ராஜபக்ஷவுக்கும் இவ்வாறான நிலை ஏற்படப் போவதாக பேசி வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (எ-8)

## காங்கேசன்...

படையின் பேச்சாளர் குறிப்பிட்டார்.

காங்கேசன்துறையிலிருந்து நேற்று காலை வெளியேற முனைந்த சதெவ் புத்தா என்ற படகில் 5 பெண்களும் இருந்துள்ளனர்.

வடக்கு, கிழக்கு மற்றும் பல பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, நேற்று முன்தினம் இரவு திருகோணமலை கடற்பிராந்தியத்தில் வைத்து 12 தமிழர்களும் 12 முஸ்லிம்களும் அவுஸ்திரேலியா நோக்கி செல்ல முற்பட்ட போது கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். (எ-8)

## கிறிஸ்மஸ்...

பாதுகாப்பற்ற படகுப் பயணங்கள் மூலம் அவுஸ்திரேலியாவுக்குள் வர முயற்சிப் போரை தடுத்து வைப்பதற்காக நவ்றூ மற்றும் பப்புவா நியுகினி ஆகிய இடங்களில் விசாரணை மையங்களை திறப்பதற்கு அண் மையில் அவுஸ்திரேலிய நாடாளுமன்றம் அனுமதி வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (எ-8)


**பார ஊர்திகள் தேவை**

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு, புத்தளம், அனுராதபுரம், கெப்பரிகொலாவ, பதவியா, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு போன்ற இடங்களுக்கு சீமெந்து ஏற்றிச் செல்ல பார ஊர்திகள் தேவை. ஏற்றிச் செல்லும் இடங்களிற்கேற்ப கூலி வழங்கப் படும்.

தொடர்புகளுக்கு:-
Eswarabagawaan & Company,
No. 91, Stanly Road, Jaffna.
T.P : 0774787690/ 0773948917/ 021-2227603
(283)

**கிரிஸ்டல் சென்ரர் நெல்லியடி**
A/L 2014
வெப்ப இரசாயனம்
ஆரம்பம் - 2012.08.30 வியாழன்
பி.ப. 5.00 - 6.00 வரை
S.சுரேஸ்குமார்
(அ-838)

**மணல் விற்பனைக்குண்டு**
கட்டிட வேலைக்கும் பூச்சு வேலைக்கும் சிறந்த மணல் மண் இப்போது உங்கள் இடத்திற்கே கொண்டு வந்து தரப்படும்.
4 டிரக்டர் - 19,500/-
தொடர்புகளுக்கு
ரமேஸ்
0722694462
(295)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.08.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.